படைப்பு

ஊற்று-3 | நதி-8 | டிசம்பர்-2020 | திங்களிதழ்

ISSN : 2582-4015

www.padaippu.com

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

படைப்பு இலக்கிய விருதுகள்

2020

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-3 | நதி-8 | டிசம்பர் 2020

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
அல்தாஃப் சலீம்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **படைப்பு இலக்கிய விருதுகள் 2020** -பக். 05
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..**
  - கடிதங்கள் -பக். 11
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 16
- **கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி 2020**
  - முடிவுகள் -பக். 29
- **மனநிலைக் குறிப்புகள் 06**
  - ஆதிரன் -பக். 40
- **கண்களுக்குத் தரிசனம் தரும் ஆரண்யம்**
  - வீரசோழன். க.சோ.திருமாவளவன் -பக். 45
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 50
- **தி க்யூரியஸ் கேஸ் ஆஃப் பென்ஜமின் பட்டன்**
  - கவிஜி -பக். 55
- **மாய வித்தைக்காரன் கிம் கி டக்**
  - ராம் பெரியசாமி -பக். 58

சிறுகதைகள்

- **வைர அட்டிகை**
  - பிரெஞ்சு மூலம் : கீ டு மோப்பஸான்
  - ஆங்கிலத்தில் : குட்டென்பெர்க் திட்டத்தின் மொழிபெயர்ப்புப் பதிப்பு
  - தமிழில் : கார்குழலி -பக். 21
- **பார்வையாளர் அரங்கு**
  - பாரதிநிவேதன் -பக். 47
- **பரிசுத்தம்**
  - தமிழ்ச்செல்வன் -பக். 61

கவிதைகள்

- **பிருந்தாசாரதி** -பக். 14
- **மௌனன் யாத்ரிகா** -பக். 30
- **தங்கேஸ்** -பக். 31
- **பிரபுசங்கர்.க** -பக். 32
- **ராம் பெரியசாமி** -பக். 33
- **கதிரவன் வீ** -பக். 34
- **அன்றிலன் குப்பிச்சிபுதூர்** -பக். 35
- **பி.கே.சாமி** -பக். 36
- **ஷெண்பா (மஞ்சு கண்ணன்)** -பக். 37
- **சே.தண்டபாணி தென்றல்** -பக். 38
- **மதுசூதன் எஸ்** -பக். 39
- **ஊர்மிளை**
  - கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் -பக். 53
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 5**
  - ஜின்னா அஸ்மி -பக். 60

தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' முப்பத்திரண்டாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

இந்தக் கொரானா காலகட்டம் எல்லாரையும் எல்லாவற்றையும் கை கழுவிய காலகட்டம். எனினும் படைப்புக் குழுமம் கவிஞர்களைக் கைவிடாமல் கவிதைகளுக்குக் களம் கொடுத்த காலகட்டமாக இருந்தது. காலத்திற்கேற்ற பொருண்மையில் 'கை கழுவிய காலம்' என்ற தலைப்பில் கவிக்கோ கவிதைப் போட்டியை நடத்தியது.

கை கழுவுதல் என்பது இக்காலகட்டத்தில் நேரடிப் பொருள், மரபுப் பொருள் என்னும் இரு நிலையிலும் வலுவான பொருண்மையுடன் திகழ்ந்தது. மேலும், வந்து குவிந்த கவிதைகளை நோக்கும்போதுதான் எத்தனை ஆதிக்கமானது அத்தொடர் எனப் புரிகிறது.

கழுவுதல் என்பது நீராலாகும். அந்த நீர் நம்மைக் கைகழுவி விட்டால்.. நீரற்றுப் போகும் ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தன் ஒற்றைக் கவிதையில் நிகழ்த்தியிருக்கிறார் மௌனன் யாத்ரிகா. எல்லாம் உலர்ந்துபோன சூழலில் சிக்கித் தவிக்கும் விவசாயி. 'ஏர் கலப்பையை உடைக்க ஊரில் கோடரிக்காக அலைந்த' அப்பாவின் துயரம் பல மடங்காய் மகனுக்குள் இறங்கியிருந்தது. காக்க வேண்டிய காலமும் கூட சேர்ந்து அழுதால் என்ன செய்ய? கவிதையின் அடர்த்தி அதனை முதல் இடத்தில் நிறுத்தியிருக்கிறது. வாழ்த்துக்கள் மௌனன் யாத்ரிகா.

ஒட்டுமொத்த உலகத்தின் மீதான விமர்சனமும் ஒற்றைக் கவிதையாய் உதித்திருக்கிறது தங்கேஸுக்கு. இதுதான் கொரானா காலகட்டம் மனித மனங்களுக்குள் புகுத்தியிருந்த உண்மை மனநிலை. அக உணர்வுகளின் மீதான புறத்தின் தாக்கமும் அதனால் தவித்துக் குழம்பும் எண்ணங்களும் கையறு நிலையும் காரணமாக யாரைச் சுட்டுவது என்றியலாத மயக்கமும் பீறிட்டெழுந்த கோபங்களும் என ஒரு காலகட்ட மனநிலைக்கான உதாரணக் கவிதை இது. அதனால்தான் பரிசுக்குரியதாகியிருக்கிறது. வாழ்த்துக்கள் தங்கேஸ்.

இப்படித்தான் கைகழுவிய காலங்களைக் கண்ணீர் துளிர்க்கச் சொல்லியிருக்கின்றன.. அத்தனை கவிதைகளும். கடின காலத்தைக் கூட கவிதைகளால் கடக்கவைத்த கவிஞர்கள் அனைவருக்கும் தகவு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

படைப்பு இலக்கிய விருதுகள் பெற்ற நூல் விவரங்கள் இவ்விதழில் வெளியாகியுள்ளன. 2019ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த நூல்களுக்குரிய நல் அங்கீகாரம் இவ்விருதுகள். ஒவ்வொரு பிரிவிலும் விருது பெற்ற நூலுடன் சிறப்புப் பரிசு பெற்ற நூல்களின் பட்டியலும் வெளியாகியுள்ளது. 2019ஆம் ஆண்டின் தன்னிகரற்ற நூல்கள் இவையெனத் துணிந்து கூறலாம். தம் தகுதியால் சிறப்பு பெற்ற படைப்பாளர்களுக்குத் தகவு வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறது.

கைகழுவிய காலம் கரைந்துபோய் இனி வரும் ஆண்டு கைகொடுக்கும் ஆண்டாக மலர விழையும் தகவு அனைத்து வாசகர்களுக்கும் தனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழின் தலைசிறந்த முன்னோடி ஆய்வாளர் தொ.பரமசிவன் அவர்களுக்கும் தன் அசாதாரணமான திரைமொழியால் வலிமையான படைப்புகள் தந்த கிம் கி டக் அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் இவ்இதழில் படைப்புகள் பிரசுரமாகியுள்ளன.

மேலும் கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள், கடிதங்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– ஆசிரியர் ■

படைப்பு இலக்கிய விருதுகள் 2020

வாழ்வின் மையமும் விளிம்புமாய் மிளிரும் புள்ளிகளை வார்த்தைகளாய்க் கடத்தும் இலக்கியங்கள் பண்பாட்டின் வேர்களாய் வரலாற்றை வெளிச்சம் கொள்ளச் செய்கின்றன. இலக்கிய உருவாக்கத்தின் அரும்பணியை உணர்ந்த படைப்புக் குழுமம் சிறந்த இலக்கியங்களுக்கான விருதுகள் வழங்கும் முயற்சியை முன்னெடுத்துச் செயல்படுத்திவருகிறது. விருது தேர்விற்காகப் படைப்புக் குழுமத்திற்கு அனுப்பப்பட்ட நூல்களில் சிறந்தவை தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் 2019இல் வெளியாகிய சிறந்த நூல்களுக்கான 'படைப்பு இலக்கிய விருதுகள் 2020' இங்கு அறிவிக்கப்படுகின்றன.

படைப்பு இலக்கிய விருதுகள் 2020

விருது பெற்ற நூல்



அந்த வட்டத்தை யாராவது சமாதானப்படுத்துங்கள்

படைப்பாளர் : கார்த்திக் திலகன்

வெளியீடு : டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை.

"கார்த்திக் திலகன் கவிதைகள் முழுவதும் பிரம்மாண்டத்தை எளிய அளவுகோலாகக் கொண்டு நகர்பவை. இத்தன்மையிலிருந்து தன் சுயத்தை விசாரணை செய்துகொண்டும், அதிலிருந்து விடுபட்டுக்கொள்ளவும் சாத்தியங்கள் உள்ள கவிதைகளே இவை."

● கண்டராதித்தன்

சிறப்புப் பரிசு பெற்ற நூல்கள்

நூல் : கோழிக்கறி வாங்குபவனின் சித்திரக் குறிப்புகள்

படைப்பாளர் : சேலம் ராஜா

வெளியீடு : இடையன் இடைச்சி நூலகம், ஈரோடு.

"கனரக வாகனத்தைக் கையாளும் கவிதைக்காரர். பயணத்தினூடே இவர் கண்டடைகிற உலகத்தின் தன்வய வாசிப்பாக இவரின் கவிதைகள் அமைகின்றன."

● பதிப்புரையிலிருந்து.

நூல் : நியாசசுரம்

படைப்பாளர் : வே.முத்துக்குமார்

வெளியீடு : ஆவாரம்பூ பதிப்பகம், திருநெல்வேலி.

"பெருவாழ்வின் தீராத பக்கங்களை எழுதித் தீர்க்க முயன்று ஒவ்வொருமுறையும் தோற்றுப்போய்க் கொண்டிருக்கிறேன். ஆனாலும் நீள்கிறது வாழ்க்கை பெருத்த இரைதேடலின் நீட்சியாக."

● வே.முத்துக்குமார்

நூல் : ஆகுளி

படைப்பாளர் : கீதா பிரகாஷ்

வெளியீடு : அகநி வெளியீடு, வந்தவாசி.

"பின்நவீனத்துவக் கவிதையின் உத்திமுறை சமூக அவலங்களைப் பிரதிபலிக்கப் பயன்பட்டிருக்கிறது."

● கவின்

படைப்பு இலக்கிய விருதுகள் 2020

விருது பெற்ற நூல்



யாசகம்

படைப்பாளர் : எம்.எம்.தீன்

வெளியீடு : ஜீவா படைப்பகம், காஞ்சிபுரம்.

"நாவலுக்குள் அவர் தேர்ந்தெடுத்திருக்கும் களமும் அதற்காக மேற்கொண்டிருக்கும் பயணங்களும் வாசிப்பும் நெல்லையைச் சுற்றியுள்ள பிராந்தியங்களில் வசிக்கும் ஜனங்களுக்குள் உலவும் பேச்சுமொழியை எழுத்தில் தொட்டுவிடும் அபூர்வ முயற்சியும் கண்முன் தெரிந்தது."

● கார்த்திக் புகழேந்தி

சிறப்புப் பரிசு பெற்ற நூல்கள்

நூல் : சா

படைப்பாளர் : கு.ஜெயபிரகாஷ்

வெளியீடு : ஆதி பதிப்பகம், திருவண்ணாமலை.

"இக்குறுநாவலைத் தந்துள்ள ஜெயபிரகாஷ் நல்ல நோக்குநிலையும் கதையாடல் தேர்ச்சியும் பெற்றுள்ளார்."

● சா.தேவதாஸ்

நூல் : அப்பல்லோ

படைப்பாளர் : அண்டனூர் சுரா

வெளியீடு : பாரதி புத்தகாலயம், சென்னை.

"கிரேக்க இதிகாசப் பாத்திரத்தின் வழியே ஒரு சமூகத்தின் அழித்தொழிப்பைப் பேசும் உருவகப் புனைவு."

● கமலாலயன்.

படைப்பு இலக்கிய விருதுகள் 2020

விருது பெற்ற நூல்



ஒடலு

படைப்பாளர் : சாரா

வெளியீடு : ஜீவா படைப்பகம், காஞ்சிபுரம்.

“பெண் எனும் சமுத்திர ஆழியில் மூழ்கியெடுத்த சங்கின் ஒலியை ஒத்த கதைகள் இவை.. உடல், மனம், பொருள், கல்வி இன்னும் என்னென்ன உண்டோ அவ்வளவின் மீதிலும் படிந்துகிடக்கும் கடலளவு கதைகளைச் சிப்பிகளாகக் காயப்போட்டிருக்கிறார்.”

● கார்த்திக் புகழேந்தி

சிறப்புப் பரிசு பெற்ற நூல்கள்

நூல் : ரசூலின் மனைவியாகிய நான்

படைப்பாளர் : புதியமாதவி

வெளியீடு : காவ்யா பதிப்பகம், சென்னை.

“இவரது கதைகளில் வாழ்க்கையின் வலிகள் மட்டும் வெளிப்படுவதில்லை. அதனை வெல்லும் வழிகளும் வரையப்பட்டுள்ளன.”

● காவ்யா சண்முகசுந்தரம்



நூல் : கதையுதிர்காலம்

படைப்பாளர் : இரா.தங்கப்பாண்டியன்

வெளியீடு : அகநி வெளியீடு, வந்தவாசி.

“தங்கப்பாண்டியனின் கதைகளின் சிறப்பு அவற்றின் இயல்பான கதை சொல்லல் முறைதான்.”

● பாஸ்கர் சக்தி

படைப்பு இலக்கிய விருதுகள் 2020

விருது பெற்ற நூல்

வெற்றியின் எல்லை வெகுதூரமில்லை

படைப்பாளர் : மு.முருகேஷ்

வெளியீடு : மாற்று ஊடக மையம், சென்னை.

"கனவின் நிறம் கருப்பு, முடிவுகளின் பரிசீலனை, தோல்வியில் சமரசம், தவறுகளை ஒத்துக்கொள்வோம், மக்கள் எவ்வழி அரசன் அவ்வழி எனப் புதுப்புது தளங்களில் இப்புத்தகம் முன்வைக்கும் கருத்தாடல் குடிமக்களுக்கு மிக முக்கியமானவை."

● வி.டில்லிபாபு

சிறப்புப் பரிசு பெற்ற நூல்கள்

நூல் : ஐயா (எ) 95 வயது குழந்தை!

படைப்பாளர் : வடிவரசு

வெளியீடு : விஜயா பதிப்பகம், சென்னை.

"தனது தந்தையாரை முகாந்திரமாகக் கொண்டு எழுதப்பெற்ற மிக ஆத்மார்த்தமான பதிவு இந்நூல்."

● நாஞ்சில் நாடன்

நூல் : உதிர்ந்தும் உதிராத..

படைப்பாளர் : எஸ்.வி.வேணுகோபாலன்

வெளியீடு : பாரதி புத்தகாலயம், சென்னை.

"பல்வேறு ஆளுமைகளைப் பற்றி எழுத வேண்டும் என்றால் ஞானமும் அனுபவமும் வேண்டும். இவையெல்லாம் எஸ்.வியிடம் இருக்கின்றன."

● டாக்டர் ஜி.ராமானுஜம்

படைப்பு இலக்கிய விருதுகள் 2020

விருது பெற்ற நூல்

வாழைமர நோட்டு

(சிங்கப்பூரில் ஜப்பானிய ஆதிக்கச் சுவடுகள்)

படைப்பாளர் : ஹேமா

வெளியீடு : ஹேமலதா, சிங்கப்பூர்.

"வரலாற்றை மீண்டும் மீண்டும் சொல்லவேண்டிய தேவை எப்போதும் எல்லாச் சமூகங்களுக்கும் இருந்திருக்கிறது. காலத்தை அணுஅணுவாக ஆராயும் அத்தொடரோட்டத்தில் ஹேமா துணிந்து பங்குபெற்றிருப்பது பாராட்டத்தக்கது."

– சிவானந்தம் நீலகண்டன்

சிறப்புப் பரிசு பெற்ற நூல்கள்

நூல் : இவள்...?

படைப்பாளர் : மணிமாலா மதியழகன்

வெளியீடு : மணிமாலா மதியழகன், சிங்கப்பூர்.

"கதையாசிரியர் பல சம்பவங்களைக் கதைகளில் கொண்டுவந்திருந்தாலும் ஒவ்வொரு கதையின்வழி ஒரு நீதியைச் சொல்ல விழைகிறார்."

– சுப.அருணாசலம்

நூல் : சிங்கப்பூர் இலக்கியம்

படைப்பாளர் : முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி

வெளியீடு : ஸ்ரீலக்ஷ்மி வெளியீடு, சிங்கப்பூர்.

"உலகெங்கும் கருத்தரங்கங்களில் ஆய்வுரை வழங்கும் புதிய ஔவை."

– மறைமலை இலக்குவனார்

படைப்பு ஆண்டு விழாவில் விருதும் பணமுடிப்பும் வழங்கப்படும்.

கடிதங்கள்

கவிஞர் விக்ரமாதித்யன்

1

அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

நவீனத் தமிழ்க் கவிதையின் தன்னிகரற்ற அடையாளம் கவிஞர் விக்ரமாதித்யன். இலக்கியப் பரப்பில் பரவலான மரியாதையும் பழக்கமும் உள்ள கவிஞருக்குப் பிற இலக்கிய ஆளுமைகள் எழுதிய கடிதங்களும் இலக்கியத்திற்கு ஒப்பானவை. அக்கடிதங்கள் இனி தொடர்ந்து தகவு இதழில் வெளியாகும். குறிப்புகள் கவிஞர் விக்ரமாதித்யன் எழுதுபவை – ஆசிரியர்.

கடிதம் - 1

எழுதியவர் : எழுத்தாளர் ஜெயமோகன்

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அண்ணாச்சிக்கு,

நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. முதலில் நீங்கள் எழுதியதே என் நாவலின் பெரிய வெற்றிக்குச் சான்று தருகிறது. அது மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தருகிறது. புகழ் என்பது என்னளவில் ஜனக்கூட்டத்தில் பரவும் அலை அல்ல. ஆழமான மனங்களில் ஏற்படும் அசைவுதான். அது ஒருவகையில் காலத்தில் ஏற்படும் ஓர் ஊடுருவல்.

விஷ்ணுபுரம் பற்றிய தங்கள் விரிவான கருத்துக்களை அறிந்துகொள்ள பெரிதும் விரும்புகிறேன். தங்களுக்கு வசதிப்படும்போது இங்கு வரலாம்; தங்கலாம். தங்குவதற்கு வசதி உடைய வீடு; காரணம் பத்மநாபபுரம் கிராமம். தக்கலை வந்து பத்மநாபபுரம் வரவேண்டும். பத்மநாபபுரத்தில் அரண்மனைக்கு அருகே, சரஸ்வதியம்மன் கோயிலின் நேர் எதிரே என் வீடு.

ஓய்வுபெற்ற *DSP* பாலகிருஷ்ணனின் வீடு என்றால் கூறுவார்கள். *(B Jayamohan,* புத்தன் வீடு, தெற்குத் தெரு, பத்மநாபபுரம், தக்கலை *PO* என்பது விலாசம், அலுவலக விலாசம் *B.Jayamohan, o/o Telecom Dist Manager,* நாகர்கோவில்-1) நீங்கள் இங்கு வருவது எனக்கும் வேறு வகையில் முக்கியமானது. நான் உங்களைச் சந்திப்பது பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன். சி.மோகன் முதலியவர்களிடம் உங்களைப் பார்த்தால் சொல்லும்படி கூறியிருந்தேன். என் அடுத்த நாவல் (முன்பே கூறியதுதான் அசோகவனம்) சைவச் சார்பு உடையது. திருவரம்பு மகாதேவ ஆலயத்தின் புராதன கரு ஒன்று வெகுநாட்களாக மனதைச் சீண்டுகிறது. ஆனால் எதுவும் மனதில் உருக்கொள்ளவில்லை. உங்களைச் சந்திப்பது உதவியாக இருக்குமோ என்று எண்ணினேன். (மகாருத்ர மூர்த்தியாக – சம்கார மூர்த்தியாக – சிவன் மையமாகக் கொண்டுள்ள ஸ்தலம் ஏதேனும் தமிழ்நாட்டில் உண்டா?)

• •

விஷ்ணுபுரத்தைக் காவியம் என்பது எனக்கும் உடன்பாடே. மேற்கத்திய நாவல்கள் பெரும்பாலும் மேற்கத்தியக் காவிய மரபை அடியொற்றியவை என்பதை மேற்கத்திய மூலகாவியங்களை சமீபமாக படித்தபோது உணர்ந்தேன். நாம் அந்த நாவல் வடிவையே நாவல் என ஏற்று அதற்குப் பழகிவிட்டிருக்கிறோம் என்று பட்டது. நமது நாவல் நமது காவிய மரபிலிருந்தல்லவா பிறக்க வேண்டும்? நமக்கு அணி என்பது இலக்கியப்பிரக்ஞையின் அடிப்படை அல்லவா? அணியற்ற – குறைவான – யாப்பு என்பது கிரேக்க மரபு முதல் மேற்கில் உள்ளது. நமக்கு அது இல்லை. தமிழிலும் சரி வடமொழியிலும் சரி. அதேசமயம் அணி அலங்காரங்கள் நவீன வாழ்வில் எந்த அளவு வரை இடம்பெறக் கூடும் என்பது ஒரு கேள்விதான். இவற்றை நாம் யோசிக்க வேண்டும். நாம் மேற்கின் உதவியின்றி சுயமாகத் தேடிக் கண்டடைய வேண்டிய விஷயம் இது. விஷ்ணுபுரம் நமது புராண/காவிய மரபிலிருந்து ஒரு நாவலை உருவாக்கும் முயற்சி. இப்போதைக்கு இவ்வளவுதான் நான் உரிமை கொண்டாட முடியும்.

• •

பாண்டியனைச் சித்தரிக்கும் விதம் பற்றிய உங்கள் கோபம் புரிகிறது. அதேபோல ஆழ்வார் சித்தரிப்பு பலரைப் புண்பட வைத்ததாக அறிந்தேன் (அவருக்கு நம்மாழ்வார் சாயல் வேறு). உண்மையில் இதெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்தவை அல்ல. பலசமயம் அந்தச் சந்தர்ப்பத்தின் போக்கில் அப்படியே உருவாகி வருகிறது. பரத்தையரால் சூழப்பட்ட மன்னன் என்ற மனச்சித்திரத்தின் விளைவு. இரண்டாவதாக இந்நாவலில் அதிகாரத்துடன் சம்பந்தமுள்ள எவரையும் சாதகமாகச் சித்தரிக்கவில்லை என்று படிக்கும்போது படுகிறது. வன்முறை, போகம், சீரழிவு இவற்றுடன்தான் எப்போதும் அரசாங்க அதிகாரத்தை நான் இணைத்து யோசிக்கிறேன். கடைசியாக ஸ்ரீபாதம் பகுதியில் வரும் பாண்டிய சகோதரர்கள் வரலாற்றிலும் மோசமாக சித்தரிக்கப்பட்டுள்ளவர்களே. பிற்பாடு வீரபாண்டியன் சுந்தர பாண்டியனை எதிர்த்துக் கலகம் செய்து துணைக்கு மாலிக் காபூரை வலிந்து அழைத்து பாண்டி

நாட்டை அவர்களிடம் தந்தான். மதுரை ஆலயம் உட்பட தென்சீமையே சுடுகாடு ஆனது அவனால்தான். அண்ணனைத் தம்பி கொன்றான். அண்ணனைப் பெரிய போகி என்று பல தகவல்கள் கூறுகின்றன. தெற்கத்திச் சீமை வரலாற்றில் இவ்விரு சகோதரர்கள் பெரிய கரும்புள்ளிகள் என்பது ஒரு வரலாற்று உண்மை. இவர்கள் ஒன்றுபட்டு நின்றிருந்தால் டெல்லிப்படை பொதிகைமலை தாண்டியிருக்காது.

• •

விஷ்ணுபுரத்தில் பிராமணிய எதிர்ப்பு இருப்பதாக நான் எண்ணவில்லை. பிராமணியத்தின் பலமுகங்கள் உள்ளன. பவதத்தரும் பிங்கலனும் சங்கர்ஷணனும் எல்லாம் பிராமணர்களே. மறுபக்கம் சோற்றுத் துருத்திகள். நாவலில் எல்லா நல்ல பக்கங்களும் இணையான கரிய பக்கங்களால் சமன் செய்யப்பட்டுள்ளன. இது நமது செவ்வியல் மரபு. ஸ்ரீவில்லிபுத்தூர் மோகினி சிற்பத்தில் ஆபாசமான பார்ப்பனன் சிற்பமும் சேர்ந்து இருப்பதைக் கண்டிருப்பீர்கள். காஞ்சியிலும் அதே போலக் காணலாம். பார்ப்பன எதிர்ப்பு என நீங்கள் குறிப்பிட்டது உண்மையில் புனிதம், மகத்துவம் என்று ஒரு பக்கத்தில் தென்படுவதன் மறுபக்கம் விஷ்ணுபுரத்தின் இந்த அம்சத்தை நாம் நமது கோபுரச்சிற்பங்கள் அனைத்திலும் பார்க்கலாம். (திருவட்டாறு கோயிலில் பிராமணர்களின் ஆண்குறிகள் மிகப் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளன.) இந்த

அம்சத்தை என்னில் மட்டுமல்லாமல் நமது மரபிலேயே தேடவேண்டும்.

• •

நாவலின் தத்துவ விசாரங்கள் பற்றிய உங்கள் கருத்து முக்கியமானது. பலர் அதைக் குறிப்பிட்டுள்ளனர். எனக்குத் தைரியம் தந்தது இரு அம்சங்கள். மேற்கத்திய நாவல் மரபில் தஸ்தயேவ்ஸ்கி முதல் உம்பர்டோ ஈகோ வரையிலான பெரும் நாவலாசிரியர்கள் பெரிய தத்துவ விவாதத்திற்கான களமாகவே நாவலைக் கையாண்டிருக்கிறார்கள். நமது மரபில் சிலப்பதிகாரம் உட்பட எல்லாக் காவியங்களிலும் தத்துவ விவாதம் முக்கியமான இடம் பெறுகிறது. (சிலப்பதிகாரத்தின் அளவை கணக்கிலெடுத்துப் பார்க்க கவுந்தி மாடலன் முதலியோருக்குத் தரப்பட்டுள்ள இடம் அதிகம்) மணிமேகலை, சிந்தாமணி இரண்டிலுமே பெரிய பெரிய தத்துவ விவாதப் பகுதிகள் உள்ளன. என் நாவலின் ஐதீகங்கள், மனப்போராட்டங்கள், வர்ணனைகள் ஆகியவற்றைச் சமன் செய்ய தத்துவ விவாதப்பகுதி தேவை என்று பட்டது. உண்மையில் 100 பக்கங்களுக்கு மேல் தத்துவ விவாதம் இல்லை. கூடுமானவரை புனைவுபடுத்தியே தத்துவ விவாதங்கள் தரப்பட்டுள்ளன என்று எனக்குப் பட்டது.

• •

உங்கள் கடிதம் மிகுந்த உற்சாகத்தைத் தருகிறது. இலக்கியத்திற்கு இதுபோன்ற கடிதங்கள் மிக முக்கியமானவை. சில அபூர்வமான பூட்டுகள் தானாகவே இவற்றின் மூலம் திறந்து வழிவிடுகின்றன.

தங்கள்

ஜெயமோகன்.

பிகு : வீட்டில் மனைவி குழந்தைகள் நலம்தானா? தங்கள் மகன் பற்றி ஜீவாவிடம் தொடர்ந்து விசாரிப்பது உண்டு.

• • •

குறிப்பு:

அமரர் மீரா ஐயா விஷ்ணுபுரம் முதல் பதிப்பைக் கொண்டுவந்தவர். அதைத் தேடிப்பிடித்துப் படித்துவிட்டு ஜெயமோகனுக்கு என்னுடைய எண்ணங்களை எழுதி அனுப்பியிருந்தேன். அவர் பதில் எழுதியிருந்தார். காலம் என்று கருதினால் விஷ்ணுபுரம் முதல் பதிப்பு வந்த காலமே ஆகும்.

• • •

கடிதம் - 2

எழுதியவர் : எழுத்தாளர் கோணங்கி

அன்புடன் நம்பி அண்ணாச்சிக்கு,

மஹாபாரதம் மூன்று புஸ்தகங்கள் டேமேஜ் நிலையில் இருப்பதால் அவற்றைக் கொடுத்தனுப்பவில்லை. வரும் நண்பர் அவர்களின் அக்கறையினால் இந்த புஸ்தகங்கள் உங்களுக்குக் கிடைத்துள்ளன. அவருக்கு என் சார்பில் மீண்டும் தங்கள் மூலமாக நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

தா.மணி, கலாப்பிரியா ஆகிய அண்ணாச்சிகளுக்கு என் எளிய அன்பும் அக்கறைகளும்.

நன்றியுடன்

கோணங்கி.

• • •

குறிப்பு:

இரண்டாயிரத்தின் நடுவில் மகாபாரதம் (கும்பகோணம் அய்யங்கார் பதிப்பு) அன்றைய நாளில் கிடைப்பதற்கு அரிய பதிப்பாக இருந்தது. எனக்குத் தெரிந்து சென்னையில் அமரர் சோ, கிரியா ராமகிருஷ்ணன் போன்றோரிடம் இருந்தது. நானே பொள்ளாச்சி மகாலிங்கத்தின் போயஸ் தோட்ட தலைமை அலுவலகத்தில் பார்த்துப் படித்திருக்கிறேன். நீண்ட காலத்திற்குப் பிறகு கோணங்கி சென்னை மூர் மார்க்கெட்டில் சொல்லி முன்பணம் கொடுத்துத் திரட்டி வாங்கி வந்த தொகுப்புகள் அவை. இடைகாலில் இருக்கிற கலாப்ரியாவின் நண்பர் அன்று ஊராட்சி ஒன்றியத்திற்கு மாறுதலாகிச் செல்கிறபோது அவற்றைக் கோணங்கியைப் பார்த்துக் கேட்டு வாங்கி வரச் சொன்னேன். கோணங்கி அத்தனை தொகுப்புகளையும் அவரிடம் கொடுத்து அதனோடு சேர்த்தனுப்பிய துண்டுச்சீட்டுதான் இது.

- தொடரும்

பண்பாட்டு ஆய்வாளர்
பேராசிரியர்
தொ. பரமசிவன் அவர்கள்
மறைவுக்கு ஓர் இரங்கல்
கவிதை

● பிருந்தா சாரதி

இது ஒரு மனிதரின் மரணம்தானா?

'தொ. ப. மறைந்தார்'

இந்த ஒரு வரிச் செய்தியால்
இலக்கியம்
தத்துவம்
தொல்லியல்
மானுடவியல்
நாட்டார் மரபு
தமிழக வரலாறு என
எத்தனைத் துறைகளுக்கு ஒரே நேரத்தில் இழப்பு?

இது ஒரு மனிதரின் மரணம்தானா?

தொ.பரமசிவன்–

தடம் பதித்த
தமிழறிஞர்.

வழிகாட்டிய
அல்ல... அல்ல...
வழி சமைத்த
வரலாற்றறிஞர்.

வானத்திலிருந்து பார்க்காமல்
மண்ணிலிருந்து வரலாற்றைப் பார்த்தவர்
நம்மைப் பார்க்க வைத்தவர்.

மானுடம் போற்றும்
மானிடவியலாளர்.

தொல்லியலும் அறிந்தவர்
தொலைநோக்கும் கொண்டவர்.

நாட்டார் மரபின்
வேர்வரை சென்றவர்.

பழக்க வழக்கங்களில் பண்பாட்டின் அடித்தளம்
கண்டவர்.

சாதாரணங்களுக்குப் பின்னால் உள்ள
சரித்திரம் சொன்னவர்.

புதுமை தெரிந்தவர்
மரபை அறிந்தவர்
இரண்டின் இசைவினை
அறிந்து உரைத்தவர்.

நாளைய தமிழனுக்காக
நேற்றே உழைத்தவர்.

அவருக்குப்
பெரியாரையும் தெரியும்
பெரியாழ்வாரையும்
தெரியும்.

சைவம் பௌத்தம் சமணம்
அனைத்திலும் தோய்ந்தவர்.

நாத்திகம் ஆத்திகம்
இரண்டையும் அறிந்து
நடுகல் போற்றும்
நாட்டார் மரபே
நம் வழி என்றவர்.

ஆய்வெனப்படுவது
புத்தகங்களைப் படித்தே

புத்தகம் எழுதுவதல்ல
என்று தெளிந்து

மண்ணில் இருந்தும்
மக்கள் வாழ்வில் இருந்தும்
அரிய உண்மைகளை
அகழ்ந்தெடுத்தவர்.

அப்படி எங்கள் ஊர்
'அழகர் கோவிலை'
ஆய்வு செய்தவர்.

அழகர் எனும்
அழகிய தமிழ்ப் பெயர்
நிலைத்தது எப்படி?
நிலமும் வாழ்வுமே
எதையும் நிலைக்க வைக்கிறது
என்று நிறுவியவர்.

கள்ளழகரும்
கருப்பண்ண சாமியும்
கைகோர்த்ததில்
உழைக்கும் மக்களின் உணர்வைப் பார்த்தவர்.

மக்கள் நினைத்தால்
துளசி அர்ச்சனைப் பெருமாளும்
கெடாவெட்டுக்
கருப்பண்ண சாமியும்
உறவினர் ஆவர் என்பதை உலகுக்குரைத்தவர்.

'பண்பாட்டு அசைவுகளால்'
பலர் சிந்தையை அசைத்தவர்.

'அறியப்படாத தமிழகத்தை'
அறியச் செய்தவர்.

'சமயங்களின் அரசியலில்'
கடவுளரின் முகவரியைத் தேடியவர்.

'உரை கல்' அவரது ஒரு நூலின் தலைப்பு.

உரசிப் பார்த்தால் தெரியும்–
அவரது ஒவ்வொரு நூலுமே
உண்மைக்கு
உரைகல்தான்.

பேராசிரியராய்ப் பணியாற்றி
ஓய்வுபெற்ற பின்
பேராசானாய்
உயர்ந்தவர்.

ஆய்வரங்குகளில்
தார்மீக வலிமை தந்தது
அவரது இருப்பு.

எந்த இடத்தையும்
வகுப்பறையாக்கியது
அவரது பேச்சு.

மரணத்திலிருந்து திரும்பிவரும் வாய்ப்பிருந்தால்
மரணம் பற்றிய
ஆய்வுக் கட்டுரையோடுதான்
அவர் திரும்பி வருவார்.

ஓருடல் ஓருயிர் என்பது
ஒவ்வொருவருக்கும்
பொதுவிதிதான்
என்றாலும்
சிலர் மட்டுமே
செய்து முடிக்கிறார்கள்
பலர் ஆற்ற வேண்டிய
பெரும் பணிகளை.

அவர்கள் விடைபெறும்போதுதான் தெரிகிறது
அவர்கள் ஒருவர் அல்ல என்பதும்
ஓர் உருவத்தில்
அவர்களுக்குள்
பலர் வாழ்ந்திருப்பதும்.

இந்த உண்மைக்கு
ஓர் உரை கல் ஆகிவிட்டது
தொய்வின்றி உழைத்த தொ.ப. மரணமும்.

அதனால்தான்
இந்த ஐயம்.
இது ஒரு மனிதரின் மரணம்தானா?

இனி –
அவரது நூல்கள் செய்யும்
அவரது பணிகளை.

அவர் விட்டுச்சென்ற வெற்றிடத்தை
விரைந்து நிரப்புவர்
அவரது மாணவர்.

விடை தருகிறோம் ஐயா

உங்கள் ஆய்வுகள் தமிழகத்தின் வைப்புநிதி.

தலைமுறைகள் வணங்கும்
உங்கள்
நீளமான உழைப்பை.

அறிவுலகம் போற்றும்
உங்கள்
ஆழமான அறிவை.

● மௌனன் யாத்ரிகா

கற்பதுவே.. கேட்பதுவே..!

பெருமாள் முருகன்

கவிதைக்குப் பாடுபொருளைத் தேர்வு செய்யும்போது அதில் தொழிற்படும் பொருளும் கவிஞனின் மனமும் ஒரு புள்ளியில் இணையாவிட்டால் கவிஞனால் பிதுக்கப்படும் கவிதை வாழ்வோடு எந்த ஒட்டுதலும் இல்லாத பண்போடு அமைந்துவிடும் சாத்தியங்கள் உண்டல்லவா?

ஒற்றை நீள்தொடராக அமைந்துள்ள உங்கள் வினாவை வியக்கிறேன். வலிந்து எழுதப்படும் கவிதை பற்றிக் கேட்கிறீர்கள் என எளிமையாகப் புரிந்துகொள்கிறேன். தொழிற்படும் பொருளும் கவிஞன் மனமும் ஒரு புள்ளியில் இணைய வேண்டும். அது மட்டும் போதாது. ஒரு புள்ளியில் இணைந்து வெளிப்படத் தயாராக இருக்கும் பாடுபொருளைக் கவிதையாக்க இன்னும் பல அம்சங்கள் தேவைப்படும்.

கவிதை வடிவம், மொழி ஆற்றல், பண்பாட்டுப் புரிதல் ஆகியவற்றைக் கவிஞன் மனம் எந்த அளவு உள்வாங்கிப் படைப்பாற்றலில் செழுமையாகி இருக்கிறது என்பதும் முக்கியம். அவற்றில் குறைபாடு இருப்பின் எத்தனை அற்புதமான பாடுபொருளாக இருப்பினும் வெளிப்பாடு பிதுக்கலாக அமைந்துவிடும். அவற்றில் எல்லாம் தேர்ந்து அனுபவம் கொண்டிருக்கும் கவிமனம் 'ஒரு புள்ளி இணைவு' இல்லாமல்கூடக் கவிதையாக்கிவிடும்; பிதுக்கல் என்று கண்டுபிடிப்பது மிகக் கடினமாக இருக்கும்.

வாழ்வோடு ஒட்டுதல் உள்ள பண்புகள் மனதிலிருந்து எந்தச் சந்தர்ப்பத்தில் வெளிப்படும் என்பதை அத்தனை சூட்சுமமாக அறிவது சிரமம். சாதாரணமான ஒரு நேரத்தில் அற்புதமான வரி வந்து சேரும். அற்புதமான ஒரு நேரத்தில் சாதாரண வரிகூட வந்து சேராது. ஒன்றை மனம் உணர்ந்தாலும் அதைச் சமைத்துக்கொள்ள அவகாசம் எடுத்துக்கொள்ளும். அப்படி எடுத்து அது உருவாக்கி வைத்திருக்கும் வரி சாதாரண சமயத்தில் எழுந்து முன்வரும்.

மன அடுக்கைக் குழந்தையின் கலைந்து கிடக்கும் அலமாரிக்கு ஒப்பிடுவேன். அதற்குள் இருந்து என்ன கிடைக்கும் என்பதை ஒருபோதும் தீர்மானிக்க முடியாது. படைப்பு முறைப்பாடு என்பது ஒற்றைத்தன்மை கொண்டதல்ல. அதை வரையறைப்படுத்தியோஅட்டவணைபோட்டோ காட்ட இயலாது. ஆனால் மனதின் ஆனைத்தீக்கு இடைவிடாமல் இட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அப்படிச் செய்தால் இரக்கப்பட்டு அதுவும் கொஞ்சம் நமக்குக் கொடுக்கும்.

கையறுநிலையை எழுதுவதில் பண்டைத் தமிழ்க் கவிதைகள் உச்சத்தைத் தொட்டவை. வாசக மனதில் ஆழ்ந்த மௌனத்தை இறக்கி வைப்பவை. தற்காலக் கவிதைகளிலும் அந்த வலு இருக்கிறது. துன்பியலைக் கையாளும்போது மட்டும் கவிதையின் செறிவு கூடிவிடுவதுபோல் தோன்றுகிறதே.. ஏன்?

மனிதனுக்கான பகுத்தறிவு பிற உயிர்கள் அனுபவிக்கும் மகிழ்ச்சியை நம்மிடம் இருந்து பறித்துக்கொண்டது. நம் மனம் மகிழ்ச்சியான

நினைவுகளைத் தன் சேகரத்தில் அவ்வளவாக வைத்துக்கொள்வதில்லை. மகிழ்ச்சியைப் பரந்த அளவில் நாம் உணர்வதும் இல்லை. வாழ்வின் மகிழ்ச்சியான தருணம் ஒன்றைப் பகிர்ந்துகொள்ளச் சொல்லி ஒருவரைக் கேட்டுப் பாருங்கள். தடுமாறிப் போவார். யோசித்து ஒரு தருணத்தைச் சொன்னாலும் அது வெகுசுருக்கமாகவே அமையும். ஆம், மகிழ்ச்சியை நாம் சுருக்கமாகவே உணர்கிறோம்.

அதேசமயம் வாழ்வின் துன்பமான தருணத்தை நினைவுகூரச் சொன்னால் மன அடுக்கிலிருந்து பல சம்பவங்கள் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக்கொண்டு 'இம்சை அரசன்' படத்தில் அந்தப்புரத்திற்கு அழைத்ததும் ஓடி வந்து விழும் வீரர்களைப் போல ஏராளமாக வந்துவிழும். எதை எடுத்துச் சொல்வது என்பதில்தான் தடுமாற்றம் இருக்கும். ஒன்றைச் சொல்ல ஆரம்பித்துவிட்டால் முடிக்கவே தோன்றாது. அத்தனை துயரம் மிக்கவர்களாக நாம் இருக்கிறோம். 'சோகக்கதை' என்று ஒரு வழக்காறு நம்மிடம் இருக்கிறது. அதற்கு எதிராகச் 'சந்தோசக் கதை' உண்டா?

நம் பகுத்தறிவு பல விழுமியங்களை உருவாக்கி அவற்றில் பிடிமானம் ஏற்படுத்தி வைத்திருக்கிறது. அவற்றை அடிப்படையாகக் கொண்டே வாழ்வைக் கட்டமைத்திருக்கிறோம். விழுமியங்களாலேயே வாழ்வை மதிப்பிடுகிறோம். ஒருவர் இறந்துவிட்டால் அவரோடு பல விழுமியங்களும் போய்விட்டதாகப் புலம்புகிறோம். மனிதரை விழுமியத் திரளாகவே காண்கிறோம்.

அது மட்டுமல்ல. மரணம் மனிதருக்கு அச்சம் தருவதாக இருக்கிறது. பிற உயிர்களுக்கு மரணம் இயல்பறிவாக மட்டுமே இருக்கிறது. மனிதர்தான் மரணம் பற்றிப் பலவிதமான கோட்பாடுகளை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். 'மரணமிலாப் பெருவாழ்வு' வேண்டி அலைகிறார்கள். மரணத்திற்குப் பிறகு என்ன என்று யோசித்துக் குழம்புகிறார்கள். வாழ்வே துயரத்தால் ஆனது எனப் புலம்புகிறார்கள்.

அரிஸ்டாட்டில் 'அவலமே சிறந்த சுவை' என்கிறார். அவல அம்சங்கள் நம் சமூகத்தில் மிகுதி. ஆகவேதான் கையறுநிலைப் பாடல்களும் அதிகம். துன்பமான கட்டத்தைக் காப்பிய ஆசிரியர்கள் ஆர்வத்தோடு விவரித்துச் செல்வார்கள். நம் ரசனையில் துயரப் பாடல்களுக்கு அதீத இடம் இருக்கிறது. செறிந்த சொற்களால் நிறைந்த துயரத்தை வழங்குவது நம் மரபு. நவீன கவிதையில் மட்டும் இந்த மரபை இழக்கச் சம்மதிப்போமா?

கவிதையில் இடம்பெறும் ஒரேயொரு சொல்கூட ஒரு முழு வாழ்க்கையின் அர்த்தத்தைத் தந்துவிடும் பண்பைக் கொண்டதாக இருக்கிறது. கவிதையின் இந்த பிரத்யேகப் பண்புக்கு என்ன காரணம்?

ஒவ்வொரு கவிதையிலும் கவிச்சொல் என்று ஒன்றோ சிலவோ அமைந்திருக்கும். கவிதை என்னும் ஒட்டுமொத்தச் சொற்கூட்டத்திற்கும் கவிப்பொருளைத் தருவது அத்தகைய கவிச்சொல்தான். கவிச்சொல் பரந்த வெளியை அவாவி நிற்கும் பண்புடையது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதை உணர முடியும்; விளக்க முடியாது. சமீபத்தில் 'உழவு' அதிகாரத்தில் முதற்குறளை வாசித்து அதன் பொருளை விளக்கிச் சொல்ல வேண்டியிருந்தது. 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்பது அக்குறளின் முதல் தொடர். உணவுதான் உயிருக்கு அடிப்படை என்பதால் ஏருக்குப் பின்னால் போவதைத் தவிர வேறு வழியற்றது உலகம் என்று சொல்ல வருகிறார். இதில் 'சுழன்றும்' என்னும் சொல் அகராதிப் பொருளைக் கடந்து கவிச்சொல்லாக மாறி நிற்கிறது. 'பல தொழில்களில் மனிதர்கள் சுழன்று கிடந்தாலும்' என்று சொல்லப் பார்க்கிறேன். 'உலகம் சுழன்றும் ஏர்ப் பின்னது' என்கிறேன். ஆனால் 'சுழன்று' என்னும் சொல்லை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்னொரு சொல்லைப் பெய்து பொருள் சொல்ல முடியவே இல்லை. வெறுமனே 'சுற்றுதல்' என்று அதற்குப் பொருளல்ல. எத்தனையோ தொழில்களைச் செய்து பார்த்தாலும், செய்து திரிந்தாலும், அலைந்து பார்த்தாலும் என்று என்னவிதமாகச் சொன்னாலும் நிறைவில்லை. ஆனால் வள்ளுவர் சொல்ல வருவதை என்னால் உணர முடிகிறது. அதுதான் கவிச்சொல்லின் இயல்பு.

எல்லாக் கவிதைகளிலும் இத்தகைய கவிச்சொல் இருக்கும் என்றும் சொல்ல முடியாது. இன்றைய கவிதைகள் கவிச்சொல்லை அத்தனை முக்கியமாகக் கருதுவதில்லை; கவிதையின் மொத்தச் சொற்களுக்கும் முக்கியத்துவத்தைக் கொடுக்க முயல்கின்றன. எனினும் ஒற்றைச் சொல்கூட வாழ்வின் முழு அர்த்தத்தையும் தந்துவிடுவதாகத் தோன்றுவதன் காரணம் அச்சொல் செறித்து வைத்திருக்கும் காலப் பழமை என்று கருதுகிறேன். நவீனமாக உருவான சொல்லுக்கு அத்தகைய வலு இருக்க வாய்ப்பில்லை. காலத்தின் பிசுக்கு ஏறிய சொல்

கவிதைக்குள் பொருத்தமாக அமைந்துவிட்டால் நமக்குள் கிளர்த்தும் எண்ண அலைகளுக்கு அளவிருக்காது.

• • •

மனுஷ்ய புத்திரன்

படைப்பு மனநிலையை உதாசீனப்படுத்தாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது எத்தனைக் கவிதைகளை வேண்டுமானாலும் எழுதிவிட முடிகிறது. எழுதும் வேட்கை வரும்போது மனம் எங்கிருந்து பாடுபொருளைக் கொண்டு வருகிறது?

எழுதும் வேட்கை என்ற ஒன்று தனியாக இல்லை. நம் இதயத்தின் ஆழத்தில் உறைந்த சொற்கள் மேலெழுந்து வருவதற்கு நாம் கொஞ்சம் இடமளிக்க வேண்டும். பல சமயங்களில் நம் மனம் அன்றாட வாழ்க்கையின் தட்டுமுட்டுச் சாமான்களால் நிரம்பி வழிகிறது. உங்கள் மனதில் நீங்கள் எப்போதும் ஒரு வெட்டவெளியை உருவாக்கிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் முழுநேரக் கவிஞனாக இருக்க முடியும்.

ஒரு புல்லின் நுனியில் படரும் பனித்துளியையோ, கண்களில் துளிர்க்கும் கண்ணீரையோ காண்பதற்கு இந்த வெட்டவெளி மிகவும் அவசியம். ஆனால், செய்திகளும் கேளிக்கைகளும் வருத்தங்களும் களைப்பும் எப்போதும் நம்மை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தால் பிறகு நாம் எழுதும் மனநிலைக்காக காத்துக்கொண்டே இருக்கவேண்டியதுதான்.

பாடுபொருள்கள் எப்போதும் நம் அருகில் காற்றைப்போல நிரம்பி இருக்கின்றன. அதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. ஒரு மாயாஜாலக்காரன் தன் தலையிலிருந்து தொப்பியை எடுத்ததும் அதிலிருந்து புறாக்கள் வருவது போல, பாடுபொருள்கள் எங்கிருந்தோ வரும். முக்கியமான விஷயம் நீங்கள் ஒரு மேஜிஷியனா, இல்லையா என்பதுதான்.

சமூக, பண்பாட்டு, அரசியல் காரணங்களால் நடக்கும் குற்றங்கள், நடவடிக்கைகள், அதிர்வுகளின் பொருட்டு உடனடி எதிர்வினையாக அமையும் கவிதைகள் படைப்புக்கான முகாந்திரங்கள் அற்று வெறும் உணர்வு சித்திரங்களாக மட்டுமே இருந்துவிட வாய்ப்புண்டா?

இந்தக் கேள்வி சமூக, பண்பாட்டு, அரசியல் நிகழ்வுகள் கவிதையின் புனித பாத்திரத்திற்கு எதிரானது என்ற நமது பழைய சிற்றிதழ் ஒழுக்கம் சார்ந்த நம்பிக்கையிலிருந்து பிறக்கிறது. ஒவ்வொரு சமூக நிகழ்வுமே நமது அந்தரங்கத்தில் எதிரொலிக்கும்போதுதான் நாம் உண்மையான கலாச்சார மனிதர்களாக மாறுகிறோம்.

கவிஞனுக்கு இந்தப் பொறுப்பு இன்னும் அதிகம். ஹத்ரஸில் ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப்படுகிறாள். அவளது உடலைக் காவல்துறை அவசரமாக எரிக்கிறது. அந்த ஊருக்குள் யாரும் வராமல் தடுக்கப்படுகிறார்கள். இது வெறும் ஊடக அல்லது அரசியல் சார்ந்த நிகழ்வு மட்டும்தானா? ஊடகங்களால் காட்டமுடியாத ஒன்றை இதில் ஒரு கவிஞன் காட்ட முடியும். அந்தப் பெண்ணின் மிரண்ட விழிகளை, கதறலை, அந்தக் கதறலுக்குச் செவி மடுக்க முடியாத காது கேளாத அவளது அன்னையின் கையறு நிலையை ஒரு கவிஞன்தானே காட்ட முடியும்? அது வாழ்வின் எவ்வளவு பிரம்மாண்டமான அவலக் காட்சி.

அந்தப் பெண்ணின் குரல் ஒரு கவிஞனின் காதில் விழவில்லை என்றால், அது அவனது இதயத்தை அசைக்கவில்லை என்று சொன்னால் அவன் என்ன மாதிரியான கவிஞன்? இன்னொன்று, எல்லா விதமான சமூகக் குற்றங்களுமே வரலாற்றில் இதற்கு முன்னால் எப்போதோ நிகழ்ந்தவைதான். தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருப்பவைதான்.

ஒரு கவிஞன்தான் இந்தக் குற்றங்களுக்கிடையேயான இணைப்புக் கண்ணியைக் கண்டறிந்து அதன் வரலாற்று இருளைத் தீண்ட முடியும்.

ஆழ்ந்த, அகமன உணர்வுகளை வெளிப்படுத்தும் தரிசனக் கவிதைகளும் வெறும் உணர்வுச் சித்திரங்களாக சுருங்க முடியும். நாம் வாழும் காலத்தின் அவலத்திற்கு சாட்சியம் சொல்லும் ஒரு கவிதை ஆழ்ந்த ஆழ்மன

வெளிப்பாட்டையும் ஏற்படுத்த முடியும். இது எல்லாமே எதை எழுதுகிறோம் என்பது சார்ந்ததல்ல. அதை எழுதுகிற கவிஞனின் ஆற்றலோடும் பார்வையோடும் சம்பந்தப்பட்டது.

மொழி வசப்பட்ட, ஆழ்ந்த உணர்வு நிலையில், கடும் பித்து நிலையில் எழுதப்படும் கவிதைகள் எப்போதும் மிகுந்த படைப்பூக்கம் கொண்டவையாக இருக்கின்றனவே ஏன்?

நான் அநேகமாக தினமும் கவிதைகள் எழுதுகிறவன். இன்றுவரை சுமார் 5000 கவிதைகளாவது எழுதியிருப்பேன். மொழி வசப்படுதலும், ஆழ்ந்த உணர்வு நிலையும், கடும் பித்து நிலையும் இல்லாமல் எந்தக் கவிதையையும் எழுத முடியாது. இந்தப் பித்து நிலை, சிதறுண்டு போன ஒரு வாழ்நிலையிலிருந்தோ ஒரு மனநிலையிலிருந்தோ அல்லது சில போதை வஸ்துக்களாலோ உருவாகிறதா? என்பதுதான் கேள்வி.

என்னைப் பொறுத்த வரைக்கும் இது என் மன இயல்புகளில் ஒன்றாக மாறிவிட்டது. நான், ஒருபுறம் எனது ஊடகப் பணிகள், இன்னொருபுறம் எனது அரசியல் பணிகள், மற்றொருபுறம் எனது தொழில் சார்ந்த நிமித்தங்கள் இவற்றுக்கு நடுவில்தான் இந்தப் பித்துகளையும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறேன்.

மிகுந்த சமநிலையைக் கோரும் பணிகளுக்கு நடுவே பெரும் சமன் குலைவை ஏற்படுத்தும் படைப்பூக்க நிலையைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதை எனது வாழ்வனுபவம் எனக்குக் காட்டுகிறது. படைப்பு மனநிலை என்பது பாதி பித்து நிலை என்று சொன்னால், மீதி தர்க்க மனம் ஏற்படுத்தும் ஒழுங்கமைவு. இதுதான் மனப்பிறழ்வு கொண்ட ஒருவரையும் ஒரு கலைஞனையும் வித்தியாசப்படுத்தும் இடம்.

• • •

க.மோகனரங்கன்

தமிழின் தற்காலக் கவிதைகள் அதிகமும் கற்பனாவாதப்பண்பைக்கொண்டிருக்கின்றனவா? இல்லை தமிழின் பிரத்யேகமான பண்பான செவ்வியல் பண்பைக் கொண்டிருக்கின்றனவா?

மொழி என்பது அதைப் பேசும் ஓர் இனத்தின் கூட்டுநினைவு. அது மேற்புறத்தில் ஏராளமான அலைகளையும் ஆழத்தில் ஏகாந்தமான அமைதியையும் ஒருங்கே கொண்டிருக்கும் எல்லையற்ற நீர்நிலையை ஒத்தது. கற்பனாவாதப் பண்புடன் எழுதப்படும் கவிதைகளாகவே இருப்பினும், அவற்றின் ஒரு வரி தன் வீச்சால் மொழியின் நினைவிலி ஆழத்திற்கு நழுவுமானால், அக் கவிதை செவ்வியல் தன்மை கொண்டுவிடும். கற்பனாவாதமோ செவ்வியல்பாங்கோ இரண்டும் கவிதை எழுதுவதற்கான இருவகை உத்திகள் மாத்திரமே. அதைக் கொண்டு நாம் எழுதிச் சேர்ப்பது கவிதையாக எஞ்சி நிற்கிறதா என்பதே கவனிக்கப்பட வேண்டியது.

அறம் சார்ந்த கவிதைகள் தொடக்கக் காலம் முதலே எழுதப்படுகின்றன. ஏன் அத்தகைய கவிதைகளின் தேவை இருந்துகொண்டே இருக்கிறது?

ஒரு மொழி எவ்வாறு அதன் இலக்கணத்தை உதறிவிட்டு இயங்க முடியாதோ, அதுபோலவே அம்மொழியைப் பேசும் இனக்குழுவும் அதன் தொல்குடி நினைவுகளின்றும் உருவாகி வந்திருக்கும் விழுமியங்களை விலக்கிவைத்துவிட்டு வாழ இயலாது. சமூக அமைப்புகளின் நீதி வழங்கல் முறைகளில் குறைபாடுகளும் போதாமைகளும் இருக்கலாம். ஆனால் மொழிவழிப்பட்ட படைப்புகள் ஏதோவொருவகையில் நம் சமூகத்தின் தொகுப்பு மனசாட்சியை முன்னிறுத்தியே எழுதப்படுவதால், எப்போதைக்குமான அறத்தை மறைத்துக்கொண்டு அவை அதிகமும் பேசவியலாது.

நீங்கள் ஏன் கவிதை எழுதுகிறீர்கள்? (இது தடாலடியான கேள்வி இல்லை மற்றும் இது உங்களுக்குக் கேட்கப்படுவதுபோல் நம் பலருக்கும் கேட்கப்படும் கேள்வி) கவிதை எழுதுவதால் உங்கள் வாழ்விலோ, சமூக அமைப்பிலோ மாற்றம் நிகழ்கிறதா? 'மாற்றம் எதுவும் நிகழாவிட்டால் கவிதை எழுதக் கூடாதா' என்று உங்களுக்குப் பதில் கேள்வி எழலாம். இருந்தாலும் கேட்கிறேன். நீங்கள் ஏன் கவிதை எழுதுகிறீர்கள்?

தொடர்ச்சியான வாசிப்பின் நீட்சியாகவே எழுதவும் தோன்றியது. எழுதுவதன் வழியாக என் குழப்பங்களையும் தத்தளிப்புகளையும்,

ஓரளவிற்குத் தடுமாறாமல் கடக்கமுடிகிறது. குறிப்பாக என் குற்றவுணர்வைச் சமாதானம் செய்ய அது பெரிதும் உதவுகிறது. எனக்காக எழுதியது பிறருக்கான ஒன்றாகவும் மாறும்போது கிடைக்கிற நிறைவு அலாதியானது. அதற்காகவும் எழுதுகிறேன்.

• • •

அழகிய பெரியவன்

பிற்போக்குச் சிந்தனைகள் புரையோடிப்போய்க் கிடக்கும் ஒரு நாட்டில் கவிதை எழுதுவது என்ன விளைவை ஏற்படுத்திவிடப் போகிறது? ஒன்றுக்கும் பிரயோசனமில்லாததாகக் கலை வடிவங்கள் மாறிக்கொண்டிருப்பதுபோல் தோன்றுவது ஏன்?

ஒரு மொழியைப் பேசுகிற மக்களின் கூட்டு ஆன்மாவாக அம்மொழியில் உருவாகும் இலக்கியமே விளங்குகிறது. இதில் கவிதைக்கு அதிக இடம் உண்டு. இருபதாம் நூற்றாண்டின் நவீன கலைவடிவத்தின் உச்சமாகப் பலவகை கூட்டுகளால் திரைப்படம் உருவாகி பெரும்பாலான இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது. ஆனாலும் ஆனாலும் இன்றும் கவிதைதான் நமது மேற்கோளாக விளங்குகிறது. அதனால்தான் எழுதவேண்டும் என்று நினைக்கிற எவரும் முதலில் கவிதையிடமே சரணடைகின்றனர்.

ஒருவேளை, எழுதுகிறவரிடம் பிற்போக்குக் கருத்துக்கள் மறைந்திருந்தாலும் கூட கவிதை அதை மாற்றிவிடுகிறது. அல்லது அக்கருத்துக்களை வைத்துக்கொண்டு கவிதையெழுத முனையும்போது நிச்சயம் ஒருவர் நடுங்குகிறார். இது மொழியின் அறம் கொடுக்கின்ற அச்சம். எனவே கவிதை என்பது ஒரு அறவடிவம். ஆழ்மனதிலிருந்து எழும் தூய எண்ணம். அதற்கு செவி கொடுக்கின்றவரை அது மாற்றும்.

பயன் கருதாமல் செய்வதே கலை. ஆனால் அதன் விளைவால் பயனுண்டு. அந்தப் பயனை அளவிடுவதற்குக் கருவி ஏதுமில்லை. நாம் பெருமளவில் உண்ணும் சோற்றைக் காட்டிலும் மில்லி கிராம் அளவிலான தாது உப்புக்களே நமது உடல் செயற்பாட்டை ஒழுங்கு செய்கின்றன. அது போலத்தான் கலையும். கலை வடிவங்களின் சாரம் உப்பைப்போல எல்லாவற்றிலும் மறைந்திருக்கின்றன.

மனநிலையில் அழுக்கடைந்த சமூகத்துக்கு நம் கவிதைகளால் என்ன பயன்? நாம் ஏன் பிடிவாதமாக எழுதித் தள்ளுகிறோம்?

சமூக மனநிலை இன்றுதானா அழுக்கடைந்திருக்கிறது? வரலாறு முழுவதும் இரத்தக் கறைகள், ஓலங்கள், கண்ணீர் நிறைந்துள்ளதே.. ஏன்? அடிப்படையில் மனிதன் ஒரு விலங்குதானே? காலந்தோறும் அவன் பார்த்தும், உழன்றும் வந்த கொடூரங்களிலிருந்து நீதி உணர்வு என்ற மனநிலை அவனுக்குள்ளே உருவாகி இருக்கிறது. ஒரு நீதியுணர்ச்சி மனநிலையும், ஒரு மிருக உணர்ச்சி மனநிலையும் கொண்ட பிளவுபட்ட மனதோடுதான் எப்போதும் அவன் அலைகிறான். இந்த இரு மனநிலைகளின் மோதலில் நீதியுணர்ச்சி மேலெழும்போது தான் கவிதை எழுதுவதும் நிகழ்கிறது. எனவே கடைசி மனிதன் உள்ள வரையில் கவிதை எழுதும் மனிதனும் இருப்பான்.

கலை வடிவத்தைச் சக மனிதனை ஒடுக்கவும் வெறுக்கவும் கருவியாகப் பயன்படுத்தும் கீழ்மையான மனப்போக்கு ஏன் உருவாகிறது?

நீதியுணர்ச்சி அல்லது உண்மையை அறியும் திறன் இல்லாதவர்கள் கலை வடிவங்களை உருவாக்குவதற்குத் தகுதி இல்லாதவர்கள். அவர்கள் பக்கம் பக்கமாக எழுதுவது வெறும் சொற்குப்பைகள். ஆரவாரக் கூப்பாடுகள். உண்மையான கலையின் அறக்குரலைக் கேட்காதபடி அவர்களின் மலினமான உணர்வுகள் மேலோங்குவதனால் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்.

- தொடரும்.

மொழிபெயர்ப்புச் சிறுகதை

- பிரெஞ்சு மூலம் : கீ டு மோப்பஸான்
- ஆங்கிலத்தில் : குட்டென்பொர்க் திட்டத்தின் மொழிபெயர்ப்புப் பதிப்பு
- தமிழில் : கார்குழலி
- ஓவியங்கள் : அன்பழகன்



வைர அட்டிகை

அந்தப் பெண் அழகும் இனிமையும் வனப்பும் கொண்ட இளம் வயதினள். விதியின் சூழ்ச்சியால் சாதாரண எழுத்தர்களின் குடும்பத்தில் பிறந்துவிடும் உயிர்களில் ஒருத்தி. பணமும் மேன்மையும் தனித்துவமும் வாய்ந்த ஆண்மகனால் காதலிக்கப்பட்டு மணமுடிக்கத் தேவையான வரதட்சிணையோ பரவலான அறிமுகமோ இல்லாதவள். அதனால் அரசு பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சகத்தில் பணிபுரிந்த ஒரு சாதாரண எழுத்தரை மணம்புரிய ஒத்துக்கொண்டாள்.

அவளால் நன்றாக உடுத்திக்கொள்ள முடியாது என்பதால் எளிமையாக உடுத்திக்கொண்டாள். ஆனால் எங்கோ உயர்ந்த நிலையில் இருந்து திடீரெனக் கீழே தள்ளப்பட்டதுபோல வருத்தம் கொண்டாள். பெண்களுக்குக் குடும்பம் அல்லது பிறப்பினால் உண்டாகும் படிநிலை என்பது கிடையாது. அழகு, நளினம், எழில் போன்றவை அவற்றின் இடத்தைப் பிடித்துவிடுகின்றன. இயற்கையாக அமைந்த கூர்மதி, நேர்த்தியான விஷயங்களில் கொண்டுள்ள இயல்பான நாட்டம், நெகிழும்தன்மையுள்ள மனம் இவையனைத்தையும் கொண்ட எந்தப் பெண்ணும் மேன்மையான இடத்தில் இருக்கும் சீமாட்டிகளுக்கு இணையாக வைக்கப்படுகிறாள்.

தான் நாகரிக வாழ்க்கையையும் ஆடம்பரத்தையும் அனுபவிக்கப் பிறந்தவள் என்று நம்பிய மத்தீல்டு முடிவேயில்லாத துயரத்தில் ஆழ்ந்தாள். அவளுடைய வசிப்பிடத்தின் வறுமையும் சுவர்களின்

வெறுமையும் பழுதுபட்ட நாற்காலிகளும் அருவருப்பூட்டும் திரைச்சீலைகளும் வேதனையூட்டின. அவளுடைய நிலையில் இருக்கும் வேறு எந்தப் பெண்ணும் இதுகுறித்தெல்லாம் நினைத்திருக்கக்கூட மாட்டாள். ஆனால் இவையெல்லாம் அவளைத் துன்புறுத்தி ஆத்திரமூட்டின. தினப்படி வீட்டு வேலைகளில் உதவியாக இருந்த ப்ரெட்டோன் குடியானவப் பெண்ணைப் பார்க்கும்போது மனக்கசப்பூட்டும் துயரமும் குழப்பமூட்டும் கனவுகளும் தோன்றின.

வேலைப்பாடுகளுடன் கூடிய கீழை நாடுகளின் ஓவியச்சுருள் தொங்கும் சுவர்கள்; ஒளிசிந்தும் உயரமான வெண்கல மெழுகுவர்த்தி தீபக்கால்கள்; எரிந்துகொண்டிருக்கும் கணப்படுப்பின் சூட்டில் பிரம்மாண்டமான நாற்காலிகளில் அமர்ந்தபடியே உறங்கும் குறுங்காற்சட்டை அணிந்த இரண்டு ஏவலாட்கள் -- இவையெல்லாம் இருக்கும் அமைதியான கூடத்தைக் கற்பனை செய்துகொண்டாள். மாலை நேரத்தில் நெருக்கமான நண்பர்களுடனும் எல்லாப் பெண்களும் பொறாமை கொள்ளும் புகழ்பெற்ற ஆண்களுடனும் அரட்டை அடிக்க ஏதுவான மனமயக்கும் நறுமணம் வீசும் வாசனைத் திரவியம் தெளித்த வரவேற்பறைகளையும் அவற்றுக்கு அழகு சேர்க்கும் பழைமை வாய்ந்த பட்டுகள் தொங்கும் சுவர்களையும் விலைமதிப்பற்ற அலங்காரப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்ட அழகான வேலைப்பாடுடைய மேசைகளையும் நினைத்துப் பார்த்தாள்.

இரவு உணவு சாப்பிடுவதற்காக வட்ட வடிவமான மேசையில் கணவனோடு அமர்ந்தாள். அதன்மீது இருந்த மேசைத்துணி விரிக்கப்பட்டு மூன்று நாளாகி இருந்தது. சூப் வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தைத் திறந்த அவள் கணவன் "ஆஹ், அருமையான சூப். வேற எதுவும் இதவிட சுவையா இருக்கமுடியாது," என்று மகிழ்ச்சியோடு சொன்னான். அவளோ அறுசுவை விருந்தையும் பளபளக்கும் வெள்ளிப் பாத்திரத்தையும் புகழ்மிக்க மனிதர்களின் ஓவியங்களைத் தாங்கிய சுவரையும் தேவதை உலகம் போன்ற வனத்தின் நடுவே பறக்கும் விநோதமான பறவைகளையும் நினைத்துக்கொண்டாள். தாழ்வான குரலில் ஆண்கள் தன்னிடம் பேசுவதை புன்னகை மாறாத முகத்துடன் கேட்டபடியே அற்புதமான வேலைப்பாடுகொண்ட தட்டுகளில் பரிமாறப்படும் சுவைமிகுந்த உணவையும் இளஞ்சிவப்பு நிற ஆற்றுமீனையும் காடைக் கறியையும் சுவைப்பதையும் கற்பனை செய்துகொண்டாள்.

அவளிடம் மாலைநேர விருந்துக்கான உடையோ நகையோ இல்லை. ஆனால் அதைத் தவிர வேறு எதுவும் அவள் மனதுக்குப் பிடிக்கவில்லை. தான் அவற்றையெல்லாம் அனுபவிப்பதற்காகவே பிறந்தவள் என்று நினைத்தாள். எல்லோரின் மனதையும் மகிழ்விப்பவளாக, எல்லோரும் பார்த்துப் பொறாமைப்படுபவளாக, எல்லோரையும் வசீகரிப்பவளாக எல்லோரும் நாடும் ஒருத்தியாக இருக்கவேண்டுமென ஆசைப்பட்டாள்.

அவளுக்கு ஒரு தோழி இருந்தாள், பள்ளியில் அவளோடு படித்தவள், வசதி படைத்தவள். அவளைப் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பி வரும்போது மனவருத்தம் ஏற்படுவதால் இப்போதெல்லாம் அவளைச் சந்திக்கப் போவதேயில்லை.

ஒருநாள் மாலை வீடு திரும்பியதும் வெற்றிக்களிப்போடு கையில் இருந்த கடித உறையைக் காட்டினான் அவள் கணவன்.

"இந்தா, இது உனக்குத்தான்," என்றான்.

அவசர அவசரமாக உறையைக் கிழித்து உள்ளே இருந்த அச்சடிக்கப்பட்ட அழைப்பிதழைப் படித்தாள்:

"அரசு பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சர் மற்றும் அவர் மனைவி திருமதி ஜியார்ஜஸ் ராம்பனூ ஜனவரி 18-ஆம் தேதி, திங்கட்கிழமை மாலை அமைச்சகத்தின் மாளிகையில் நடக்கும் விருந்துக்கு திரு மற்றும் திருமதி லோயிசெலை அன்புடன் அழைக்கிறார்கள்."

கணவன் எதிர்பார்த்ததைப் போலக் குதூகலம் கொள்ளாமல் அழைப்பிதழை மேசையின்மீது கோபமாக விட்டெறிந்து முணுமுணுத்தாள்.

"இத வெச்சுக்கிட்டு என்ன செய்யச் சொல்றீங்க?"

"என்னாச்சு கண்ணே, நீ சந்தோஷப்படுவேன்னு நினைச்சேனே. நீ வெளியே எங்கேயும் போறதில்லை. இது ரொம்ப நல்ல வாய்ப்பு. இந்த அழைப்பிதழை வாங்கறதுக்குள்ள எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா? எல்லோரும் இந்த விருந்துக்குப் போகணும்னு விருப்பப்படறாங்க. குறிப்பிட்ட எழுத்தர்களுக்கு மட்டும்தான் அழைப்புத் தர்றாங்க. எங்க துறையில் இருக்கும் முக்கியமான அதிகாரிங்க எல்லோரும் வருவாங்க."

அவனை நோக்கி எரிச்சல் உமிழும் பார்வையைச் செலுத்தியபடி பொறுமையிழந்த குரலில் கேட்டாள்:

"நா என்னத்தைப் போட்டுக்கிட்டு வர்றதாம்?"

அவன் அதைப்பற்றி யோசித்திருக்கவில்லை. தடுமாறியபடி பதில் சொன்னான்:

"வழக்கமா நாடகம் பார்க்கப் போகும்போது ஒரு கவுன் போட்டுக்குவியே. அது அழகா இருக்குமே."

மனைவி அழுவதைப் பார்த்ததும் அதிர்ந்துபோய் பேசுவதை நிறுத்தினான். அவள் கண்களின் ஓரங்களில் திரண்ட கண்ணீர் முத்துக்கள் கன்னத்தில் வழிந்ததன.

"என்ன ஆச்சு, என்ன ஆச்சு?" என்று கேட்டான்.

மிகுந்த சிரமத்துடன் துக்கத்தை மறைத்துக்கொண்டு ஈரமான கன்னத்தைத் துடைத்தபடி அமைதியான குரலில் சொன்னாள்:

"ஒண்ணுமில்ல. என்னிடம் நல்ல கவுனே இல்லை. என்னால இந்த விருந்துக்கு வர முடியாது. உங்க நண்பர்கள் யாரோட மனைவியாவது நல்ல கவுன் வெச்சிருப்பாங்க. அவங்ககிட்ட இதக் கொடுத்திடுங்க."

அவன் மனவருத்தம் கொண்டான். பிறகு, "இங்கே பாரு மத்தீல்டு. இந்த விருந்துக்கேத்த மாதிரி, வேறு விசேஷங்களுக்கும் போட்டுக்கறா மாதிரி நல்ல கவுன் ஒன்னு வாங்கணும்னா எவ்வளவு ஆகும் -- எளிமையா இருக்கிற கவுன்?'

சில நொடிகள் யோசித்தாள். என்ன விலையைச் சொன்னால் அலறியடித்து உடனடியாக மறுக்காமல் இருப்பான் என்பதைக் கணிப்பதற்காக ஏதோ கணக்குப் போட்டாள்.

இறுதியாக, தயங்கியபடி பதில் சொன்னாள்:

"எனக்குச் சரியாத் தெரியலை. ஆனா, நானூறு பிரான்க் இருந்தால் நல்லதா ஏதாவது வாங்கலாம்."

அவன் முகம் வெளிறியது. அதே அளவு பணத்தைத்தான் துப்பாக்கி வாங்குவதற்காகச் சேமித்து வைத்திருந்தான். அடுத்த கோடையில் நான்டெர் சமவெளிக்கு லார்க் பறவைகளை வேட்டையாடும் நண்பர்களோடு போகும்போது தனக்கென அதை வாங்கிக்கொள்ளவேண்டும் என்று நினைத்திருந்தான்.

ஆனால், "சரி, உனக்கு நானூறு பிராங்க் தர்றேன். அழகான கவுன் ஒன்னு வாங்கிக்கோ," என்று சொன்னான்.

விருந்துக்கான நாள் நெருங்க நெருங்க திருமதி லோயிசெல் ஏனோ வருத்தத்தோடும் பதட்டத்தோடும் காணப்பட்டாள். ஆனால், அவளுடைய கவுன் என்னவோ தயாராகத்தான் இருந்தது. அவளது இயல்பைக் கவனித்த கணவன் அவளிடம் கேட்டான்: "என்னாச்சு? ரெண்டு மூணு நாளா என்னமோ மாதிரி இருக்கியே."

"விருந்தன்னைக்குப் போட்டுக்க என்கிட்ட ஒரு நகையுமில்லே. ஒன்னுகூட இல்லே. வெறுப்பாயிருக்கு. பிச்சைக்காரி மாதிரி இருப்பேன். இதுக்கு நான் உங்ககூட வராமலே இருக்கலாம்," என்று பதில்

சொன்னாள்.

“புதுப் பூவ வாங்கி வெச்சுக்கலாமே,” என்றான் அவன். “இப்போ அதுதான் புதுப்பாணியா இருக்கே. பத்து பிராங்குக்கு ரெண்டு மூணு அழகான புத்தம்புது ரோஜா கிடைக்கும்.”

அவள் சமாதானம் ஆகவில்லை.

“வசதியான பெண்களுக்கு நடுவுல எதுவுமில்லாத ஏழைபோல நிக்கிறது எவ்வளவு அவமானமான விஷயம் தெரியுமா?”

“முட்டாளா நீ!” சீறினான் கணவன். “போ, போயி உன் தோழி திருமதி ஃபோரெஸ்டியர்கிட்ட ஏதாவது நகையைக் கடன்வாங்கிப் போட்டுக்கோ. உனக்குத்தான் அவங்க ரொம்பப் பழக்கமாச்சே.”

உற்சாகத்தில் கத்தினாள், “ஆமால்ல. எனக்கு இது தோணவே இல்லையே.”

மறுநாள் தோழியிடம் போய் தன் கவலையைச் சொன்னாள்.

திருமதி ஃபோரெஸ்டியர் கண்ணாடி பதித்த உடை அலமாரியில் இருந்து ஒரு பெரிய நகைப் பெட்டியை எடுத்துவந்தாள். அதைத் திறந்து திருமதி லோயிசெல்லிடம் காட்டினாள்: “எது வேணும்னு பாரு, அன்பே.”

முதலில் கையில் அணிந்துகொள்ளும் பிரேஸ்லெட்டுகளைப் பார்த்தாள், அடுத்து ஒரு முத்துமாலை, விலைமதிப்புமிக்க கற்கள் பதித்த நிறைய வேலைப்பாடுகள் கொண்ட வெனீஷியன் சிலுவை பதக்கச் சங்கிலி என ஒவ்வொரு நகையாகக் கையில் எடுத்துப் பார்த்தாள். பிறகு, ஒவ்வொன்றையும் அணிந்துகொண்டு கண்ணாடியின் முன் நின்று பார்த்தாள். எதை அணிந்துகொள்ளலாம் என்று முடிவு செய்ய முடியவில்லை. அவற்றைத் திருப்பிக்கொடுக்கவும் மனம் வரவில்லை.

“வேற ஏதாவது இருக்கா?” என்று தயங்கியபடியே கேட்டாள்.

“இருக்கும், பாக்குறேன். உனக்கு என்ன பிடிக்கும்னு எனக்குத் தெரியலையே.”

திடீரென வழவழப்பான கறுப்புப் பெட்டி ஒன்றில் இருந்த அழகான வைர அட்டிகை ஒன்றைப் பார்த்ததும் அவள் இதயம் அடக்கமுடியாத ஆசையில் துடித்தது. அதை எடுக்கும்போது கை நடுங்கியது. தான் அணிந்திருந்த கழுத்துவரை மறைத்திருக்கும் ஆடைக்கு மேல் உயர்த்தி கிட்டத்தட்ட தொண்டைக்கு அருகில் அதை அணிந்தாள். கண்ணாடியில் தெரிந்த உருவத்தைத் தன்னையே மறந்துபோகும் பரவசத்துடன் பார்த்தாள்.

ஆவலும் சந்தேகமும் கலந்த குரலில் தயங்கியபடியே கேட்டாள். “இதைத் தர முடியுமா, இது மட்டும் போதும்?”

“ஓ, நிச்சயமா. எடுத்துக்கோ.”

தோழியைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டுவிட்டு அந்தப் பொக்கிஷத்தை எடுத்துக்கொண்டு ஓடினாள்.

விருந்து நாளும் வந்தது. திருமதி லோயிசெல்லின் நோக்கம் நிறைவேறியது. அங்கு வந்திருந்த எந்தப் பெண்ணைக் காட்டிலும் நேர்த்தியாக, வசீகரமாக, மலர்ச்சியோடும் உவகையோடும் இருந்தாள். வந்திருந்த ஆண்கள் அனைவரும் அவளைக் கவனித்தனர், பெயரைக் கேட்டனர், அவளுடைய அறிமுகத்தைப் பெற ஆவலாக இருந்தனர். அமைச்சகத்தின் இளம் அலுவலர்கள் எல்லோரும் அவளுடன் நடனமாடப் பிரியப்பட்டனர். அமைச்சரே அவளைப் பாராட்டினார்.

இன்ப போதையின் உச்சியில் பரவசத்தோடு நடனமாடினாள். தன் அழகின் வெற்றியிலும் புகழின் பெருமையிலும் எல்லாவற்றையும் மறந்து ஆனந்த மேகத்தில் மிதந்தாள். அவளுக்குக் கிடைத்த பாராட்டு, போற்றுதல், அவள் மனதில் கிளர்ந்த ஆசை இவையனைத்தும் எந்தப் பெண்ணும் சுவைக்க ஆசைப்படும் இனிமையான வெற்றிக் களிப்புதானே.

விருந்தில் இருந்து கிளம்பும்போது அதிகாலை நான்கு மணியாகி இருந்தது. நள்ளிரவு ஆகும்போதே பக்கத்தில் இருந்த ஒரு அறையில் விருந்துக்கு வந்திருந்த வேறு மூன்று ஆண்களோடு படுத்து உறங்கிவிட்டிருந்தான்

அவள் கணவன். இவளைப் போலவே அவர்களின் மனைவியரும் விருந்தை மகிழ்ச்சியோடு அனுபவித்துக்கொண்டு இருந்தனர்.

அவனிடம் இருந்த சால்வையை அவள் தோளைச் சுற்றிப் போர்த்தினான். அவள் வழக்கமாகப் பயன்படுத்தும் எளிமையான அந்தச் சால்வை பறைசாற்றிய ஏழ்மை அவளுடைய விலையதிகமான நாகரிகமான விருந்து கவுனோடு ஒத்துப்போகவில்லை. அதை உணர்ந்ததும் விலைமதிப்புமிக்க விலங்கு மென்மயிர்த் தோல் சால்வையைப் போர்த்திக்கொண்டு இருக்கும் மற்ற பெண்கள் தன்னைப் பார்த்து ஏதும் சொல்வதற்கு முன்னால் அங்கிருந்து கிளம்பிவிட வேண்டும் என்று பரபரத்தாள்.

லோயிசெல் அவளைத் தடுத்து நிறுத்தினான். "கொஞ்சம் பொறு. வெளியே போனா குளிர் பிடிச்சுக்கும். வண்டியக் கூப்பிடறேன்," என்றான்.

அவன் சொல்வதைக் காதில் வாங்காமல் படியில் வேகவேகமாக இறங்கினாள். தெருவை அடைந்ததும் அங்கே ஒரு வண்டியும் இல்லை. தூரத்தில் போன வண்டிக்காரர்களை நோக்கிக் குரல் கொடுத்துப் பார்த்தனர்.

பிறகு சேயின் ஆற்றை நோக்கிக் குளிரில் நடுங்கியபடியே நடந்தனர். இறுதியில், ஓடத்துறைக்குப் பக்கத்தில் மிகவும் பழைமையான இரவு நேர வண்டியொன்றைத் தேடிப் பிடித்தனர். தங்களின் நேர்த்தியற்ற அவலட்சணமான உருவைப் பகலில் காட்ட அவமானம் கொண்டதோ என்பது போல இரவு நேரத்தில் மட்டுமே பாரிஸ் நகரத் தெருக்களில் அவற்றைப் பார்க்க முடிந்தது.

ரூ டி மார்ட்டியோவில் இருந்த அவர்களின் இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றது வண்டி. இருவரும் வருத்தத்தோடு படியேறி அவர்களின் அடுக்குமாடிக் குடியிருப்பை அடைந்தனர். அவளுக்கு எல்லாம் முடிந்து போயிருந்தது. அவனுக்கோ, மறுநாள் காலை பத்து மணிக்கு அமைச்சகத்தில் இருக்கவேண்டுமே என்ற சிந்தனை.

சால்வையை விலக்கிவிட்டு மீண்டும் ஒருமுறை தன் அழகைப் பார்ப்பதற்காகக் கண்ணாடியின் முன் நின்றாள். திடீரென அலறினாள். கழுத்தில் இருந்த அட்டிகையைக் காணவில்லை!

"என்ன ஆச்சு?" ஆடையைக் களைந்துகொண்டு இருந்தவன் பாதியில் நிறுத்திவிட்டு உரக்கக் கேட்டான்.

குழப்பத்தோடு அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"நான்... நான்... திருமதி ஃபோரெஸ்டியரின் அட்டிகையைத் தொலைச்சுட்டேன்," என்று அலறினாள்.

அதிர்ந்துபோய் எழுந்து நின்றான்.

"என்னது? எப்படி? எப்படி நடந்துச்சு?"

அவளுடைய ஆடை மடிப்பு, மேலங்கி, பாக்கெட்டு என எல்லா இடத்திலும் தேடினார்கள். எங்கும் இல்லை.

"விருந்துல இருந்து கிளம்பும்போது போட்டிருந்தியா?" என்று கேட்டான்.

"ஆமா, அமைச்சரோட வீட்டுல இருந்து வெளிய வரும்போது தொட்டுப் பார்த்தேன், இருந்துது."

"தெருவுல வரும்போது கீழே விழுந்திருந்தா சத்தம் கேட்டிருக்கும். ஒருவேளை வண்டியில விழுந்திருக்குமோ."

"அப்படித்தான் இருக்கும். வண்டியோட எண்ணைப் பாத்தீங்களா?"

"இல்லையே... நீ கவனிச்சியா?"

"இல்லையே."

இடி விழுந்ததுபோல ஒருவரை ஒருவர் பார்த்தனர். லோயிசெல் அவிழ்த்த ஆடையைத் திரும்பவும் அணியத் துவங்கினான்.

"நடந்து போறேன். வந்த வழியிலேயே போனாவேற எங்கியாவது விழுந்திருக்கான்னு பார்க்கலாம்."

வெளியே சென்றான். அவள் விருந்துக்குப் போட்டுச் சென்ற கவுனோடு நாற்காலியில் உட்கார்ந்து அவன் திரும்பி வருவதற்காகக் காத்திருந்தாள். உறங்கப்போகத் தெம்பில்லை.

உயிர்ப்பே இல்லாமல் சிந்தனையே இல்லாமல் அளவற்ற மன அழுத்தத்தோடு உட்கார்ந்து இருந்தாள்.

காலை ஏழு மணிக்குத் திரும்பி வந்தான். எதுவும் கிடைக்கவில்லை.

அடுத்து, காவல் தலைமையிடத்துக்குச் சென்றான். பிறகு, சன்மானம் தரப்படும் என்று அறிவிப்பு வெளியிடுவதற்காக நாளிதழ் அலுவலகத்துக்குச் சென்றான். வாடகை வண்டி நிறுவனங்களுக்குச் சென்று வந்தான் -- நம்பிக்கையின் கடைசிப் பொறி அவனை உந்தித் தள்ளியதில் எல்லா இடத்துக்கும் போய் வந்தான்.

அவளோ நாள் முழுவதும் எங்கும் நகராமல் காத்திருந்தாள். இந்தப் பயங்கரமான பேரிடர் நடப்பதற்கு முன்னால் இருந்த அதே கலக்கமூட்டும் பயத்தோடு இருப்பது போலவே உணர்ந்தாள்.

லோயிசெல் இரவுதான் வீடு திரும்பினான். முகம் வெளிறிப் போய்த் தக்கையாக இருந்தது. எதையும் கண்டுபிடிக்கவில்லை.

“உன்னோட தோழிக்குக் கடிதம் எழுது. அட்டிகையோட கொக்கிய நீ உடைச்சிட்டதால சரிசெய்யக் கொடுத்திருக்கேன்னு எழுது. அதுக்குள்ளே ஏதாவது ஏற்பாடு பண்ணுவோம்.”

அவன் சொன்னதை அப்படியே எழுதினாள். இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் வார இறுதியில் விட்டுப்போனது. அதற்குள் லோயிசெல்லுக்கு வயது ஐந்து வருடங்கள் கூடிவிட்டதுபோல இருந்தது. “இனி அந்த நகையை எப்படித் திருப்பிக் கொடுக்கிறதுன்னு யோசிக்கணும்.”

மறுநாள் நகைப்பெட்டியில் இருந்த பெயரைப் பார்த்து அந்தக் கடைக்குப் போனார்கள். கடைக்காரர் தன்னுடைய கணக்குப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தார்.

“அந்த அட்டிகையை நாங்க விக்கலை மேடம். எங்க பெட்டியை மாத்திரம் கொடுத்திருப்போம் போல.”

அதைப் போலவே இருக்கும் அட்டிகையைத் தேடி ஒவ்வொரு நகைக்கடையாக ஏறி இறங்கினார்கள். அதை நினைக்க நினைக்க விரக்தியும் துயரமும் மேலிட்டு நோயுற்றவர்கள் போல ஆனார்கள்.

கடைசியில் பெலே ரோயலில் இருந்த கடையொன்றில் தொலைந்துபோன வைர அட்டிகையைப் போலவே வேறொன்றைக் கண்டுபிடித்தார்கள். அதன் விலை நாற்பதாயிரம் பிராங்க். முப்பத்தாறாயிரம் பிராங்க்குக்குக் கொடுப்பதாகச் சொன்னார் கடைக்காரர்.

அடுத்த மூன்று நாளைக்கு அதை விற்காமல் வைத்திருக்கச் சொல்லி கடைக்காரரிடம் கேட்டுக்கொண்டார்கள். கூடவே பிப்ரவரி மாத இறுதிக்குள் தொலைத்த அட்டிகை திரும்பவும் கிடைத்துவிட்டால் இதை அவர் முப்பத்து நாலாயிரம் பிராங்க்குக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் பேரம் பேசிவைத்தார்கள்.

லோயிசெல்லிடம் அவன் தந்தை விட்டுச்சென்ற பதினெட்டாயிரம் பிராங்க் இருந்தது. மீதிப் பணத்தைக் கடன்வாங்க முடிவு செய்தான்.

ஒருவரிடம் ஆயிரம் பிராங்க், மற்றொருவரிடம் ஐநூறு, அங்கே ஐந்து

லூயி, இங்கே மூன்று லூயி என்று ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு தொகையைக் கடன் வாங்கினான். எல்லோருக்கும் பத்திரம் எழுதிக்கொடுத்தான், அழிவைத் தரக்கூடிய பொறுப்பென்றாலும் அதை ஏற்றுக்கொண்டான், கடும் வட்டி வாங்குபவர் உட்பட எல்லாவிதமான கடன்காரர்களிடமும் கடன் வாங்கினான். தன் வாழ்நாள் முழுவதையும் அடகுவைத்தான். தன்னால் நிறைவேற்ற முடியுமா என்று நினைத்துக்கூடப் பார்க்காமல் ஒவ்வொரு பத்திரத்திலும் கையெழுத்துப் போட்டான். இனி வரவிருக்கும் தொல்லைகளை நினைத்துப் பயப்படவில்லை. அவன்மேல் படரப் போகும் கருந்துயரத்தை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. உடல் அளவிலும் மனதளவிலும் தான் படப்போகும் துன்பங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் புதிய அட்டிகையை வாங்கப் போனான். நகைக் கடைக்காரரின் மேசைமீது முப்பத்து ஆறாயிரம் பிராங்க்கை வைத்தான்.

திருமதி ஃபோரெஸ்டியரின் அட்டிகையைத் திருப்பிக் கொடுப்பதற்காகத் திருமதி லோயிசெல் போனபோது, "கொஞ்சம் சீக்கிரமாத் திருப்பிக் கொடுத்திருக்கலாமே. எனக்குத் தேவைப்பட்டது," என்று அவள் காட்டமாகச் சொன்னாள்.

அவள் பயந்ததுபோலப் பெட்டியைத் திறந்து பார்க்கவில்லை தோழி. தான் பொருளை மாற்றி வைத்திருப்பது தெரிந்தால் என்ன நினைப்பாள், என்ன சொல்லுவாள். திருமதி லோயிசெல்லைத் திருடி என்று நினைக்கமாட்டாளா?

அன்று முதல் பொருள் இல்லாதவர்களின் கொடூரமான வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்துகொண்டாள் திருமதி லோயிசெல். இருந்தாலும் தன் நிலைமையைத் தைரியமாக எதிர்கொண்டாள். அச்சமூட்டும் கடனை அடைத்தாக வேண்டும். அவள் அதைக் கட்டி முடிப்பாள். வீட்டுப் பணியாளை நிறுத்தினார்கள். வீட்டை மாற்றினார்கள். ஒரு கட்டிடத்தின் மேற்கூரைக்கு நேர்கீழே இருக்கும் அறையை வாடகைக்கு எடுத்தார்கள்.

கடுமையான வீட்டு வேலையையும் வெறுப்பூட்டும் சமையலறைப் பொறுப்புகளையும் செய்யக் கற்றுக்கொண்டாள். எண்ணெய்ப் பிசுக்கான பாத்திரங்களைக் கழுவியதில் மென்மையான விரலிலும் இளஞ்சிவப்பு நிற நகத்திலும் அழுக்குப்படிந்தது. அழுக்குத் துணி, சட்டை, அடுப்படித் துணி எல்லாவற்றையும் கழுவிக் காயப்போட்டாள். அழுக்கு நீரைக் கீழே இறங்கிச் சென்று தெருவில் ஊற்றிவிட்டு நல்ல தண்ணீரை மூச்சுவாங்கியபடி மேலே தூக்கிவந்தாள். சாதாரண மக்களைப்போல உடை அணிந்து பழக்கடை, மளிகைக்கடை, இறைச்சிக்கடை என எல்லா இடத்திலும் அடித்துப் பேரம்பேசி ஒவ்வொரு காசாகச் சேமித்தாள்.

ஒவ்வொரு மாதமும் சில கடன்களைக் கட்டி முடிக்கவேண்டி இருந்தது. சிலவற்றைப் புதுப்பிக்கவோ காலத்தை நீட்டிக்கவோ வேண்டியிருந்தது.

அவள் கணவன் மாலை நேரத்திலும் ஒரு கடையில் கணக்கு எழுதினான். இரவுகளில் பத்திரங்களைப் பதிவெடுக்கும் பணியைச் செய்தான். ஒரு பக்கத்துக்கு ஐந்து சூ கிடைத்தது. இப்படி ஒரு வாழ்க்கையைப் பத்து வருடம் வாழ்ந்தார்கள்.

பத்தாம் வருடத்தின் முடிவில் எல்லாவற்றையும் கட்டி முடித்திருந்தார்கள். எல்லாவற்றையும். அவற்றுக்கான கடும் வட்டிக்கான வட்டியையும் சேர்த்து.

திருமதி லோயிசெல் பல வயது கூடியது போல இருந்தாள். வசதியற்ற குடும்பத்துப் பெண்ணாகவே மாறிவிட்டாள் -- திடமும் வலுவும் கூடவே கரடுமுரடான பழக்கவழக்கமும் கொண்டவளாகவும்; கலைந்த முடியும் நேர்த்தியற்ற உடையும் உழைத்துக் கறுத்த கைகளைக் கொண்டவளாகவும். நீரை அள்ளித் தெளித்துத் தரையை அலம்பிவிடும்போது உரத்த குரலில் பேசினாள். ஒரு சில நாட்கள், கணவன் அலுவலகத்தில் இருக்கும்போது, ஜன்னலின் அருகே உட்கார்ந்து அந்தக் கேளிக்கை மிகுந்த

மாலை நேரத்தை நினைத்துக்கொள்வாள். அந்த விருந்தில் தான் எவ்வளவு அழகாக இருந்தோம் என்றும் மற்றவர்களால் எப்படியெல்லாம் ரசிக்கப்பட்டோம் என்றும் நினைத்துப் பார்த்தாள்.

நெக்லெஸைத் தொலைக்கவில்லை என்றால் என்ன ஆகியிருக்கும்? யாருக்குத் தெரியும்? யாருக்குத் தெரியும்? வாழ்க்கை எவ்வளவு விநோதமாகவும் நொடியில் மாறும் தன்மை கொண்டதாகவும் இருக்கிறது! நம் வாழ்க்கையை வளர்ச்சியடையச் செய்யவோ பாழ்படுத்தவோ ஒரு சின்ன விஷயம் போதுமானதாக இருக்கிறதே!

ஒரு ஞாயிற்றுக்கிழமை அந்த வாரத்தின் வேலையெல்லாம் முடித்துவிட்டு புத்துணர்ச்சி பெறுவதற்காகச் சாம்ப்ஸ் எலிசீஸுக்கு உலவப் போயிருந்தாள். அப்போது ஒரு பெண் தன் குழந்தையை அழைத்துக்கொண்டு நடந்துசெல்வதைப் பார்த்தாள். அது திருமதி ஃபோரெஸ்டியர். இன்னமும் இளமையாக, இன்னமும் அழகாக, இன்னமும் வசீகரமாக இருந்தாள்.

திருமதி லோயிசெல்லின் மனம் நெகிழ்ந்தது. அவளிடம் பேசலாமா? ஆமாம், நிச்சயமாகப் பேசவேண்டும். அவள்தான் இப்போது எல்லாக் கடனையும் கட்டி முடித்துவிட்டாளே. இப்போது அவளிடம் அதைச் சொல்லலாம். ஏன் சொல்லக் கூடாது?

அவளருகே சென்றாள்.

“வணக்கம், ஜீன்.”

சாதாரணப் பெண்ணொருத்தி மிகுந்த பரிச்சயம் உள்ளவளைப்போலத் தன்னை அழைப்பதை எதிர்பார்க்கவில்லை அந்தப் பெண். அடையாளம் தெரியாமல் தடுமாறினாள்.

“ஆனா, நீங்க யாருன்னு தெரியலையே. நீங்க வேற யாரோன்னு நினைச்சுட்டீங்க போல.”

“இல்ல, நான்தான் மத்தீல்டு லோயிசெல்.”

அவள் தோழி ஆச்சரியத்தில் கத்தினாள்.

“ஓ, என் பாவப்பட்ட மத்தீல்டு! எவ்வளவு மாறிப்போயிட்டே!”

“ஆமாம், கடைசியா உன்ன பார்த்த பிறகு வாழ்க்கையே சிரமமா இருக்கு. வறுமையில இருக்கேன். எல்லாம் உன்னாலதான்!”

“என்னாலயா! எப்படி?”

“அமைச்சகத்தில் நடந்த விருந்துக்குப் போட்டுக்கிட்டுப் போக உன்னோட வைர அட்டிகையைக் கடன் குடுத்தியே, ஞாபகம் இருக்கா?”

“ஆமா, அதுக்கென்ன?”

“நா அத தொலைச்சிட்டேன்.”

“என்ன சொல்றே? நீதான் அத திருப்பிக் கொடுத்திட்டியே.”

“நான் உன்கிட்ட கொண்டுவந்து கொடுத்தது அது மாதிரியே இருக்கும் வேறொரு அட்டிகை. அதுக்கான கடனைக் கட்டிமுடிக்க எங்களுக்குப் பத்து வருஷம் ஆயிடுச்சு. எந்த வசதியும் இல்லாத எங்களுக்கு அது சுலபமான விஷயமில்லேன்னு உனக்குப் புரியும்னு நினைக்கிறேன். ஒரு வழியா அதுக்கான கடனைக் கட்டி முடிச்சுட்டோம். இப்பதான் எனக்கு சந்தோஷமா நிம்மதியா இருக்கு.”

திருமதி ஃபோரெஸ்டியர் அதிர்ந்துபோய் நின்றாள்.

“என்னோடதுக்குப் பதிலா வைர அட்டிகை வாங்கிக் கொடுத்தேன்னா சொல்லற?”

“ஆமா, நீ அத கவனிச்சிருக்க மாட்டே. இரண்டும் ஒரேபோல இருந்துச்சு.”

மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கும் ஆனால், அதே நேரத்தில் கள்ளங்கபடம் அற்ற புன்னகை ஒன்றைப் புரிந்தாள்.

மனம் நெகிழ்ந்துபோன திருமதி ஃபோரெஸ்டியர் அவள் கைகளைப் பற்றிக்கொண்டாள்.

“ஓ, என் பாவப்பட்ட மத்தீல்டு! என் அட்டிகை வெறும் பசையால் செய்தது. அதோட மதிப்பு மிஞ்சிப்போனா வெறும் ஐந்நூறு பிராங்க்தான் இருக்கும்!”

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி -2020

முடிவுகள்

படைப்பு குழுமம் நடத்திய கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டியின் முடிவுகளை நடுவரான கவிஞர் யவனிகா ஸ்ரீராம் அவர்கள் 26-12-2020 அன்று மாலை 6 மணிக்கு படைப்பு டிவி நேரலையில் தோன்றி அறிவிப்பு செய்து உரையாற்றினார்.

முதல் பரிசு	ரூ.10000
இரண்டாம் பரிசு	ரூ.5000
மூன்றாம் பரிசு	ரூ.2000
சிறப்பு பரிசு (தலா)	ரூ.1000

பரிசு பெற்ற கவிதைகள் இங்கு பிரசுரமாகின்றன. பங்களிப்பு செய்த அனைவருக்கும், வாகை சூடியவர்களுக்கும் வாழ்த்துக்கள்.

முதல் பரிசு (ரூ.10000) : கவிஞர் மௌனன் யாத்ரிகா
இரண்டாம் பரிசு (ரூ.5000) : கவிஞர் தங்கேஸ்
மூன்றாம் பரிசு (ரூ.2000) : கவிஞர் பிரபுசங்கர்.க
சிறப்பு பரிசுகள் (தலா ரூ.1000) : கவிஞர் ராம் பெரியசாமி
கவிஞர் கதிரவன் வீ
கவிஞர் அன்றிலன் குப்பிச்சிபுதூர்
கவிஞர் பி.கே.சாமி
கவிஞர் ஷெண்பா (மஞ்சு கண்ணன்)
கவிஞர் சே.தண்டபாணி தென்றல்
கவிஞர் மதுசூதன் எஸ்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

முதல் பரிசு பெறும் கவிதை

பதிவுஎண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

முதல் பரிசு பெற்ற

படைப்பாளி மௌனன் யாத்ரிகா

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020
நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்
(நடுவர்)

என்னிடம் கொஞ்சம் நிலம் இருக்கிறது
அதற்கு பரம்பரைச் சொத்தென்று பெயர்
முன்னொரு காலத்தில்
என் பாட்டன் அதில்
சோளம் விதைத்து மூட்டைக் கட்டினான்
மனித வளம் கூடிய அவனது குடும்பம்
அதை வைத்துத்தான் தம் சிறிய வயிற்றைக்
கழுவிக்கொண்டது
காலம் கேட்கும்போது கொடுக்கவென்று
அவன் தானியங்கள் சேமித்துக் கொள்வான்
அவற்றின் விளைச்சல் குறித்து
அவனுடைய குழுக்கள் கதை வைத்திருந்தனர்
அந்தக் கதைகள்
பூமிக்குள் இருக்கும் கிழங்கைப்போல்
அமைதியானவையாக இருந்தன
என்று சொல்லும் என் தகப்பனிடம்
நிலம் கை மாறியபோது
தானியங்களும் கை மாற்றப்பட்டன
குருவிகளின் சத்தம்
கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டிருந்த
அந்நிலத்தில்
என் தந்தையின் கால்கள் இறங்கியபோது
முப்போகம் என்ற சொல்லை
ஊர் மறந்தே போய்விட்டிருந்தது
விடாமல் மண்ணை முண்டிப் பார்த்துவிட்டு
ஏர் கலப்பையை உடைக்க
ஊரில் கோடரிக்காக அலைந்தவரை
நான் ஆற்றுப்படுத்தினேன்
என் கைக்கு மாற்றப்பட்ட
கரிவேலிகள் அடர்ந்த நிலத்தை
அன்று நான் வெறுமையாகப் பார்த்துக்கொண்டு
நின்றேன்
நான் விதைத்த தானியங்கள்
முளைத்து வெளியே வரவில்லை
உள்ளேயே இறந்து கொண்டிருந்தன
அதற்குள் எனக்குச் சொந்தமாக
நான்கு வயிறுகள் வேறு சேர்ந்திருந்தன
காலத்தின் முன் பருக்கைக்காக
மன்றாடினேன்
அது தன் வெடித்த பாதங்களை மறைத்துக்கொண்டது
மழைக்குறி பார்க்கும் கணியன்களில்
பலரும்
சுடுகாட்டில் வைக்கப்பட்டு விட்டார்கள்
ஊரின் மீது புழுதியை இறைத்துச் செல்கின்ற லாரிகள்
காய்ந்த ஆற்றில் இறங்குவதை
துயரத்துடன் வேடிக்கைப் பார்க்கும் நான்
என் தலைமுறையிடம் கை மாற்ற
வைத்திருக்கும்
தானியங்களை உண்ணத் தொடங்கிவிட்டேன்
என்னிடமிருக்கும் கொஞ்ச நிலத்தின்
கொஞ்ச நம்பிக்கையை எதிர்கொள்ள முடியாமல்
ஓவென்று அழுகிறேன்
என்னுடன் சேர்ந்து காலமும் தேம்புவதுபோல் ஒலி
கேட்கிறது
பாவம், காலத்துக்கும் தானியங்களுக்குமான உறவு
கொடுந்துயரமாக முறிந்து போனது.

- மௌனன் யாத்ரிகா

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

இரண்டாம் பரிசு பெறும் கவிதை

நாம் மழைக்காலத்தில் ஊர்ந்துபோகும் சிறகொடிந்த
ஈசல்பூச்சிகள்
மீன்முள்ளைப் போல நாவில் குத்திக்கொண்டிருக்கும்
துயரத்தை
பிடுங்கியெறிய பரிவானதொரு விரல் இல்லை
வாழ்வின்மீது கருப்புமச்சமாய் ஒட்டிக்கொண்டலையும்
ஒட்டுண்ணி
எப்படியும் உங்களுக்குப் பிரியமானதொரு உயிரைக்
குடித்துசென்றிருக்கும்
இந்நேரம் இது கனவாக இருக்கக்கூடாதா எனக்
கெஞ்சும்
இதயமெல்லாம் அதற்கொரு நாய்க்குட்டிதான்
தண்டவாளங்களில் வீட்டின் மேற்கூரைகளின்
தூக்குக்கயிறுகளில் மருத்துவமனைகளில்
குப்பைத்தொட்டிகளில் உடைந்து கொண்டேயிருக்கின்றன
நீர்க்குமிழ்களைப்போல கேட்பாரற்ற உயிர்கள்
ஆதாமின் தொண்டைக்குழிக்குள் உயிரை வாதித்தபடி
உருள்கின்றன
மெழுகு பூசிய விற்பனை ஆப்பிள்கள்
பெருந்தொற்றால் பீடிக்கப்பட்டுக் கைகழுவிவிட்ட காலம்
மறுகிநிற்கிறது துரோகத்திற்குச் சோரம்போன
ஆட்டுக்குட்டியாக
மனிதம் கூவிவிற்ற வல்லரசின் முகங்கள்
புதையுண்டு கிடக்கின்றன கருப்புவெள்ளை
புகைப்படத்திற்குள்
கடவுளின்பெயரால் கேட்கிறேன் வௌவால்கள்
எங்கிருந்து முளைத்தன?
பெருநிறுவன முதலாளிகளின் கருப்புநிற
மூளைக்குள்ளிருந்துதானா?
ஒருராஜா, மந்திரி, குடிமக்கள், பிச்சைக்காரர்கள்,
வேசைகள்
தகுதித்தேர்வுகள் புதைகுழிகள் புதைப்பதற்குப்
போதுமான பிணங்கள்
கைபேசிகள் கூண்டுக்கிளிகள் தற்கொலைக்கு ரம்மி
மிளகாய்பழங்கள்
பூமிப்பந்தை எடுத்து உருட்டிவிளையாடுகிறவனுக்குத்
தெரிகிறதா
வாழ்வென்னும் சிறுஅரிசித்துண்டை முட்டிமோதி
எடுத்துச்செல்லும்
சிற்றெறும்புகளைத் தாங்கள் பைத்தியமாக்கிச்
சுழலடிக்கிறோமென்று?

- தங்கேஸ்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

மூன்றாம் பரிசு பெறும் கவிதை

பதிவுஎண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

மூன்றாம் பரிசு பெற்ற

படைப்பாளி **பிரபுசங்கர்.க**

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020
நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்
(நடுவர்)

சோழிகளை உருட்டி ரேகைகளில் மேய்ந்து
பஞ்சாங்கத்தில் தேடியும் கணிக்க முடியவில்லை
எந்தச் சோதிடனாலும்
இப்பெருந்தொற்றுக் காலத்தை
மூக்கையும் வாயையும் சேர்த்து
மூடும் முகக்கவசங்கள்
பஞ்ச காலத்தின் வறுமையையும்
கொஞ்சம் சேர்த்து மறைத்திருக்கலாம்
முதலாளிகள் தனிமையிலிருந்தபடி
சொகுசாய் நீச்சல் குளங்களிலும்
மது போத்தல்களிலும் மூழ்கியிருக்க
வாழ்வாதாரத்தைத் தேடியலைந்து கொண்டிருக்கின்றனர்
அன்றாடம் காய்ச்சிகள்
சமூக இடைவெளியோடு
பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும்
பழகிக்கொள்ளுமாறு சொல்லாமல் சொல்லிவிட்டு
தங்கள் வேலைகளைப் பார்க்கின்றன அரசாங்கங்கள்
தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள
இருபது நொடிகளாவது
கைகளைக் கழுவ வேண்டுமென்பதை
மாற்றிப் புரிந்துகொண்டு
இருபது வருடங்கள் நம்மைப் பின்னோக்கி
அழைத்துச் சென்று மொத்தமாய்
கை கழுவி விட்டிருக்கிறது
செவிகளை இழந்த காலம்......

– பிரபுசங்கர் க

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

சிறப்பு பரிசு பெறும் கவிதை

பதிவுஎண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்
சிறப்பு பரிசு பெற்ற
படைப்பாளி ராம் பெரியசாமி
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020
நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்
(நடுவர்)

ஆன்மாவின் உதிரத்திலிருந்து பெறப்பட்ட
செம்மண் அப்பிய நிலங்களை
உதறித்தள்ளுகிறார் அப்பா..
ஒட்டுமொத்த நிலத்தின் வாசங்களும்
உள்நுழையாது வாசற்படியில் விழுந்து கிடக்கின்றன...
எத்தனையோ முறை கைகளால் தூற்றுகையில்
பறந்த புழுதிகள் அவரிடம் மண்டியிட்டு முத்தமிட்டு
அங்கேயே பரவிக் கிடந்தன..
தினதினம் வெயிலை உள்வாங்குகிற தன்
நெஞ்சாங்கூடுகளில் அவரின் நிழல்துளிகளையும்
அரவணைத்துக் கொள்கிற தாயவள்
காலடித்தடங்களால் புற்பூண்டு
முளைப்பதில்லையெனச் சொல்பவர்களின்
சொற்களையுடைத்து நெற்களை
விளைவித்த ஆபரண தேவதை..
ஒருமுறைகூட அப்பா எச்சிலைத் தன் மேல்
துப்பியதில்லையெனப் பெருமை கொள்ளுமாம் மழையிடம்..
இன்றோடு முடிந்த கிரையம்...
நோய் வறுமையறியாக் காலத்தில் நல்ல விலைக்கு
வித்திட்டதாக யாவரும் களிப்புற்றிருக்க
மண் அழுது கொண்டிருப்பதை இந்நேரம்
அவர் அறிந்திருக்கக்கூடும்– இன்னமும்
கை கால்களைக் கழுவ மனமில்லாமல் முற்றத்தில்
வெறித்தபடி உட்கார்ந்திருக்கிறார் அப்பா...!!!

– ராம்பெரியசாமி

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

சிறப்பு பரிசு பெறும் கவிதை

பதிவு எண்:521/2018

படைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

சிறப்பு பரிசு பெற்ற

படைப்பாளி **கதிரவன் வீ**

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020

நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்
(நடுவர்)

அவசரத்தில் அம்மாவின் முந்தியில் வியர்வை துடைப்பார் அப்பா
ஒழுகும் தம்பியின் மூக்கினைத் தன் பாவாடையில் துடைப்பாள் அக்கா
அழுக்குத் துணிகள் மூட்டையாக உருமாறித் தலைக்குத் தலையணை ஆகும்
உழுத களைப்பில் மாடு நீர் அருந்த உழவனும் குளிப்பான் அதே குளத்தில்
காக்கா கடி கடிச்சு நண்பன் கொடுத்த மிட்டாய் ஒழுகும் கடைவாயில்
தலைகீழா புள்ள இருக்குன்னு புள்ளதாச்சி கதறி அழ பதற்றம் இன்றி வெத்தல வாயோடு
புள்ளய வெளி எடுப்பா வைத்தியச்சி
சொம்புல புளிச் புளிச்சுன்னு துப்பி தீர்ப்பு சொல்வாரு நாட்டாம
சந்தனம் போல ஆளுக்கொரு
வெரல்ல தொட்டு எடுக்குங்க பெருசுங்க மூக்கு பொடிய
மண்ண மேடாக்கி இடைவெளி இல்லாம அமந்து படம் பாத்தது டெண்ட் கொட்டாய்ல மக்க
மொய் வைக்க முண்டி அடிச்சு முன்னேறும் சாதி சனம்
எந்த ஊட்டு எழவானா என்ன தன் உறவா கட்டி புடிச்சு ஒப்பாரி பாடின மனித மனங்கள்
எப்போதும் போல் வரிசையில் நகர்கின்றன எறும்புகள்
அலகோடு அலகு உரசிக் கொஞ்சுகின்றன பறவைகள்
கூட்டமாகத்தான் மேய்கின்றன ஐந்தறிவுகள்
இறந்த உறவைத் தொட்டழ முடியாமல் தள்ளி வைத்து வேடிக்கை காட்டுகிறது கை
கழுவிய காலம்.....

- கதிரவன் வீ

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

சிறப்பு பரிசு பெறும் கவிதை

பதிவுஎண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

சிறப்பு பரிசு பெற்ற

படைப்பாளி **அன்றிலன் குப்பிச்சிபுதூர்**

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020
நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்
(நடுவர்)

நேற்றைக் கருப்புக் கட்டையெனவும்
நாளையை வெள்ளைக் கட்டையெனவும் செய்த
பியானோ ஒன்றில்
இன்றைக்கான பாடலொன்றை இசைக்கிறது
பிரௌனியன் இயக்கத்தை
உள்வாங்கிய காலம்.
எழும் இசைக்கு நடுவே
இசைக் குறிப்புக்களை விழுங்கிய
இன்றைய நாளை
பசி கொண்டு மொழிபெயர்க்கிறது.
உடலில் பூத்த உவர்ப்பின் சித்திரத்தில்
நேர்த்திக்கடனென வந்த மண்குதிரையில்
அய்யனாரென வேட்டையாடியாய்
நகர்ந்தோடியபடியிருக்கிறது நிலவொளியில்.
தனது தீராப் பெரும்பசிக்கு
பசியோடு எதிர்படும் தலைகளையே
கேள்விகொண்டு வீழ்த்திப் புசித்துவிட்டு,
நகரும் பேரொளி அண்ட நதியில்
கைகழுவிய காலத்தின்
மிச்ச மணித்துளிகள்
வாழ்வின் கிளையொன்றில்
தொங்கியபடியிருக்கின்றன
விக்கிரமாதித்தனின் வேதாளமாய்
ஆயிரம் கேள்விகளோடு.

–அன்றிலன், குப்பிச்சிபுதூர்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

சிறப்பு பரிசு பெறும் கவிதை

பதிவுஎண்:521/2018

படைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

சிறப்பு பரிசு பெற்ற

படைப்பாளி பி.கே.சாமி

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020

நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்

(நடுவர்)

அடுக்களை
அஞ்சறைப் பெட்டி
குட்டித் தேன்கூடு
அம்மாவுக்கு.
இரவைக் கவிழ்த்த
கரிச்சட்டியில் இழைத்த மான் கொம்பு
வெற்றிலையில் மடித்துண்ண வயிற்று வலிபோக்கும்
மூலிகைத் தாவரமவள்.
வாசல் தெளித்த
சாணத்தில் எதிர் உயிரி
தயாரித்த தாய்வழிச் சமூகத்தில்
காய்ச்சி வடித்த
கஷாய டம்ளரில்
கசக்கும் வாழ்க்கை.
வடித்துப் புடைத்த
துரித உணவை
நெளியும் புழுக்களெனப் பிரகடனப்படுத்திய
இரைப்பை செல்கள்
ஊமுக்காக உதிர்ந்தன.
கையடக்கக் குட்டிச் சுவரில் முட்டிக் கொண்ட
தலைமுறைமீது கதிரியக்கக் காயங்கள்.
சட்டையைக் கிழித்துக்கொண்ட
ரசாயன நாகரீகம்
மயானத் துண்டுகளாக
மாற்றிக்கொண்டன
மாத்திரைகளை.
பாலித்தீன் சுற்றப்பட்ட
கேப்சூல் பிரேதங்கள்
கிருமி விதைகளென
சபிக்கப்பட்டன.
கண்ணாடி உருளையில்
கருத்தரித்த கடவுளின் செல்கள்
கூழாமுட்டைகளாக
மிதக்கின்றன
பனிக்குடத்தில்.
கடவுளின் கண்ணீரில்
கழுவிக் கொண்டிருந்த
கைகளில் வழிந்தது சாத்தானின் எச்சில்.

ஆய்வுக்கூடத்தில்
உருவாகிக் கொண்டிருக்கிறார்
அடுத்த கடவுள்.

– பி.கே.சாமி.

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

சிறப்பு பரிசு பெறும் கவிதை

பதிவுஎண்:521/2018

படைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

சிறப்பு பரிசு பெற்ற

படைப்பாளி **ஷெண்பா (மஞ்சு கண்ணன்)**

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020

நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்

(நடுவர்)

அப்பா வீட்டு யாகத்துக்கே பேசாம
போயிருக்கலாம் பொழுதே போகாமல்
கொட்டாவி விடுகிறாள் பார்வதி..

அம்மா வீட்டிற்குப் போன வள்ளியும் தெய்வானையும்
வரும் நாளிற்கு
ஆவலாய்க் காத்திருக்கிறான் முருகன்..

யாரும் வராததை உறுதிப்படுத்தி
அரைமுட்டியை நீட்டி நிமிர்த்தி
ஆசுவாசமாக அமர்கிறான் ஐயப்பன்..

ஊர் சுற்றவில்லை எனினும்
எச்சரிக்கையாகக் குளிக்கக் கிளம்பிய
விநாயகனுக்கு எட்டவில்லை முதுகு..

குதிரையை அவிழ்த்துவிட்டு
கள்ளிறக்கும் தோப்புக்குக் காலாற
நடந்துபோகிறான் ஐயனார்..

வெறித்த விழியும் துருத்திய
நாக்கும் வலிக்கிறதென கண்ணும்
வாயும் மூடுகிறாள் பத்ரகாளி..

கூழ் குடித்துச் சலித்துவிட்டதென
சூடான இட்லி காரச்சட்னி தேடித்
தனியே கிளம்புகிறாள் மகமாயி..

அரிசியே இல்லாத வீடுகளில்
வெண்ணை எப்படித் திருடுவதென
ராதையைக் கேட்கிறான் கண்ணன்..

எரித்த சாம்பலிலும் கொரோனா
இருக்குமோ என்ற பயத்தோடே
சுடுகாட்டில் ஆடுகிறான் சிவன்..

– ஷெண்பா

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

சிறப்பு பரிசு பெறும் கவிதை

பதிவு எண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

சிறப்பு பரிசு பெற்ற

படைப்பாளி **சே.தண்டபாணி தென்றல்**

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020
நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்
(நடுவர்)

தரித்த வேலிமுள் தோண்டிய பள்ளங்களில் ததும்பும் ரத்த அணுக்களின் உறைதலில் திரளும் ரணம் பிரியட்ஸ் பேடின் நவகிரகச் சுற்றுகளுக்கு நொடிமுள்ளின் பதியப்படாத சுவடுகளை எண்ணி இன்டகரல் கழுத்துக்கு மணியடிக்கும்.

பூனைத் தொட்டியில் மீந்த பழுத்த அரிசியின் சிரித்த முகத்தை அலாசியபின் தீப்பற்றவைத்தல் மீயாவ் அலாரத்தின் வால்யூமைக் கொஞ்சம் குறைக்கும்.

புரட்டாசி மழையின் பசுங்கூந்தலைத் தின்றபின் நடுக்காட்டுப் பிரசவத்தின் குட்டிகள் கொடாப்பை நோக்கி சூடு தணியாது இரண்டிரண்டாக இரண்டு நடையில் நான்கு நேர்கோடுகளின் ஆறு வாய்களும் நிறையவே விழுங்கிவிட்டன.

பாசம் வாழும் கழுவப்படாத குடத்தில் மீந்த மொடக்குகளை அதிகரிக்கும் பொருட்டு அவற்றை நீண்ட நேரம் தூரியாட வைக்கனும்.

மியாவ்... ம்மே... ம்ம்மா... அதிகரித்துவிட்ட நாளொன்றில் இறங்கும் சலைன் பிறந்த கடலை வீட்டுக்குத் திருப்புவது பற்றிய யோசனை மட்டும்தான் நீர்க்கடிகாரம்போல் முன்னும் பின்னும் நெளிகிறது.

– சே. தண்டபாணி தென்றல்

கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி - 2020

சிறப்பு பரிசு பெறும் கவிதை

பதிவுஎண்:521/2018

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

கை கழுவிய காலம்

என்ற கவிக்கோ பிறந்தநாள் பரிசுப்போட்டி கவிதைத் தொடரில்

சிறப்பு பரிசு பெற்ற

படைப்பாளி மதுசூதன் எஸ்

அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

09 - 11 - 2020
நாள்

கவிஞர் யவனிகா ஸ்ரீராம்
(நடுவர்)

மூக்குக் கண்ணாடி மாற்றுவதை
தள்ளிப் போட்டாயிற்று.
பால் அளவைக் குறைத்தாயிற்று
கைபேசி சிலவுகளைக் கட்டுக்குள் வைத்தாயிற்று.
காய்கறிகள் வாங்குவது ஆன மட்டும் குறைவு.
பரணில் எறிந்த பழைய இஸ்திரிப் பெட்டி
இப்போது புதிதாய்த் தெரிகிறது.
கிழிந்தாலும், உடுப்பைத் தைத்தணிகிறேன்.
தேய்ந்த செருப்புதான்
இன்னும் சில வாரம் தாங்கினால் பரவாயில்லை
இரண்டு ரூபாய் கருவேப்பிலையைக் கூட
இப்போது இலவசமாகக் கேட்க ஆரம்பித்து விட்டேன்.
முடிந்த வரை நடந்து போவதில்
பெட்ரோல் சிலவும் குறைவுதான்
மின்விளக்கு பயன் கூட பாதியளவுதான்
இதற்கு மேல் இன்னும் என்ன செய்வது
அரைச் சம்பளத்தில்..?
பசி மட்டும் மூன்று வேளை
தவறாமல் எடுக்கிறது.
கடவுளின் மன்றத்தில் முறையிட்டுப் பார்த்தேன்
அவனோடு காலமும்
கை கழுவி நகர்ந்து விடுகிறது.

– மதுசூதன்.எஸ்

● ஆதிரன்

மனநிலைக் குறிப்புகள் 6

தத்துவ மனநிலை

தொகுத்தல் என்கிற வார்த்தை என்னை கிறங்கடிக்கச் செய்யும் சொற்களில் ஒன்று. ஒரு மனிதரை எப்படி தொகுப்பது எனச் சிந்திப்பது எனது மன விளையாட்டுகளில் ஒன்று. ஆரம்பத்தில் என் நண்பர்களை, உறவினர்களை அல்லது என்னுடன் பணிபுரியும் மனிதர்களை நான் எவ்வாறு புரிந்துகொண்டிருக்கிறேன் என்பதை அவர்களை ஒரு வாக்கியத்திற்குள் அடக்கிப் புரிந்துகொள்ள முயல்வேன். போகப்போக அது சிறந்த மன விளையாட்டாய் மாறி, சாலையில், சந்தையில் அல்லது பொதுவெளியில் பார்க்கும் மனிதர்களைப் பற்றி ஒரு பிம்பத்தை உருவாக்குவது என் பொழுதுபோக்காகி விட்டது.

மனிதரை அவர் வாழ்வை ஒரு வாக்கியத்திற்குள் அல்லது ஒரு சொல்லால் தொகுத்தல் என்பது ஒரு சுவாரஸ்யம். ஆனால் இது விளையாட்டு மட்டுமே. ஏனென்றால் பெரும்பாலும் இது தவறாக இருக்கும். ஏனென்றால் மனித வாழ்வு சூழல்களால் ஆனவை. அவைகளுக்கு ஒரு மனிதரை தனது இயல்பிலிருந்து சட்டென்று முழுதும் வேறொன்றாக மாற்றிவிடும் முழுத் திறமையும் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதனை மற்றொருவன், 'அவன் ஒரு முன்கோபி' என்று சொல்லுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த மனிதனும் தன்னை ஒரு 'முன்கோபி' என்று நம்புகிறான். இங்கே அவன் பொதுவாக 'முன்கோபி' என்று தொகுக்கப்படுகிறான். அப்படியென்றால் அவன் வாழ்நாள் முழுவதும் முன்கோபியாக இருக்க வேண்டுமா.. பொதுவாக அப்படித்தான். ஆனால் அவன் வாழ்வில் சட்டென்று ஏற்படும் அனுபவம் அவனது இந்தத் தொகுப்பு மனதிலிருந்து விடுபட வைக்கிறது என்றால், அதாவது ஒரு அனுபவம் அவனது வாழ்வின் மொத்த புரிதலையும் மாற்றி வேறொரு தொகுப்பிற்கு மாற்றி விடுகிறதென்றால் அது அவனது வாழ்வில் ஒரு குறிப்பிடப்படும்படியான 'உளவியல் திருப்பம்' எனலாம். இப்படி ஒருவனது பொதுவான தொகுப்பிலிருந்து வேறொரு தொகுப்பிற்கு, அதாவது முன்கோபி என்கிற தொகுப்பிலிருந்து 'சாந்தமானவன்' என்கிற தொகுப்பிற்கு மாறுதல் அடைகிறான் என்பதைத் தொகுப்பு மாறுதல் என்று உளவியலாளர்கள் சொல்கிறார்கள்.

ஆங்கிலத்தில் *paradigm shift* என இதை நான் புரிந்துகொள்கிறேன். இந்த பாரடிம் என்ற சொல்லுக்குச் சரியான தமிழ் வார்த்தை எனக்குப் பிடிபடவில்லை. கூகுள் சொல்லும் 'முன் உதாரணம்' என்கிற அர்த்தம் நிச்சயமாகச் சரியானது இல்லை. அதே சமயம் பெயர்ச் சொல் மற்றும் வினைச் சொல்லின் அனைத்து வடிவங்களும் என்கிற கூகுளின் விளக்கம் சுவாரஸ்யமாக உள்ளது. பாரடிம் என்பதைக் கருத்துக்களின் தொகுப்பு என்பதாகப் புரிந்து கொள்ளலாம்.

*1962*இல் அமெரிக்காவைச் சேர்ந்த தாமஸ் கன் *(Thomas Kuhn)* என்பவரால் இந்த பாரடிம் ஷிஃப்ட் கருத்து அறிவியல் ஆய்வுக்கூட புலத்தில் உருவாக்கப்பட்டது. புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் அதுவரையில் இருந்த விடைகள் முழுவதுமாக மாற்றப்படும் நிகழ்விற்கு இந்தப் பெயர் இடப்பட்டது. காட்டாக, சூரியக் குடும்பத்தில் பூமிதான் அனைத்துக்கும் நடுவில் இருக்கிறது என்ற தாலமியின் நிலைப்பாடு கோபர்னிகஸ்ஸின் கண்டுபிடிப்பான 'சூரியன்தான் நடுவில் இருக்கிறது' என்கிற விடையால் முழுதுமாக மாற்றப்பட்டுவிட்டதைச் சொல்லலாம். நியூட்டனின் இயற்பியல் விதிகள் சார்பியல் தத்துவம் வழியாகக் கற்றையியலுக்கு *(quantum physics)* வந்து சேர்ந்த வரலாற்றையும் பாரடிம் ஷிஃப்ட்டில் அடக்கலாம். பின்னால் இந்தக் கருத்துரு உளவியலின் அடிப்படை

விதிகளில் ஒன்றாக ஆகியது. மனித மனத்தின் ஒட்டுமொத்தக் கருத்துத் தொகுப்பு ஏதாவது ஒரு அனுபவம் மூலமாக முழுவதும் வேறொன்றாக மாற்றம் அடையும் பண்பைப் பற்றிய கல்வியாக இந்த பாரடிம் ஷிஃப்ட் உருவெடுத்துள்ளது.

இருத்தலியப் பண்பைப் பற்றிய கல்வியான ஒண்டாலஜி *(Ontology)* பற்றிய அடிப்படை புரிதலுக்கும் அறிவு தொடர்பான கல்வியான எபிஸ்டமாலஜி *(Epistemology)* தொடர்பாக அறிந்து கொள்ளவும் பாரடிம் ஷிஃப்ட் கருத்துரு அவசியம் என்கிறார்கள் உளவியலாளர்கள். பொதுவாக, சமூக அறிவியலில் ஆய்வு மேற்கொள்பவர்கள் கையாளும் ஒருசில விதிமுறைகளில் முக்கியமானவைகளான, நேர்மறைவாதம் *(positivism)* பொருள்விளக்க வாதம் *(Interpretivism)* மற்றும் பகுப்பாய்வுக் கொள்கை *(critical theory)* ஆகியவற்றை ஒருவிதக் கலவையாக விவரிக்க முயல்கிறது இந்த பாரடிம் ஷிஃப்ட். ஒருவகையில் இந்த விதிமுறைகள் எல்லாம் தொகுப்பு நிலை *(paradigm)* வகைமைகள். சமூகவியலிலும் உளவியலிலும் உருவாகும் பண்பு மாற்றங்கள், அளவு மாற்றங்கள் ஆகியவற்றின் இயக்க விதிகளை விவரிக்கிற பண்பாக இருக்கிறது பாரடிம் ஷிஃப்ட். மொத்தத்தில் பாரடிம் ஷிஃப்ட் ஐ புரிந்து கொள்வது என்பது சமூக அறிவியல் மற்றும் உளவியல் ஆகியவற்றைப் புரிந்துகொள்வது என்பதாகிறது. சரி, பாரடிம் ஷிஃப்ட் என்பது தத்துவமா எனக் கேட்டால், தத்துவத்திற்கும் கோட்பாட்டிற்கும் உள்ள சம்பந்தங்களைப் பற்றிச் சொல்லவேண்டி வரும். எனவே ஒரு சிரிப்புக் குறியுடன்...

• • •

ஓவிய மனநிலை

நாம் உருவாக்கியிருக்கும் இந்த உலகத்திற்கு நமது சிந்தனைச் செயல்பாடுதான் *(process of thinking)* காரணம் என்பது ஒரு பிரசித்தமான சொலவடை. சில மனிதர்களின் சிந்தனைச் செயல்பாடுகள் தமது வாழ்க்கை மட்டுமன்றி உலக நடைமுறைச் சிந்தனையையே மாற்ற வல்லது. எனக்கு உடனடியாக நினைவுக்கு வருபவர்கள் கார்ல் மார்க்ஸ்ம் கரம்சந்த் காந்தியும். இவர்களைப் போல மனிதகுல வரலாற்றில் எண்ணிலடங்கா மனிதர்களின் சிந்தனைப் போக்கும் அவர்களது செயல்பாடுகளும் ஒட்டுமொத்த மனிதச் சிந்தனையை மடைமாற்றம் செய்திருக்கிறது என்றால் மிகையில்லை.

ஆனால் சில மனிதர்கள் தமது சொந்த வாழ்வில் உண்டாகும் சிக்கல்களுக்கு எதிர்வினை ஆற்றும் விதமாகச் செய்யும் எளிய செயல்கள் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த பாதிப்பை உருவாக்கி விடக்கூடும். அப்படிதான் தன் உடல்வலிக்கும் மனஅவசத்திற்கும் வடிகாலாய் அந்தப் பெண் ஓவியம் வரைந்தாள். பின்னான அவள் வாழ்வு வரலாற்றுத் தாள்களில் ஒற்றைப் பெரும் ஓவியமாய்ப் பதிந்து போனது. தமிழ்நாட்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவனும் அகாலத்தில் இறந்து போன எனது நண்பனுமான க.சீ.சிவக்குமார் எனக்கு 'மக்தலீனா கார்மன் ஃப்ரைடா காலா' *(Magdalena Carmen Frida Kahlo y Calderón)*வை, தனது காதலி என்றே அறிமுகம் செய்தான். ஃப்ரைடா அவனுக்கு(ம்) காதலிகளுள் ஒருத்தியாக இருந்தாள். (எனக்கும் இரண்டு மக்தலீனாக்கள் மீது தீராத அபிமானம் இருக்கிறது. ஒருத்தி அனைத்து வகையிலும் திருத்தமான இந்த ஃப்ரைடா மற்றொருத்தி ஜீசஸ்ஸின் காதலி). ஒற்றை வார்த்தையில் ஃப்ரைடாவை நான் அழைப்பது 'மர்மயோகி' என்று. ஆனால் அவள் வாழ்வு மிகத் திறந்த புத்தகம். தன்னை எல்லாவகையிலும் வெளிப்படையாக முன்னிருத்தியவள். அவள் சொன்னாள்: 'நான்தான் எனது சிந்தனை... எனக்கு மிகவும் தெரிந்த பொருள்... மேலதிகமாக நான் அறிந்துகொள்ள விரும்பும் பொருள்...' இவள் பிறப்பே ஒரு சுவாரஸ்யம். இவரது தந்தை ஹங்கேரிய சந்ததி வழி வந்த ஜெர்மானியர், தாயார் செவ்விந்திய சந்ததி வழி வந்த ஸ்பானிய மெக்ஸிகன். எப்படியொரு கலவையான பாரம்பரியம்! *1907*இல் போலியோ பாதிப்புடன் பிறந்த ஃப்ரைடா, *1925*இல் தனது பதினெட்டாவது வயதில் ஒரு பேருந்து விபத்தில் சிக்கினாள். அதன் பின்னான தனது மொத்தமும் நாற்பத்தேழு வருடங்கள் மட்டுமேயான வாழ்வில் முப்பதிற்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகள். அவளது வாழ்நாளில் வலியை அவள் எப்படி பார்த்தாள் என்பதுதான் வரலாறு. *1925* முதல் *1954* வரையிலான ஃப்ரைடாவின் வாழ்க்கை ஒரு ரணகளம் என்றால் அவள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை என்பது ஒரு ரகளையான களேபரம். தனது வலிகளைப் பற்றி வேடிக்கையாக, 'எனது

துயரங்களை மூழ்கடிக்கக் குடிக்கிறேன்... ஆனால் அந்த முறை தவறிய பிள்ளைகள் *(Basterds)* நீந்துவது எப்படியென்று தெரிந்து வைத்திருக்கின்றன...' என்கிறாள். நான் அவளது முழு வாழ்க்கையையும் சொல்ல வரவில்லை. தயவு செய்து தேடிப் படியுங்கள் என்று சொல்கிறேன்.

அவளது சாகசமான அரசியல் வாழ்வை.. பைத்தியக்காரத்தனமான காதல் வாழ்வை.. ஒரு ஆழத்திலும் ஆழமான துயரம் மாபெரும் வெளிச்சப்பூவாக மாறிய வாசமாக வரலாற்றில் வீசிய வாழ்வை. 'நானொரு குழப்பமும் விகாரமுமான மனுஷி... எப்பொழுதும் காதலிப்பது, காதலிப்பது, காதலிப்பது மேலும் காதலிப்பது... ஒருபோதும் நீங்காமல் இருப்பது...' என்று சொன்ன ஒரு பெண்ணின் கிறங்கடிக்கிற வாழ்வை. நான் இங்கு கொடுத்திருக்கும் ஓவியம் அவள் ரஸ்யாவின் பெரும் ஆளுமைகளுள் ஒருவரான ட்ராட்ஸ்கிக்கு கொடுத்த ஒரு சுய ஓவியம். அதன் மதிப்பு மிகுந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.

சமீபத்தில் ஃப்ரைடாவின் மற்றொரு காதலனைப் பற்றி அறிய நேர்ந்தது. அவர் ட்ராட்ஸ்கியின் மெய்க்காவலரான 'ழான் வா ஹெனோர்' *(Jean van Heijenoort)*. பின்னாளில் இவர் அரசியலை நீங்கி அமெரிக்காவில் கணிதப் பேராசிரியராகவும் சிறந்த தத்துவவியலாளராகவும் மாறிய வினோத வரலாறு அது. ஃப்ரைடாவின் கணவர் ரிவேரா பற்றி இதில் எதுவும் சொல்லாததற்குக் காரணம் அது வேறு ஒரு வரலாறு என்பதே தவிர வேறல்ல. மனிதர்கள் எப்படியெல்லாம் வாழ்ந்திருக்கிறார்கள்! புகைப்படத்தில் ஃப்ரைடாவிற்கும் ரிவேராவிற்கும் பின்னால் நிற்பது தோழர் வா ஹெனோர். ஃப்ரைடா எழுதுகிறாள்.. 'உலகத்தில் நான்தான் அந்நியமான பெண் என்று நினைப்பதுண்டு... பிறகு நினைத்துக்கொள்வேன், இந்த உலகத்தில் என்னைப் போலவே வினோதமாக நினைப்பவர்கள் யாரேனும் ஒருவர் இருக்கக்கூடும்... அவளை நான் கற்பனை செய்கிறேன்... அங்கே என்னைப் பற்றி இது போலவே அவளும் நினைக்கக்கூடும்... நல்லது நீ அப்படி அங்கிருந்து கொண்டு இதைப் படிப்பாயானால் தெரிந்துகொள்... ஆமாம், உண்மைதான்... நான் இங்கு இருக்கிறேன்... உன்னைப் போலவே அந்நியமாக...'

• • •

இலக்கிய மனநிலை

தொடக்கத்தில் எனக்கு இருத்தலியம் அறிமுகம் ஆனபோது பெரிய ஈர்ப்பு ஏற்பட்டது. ஒருவித பயம் கலந்த குதூகலம் மனதில். உலகத்தின் ஆகச்சிறந்த தத்துவம் என மனம் பூரித்துப் போனேன். ஒட்டுமொத்த அறிவையும் புரட்டிப் போட்டது மார்க்ஸிய அறிமுகம். இலக்கியத்தை நான் பார்க்கும் விதமே மாறிப் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.. ஒரு குறிப்பிட்ட வகையிலான பாரடிம் ஷிஃப்ட். ஆனாலும் பிரபஞ்ச அறிவியலும் குவாண்டம் இயற்பியலும் என்னுள் இருக்கும் இருத்தலியப் பிரச்சனையைச் சாகவிடாமல் பார்த்துக்கொண்டிருக்கிறது. இதை எழுதும் இந்த நாளில் - டிசம்பர் *24* - எனக்கு இரண்டு

பெரிய துயரச் செய்திகள். நண்பன் யதார்த்தன் இளஞ்சேரன் மற்றும் ஆய்வாளர் தொ. பரமசிவன் ஆகியோரின் மரணச் செய்தி. மிக இறுக்கமான இந்த ஆண்டின் எனது வாழ்வை இறுகவைத்த இரண்டு ஆணிகள். இலக்கிய மனநிலைக்கு நான் தெரிவு செய்திருந்த மூன்று கவிதைகளும் ஏதோ வகையில் இருத்தலியம் பேசுகிறது என்பது மற்றொரு துயரம்...

ந ஜயபாஸ்கரன்

ஞாபகக் கண்ணிகள்
சிதைந்து வருகின்றன
சிறுகச் சிறுக
சமுத்திரம் பாக்கி
இருபத்தாறு ரூபாய் எண்பது காசா
கடற்கரை நாடார்
கடைந்து தரவேண்டிய
பானை எடை
நூற்றுப் பதினான்கு கிலோவா
நூற்றுப் பதினாறு கிலோவா
தெளிவாகவில்லை
சிட்டையின் இருப்புப் புள்ளி
பிசகிவிடுகிறது அடிக்கடி
நிலுவையாகாத
பற்றுவழிக் கணக்கு எண்கள்
கலங்குகின்றன கனவினுள்
'லாங்' காக
விளக்கு கேட்ட
பட்டிக்காட்டுப் பெண்ணின்
முகம் மறந்து
முலை சிதறுகிறது கனவில்
கடைவீதியின் மூச்சை
அவ்வப்போது நிறுத்திய
வளர்ந்தான் பாண்டியின்
வாள் துரு வளர்ந்து
கனவு கிழிக்கத் தவிக்கிறது
களிம்பேறிய பித்தளை நாட்களின்
கசப்பு மட்டும் இறங்குகிறது...
•

ஆத்மாநாம்

அந்தப் புளியமரத்தை...

நேற்றிலிருந்து
அந்தப் புளியமரத்தை
வீழ்த்திக்கொண்டிருக்கிறார்கள்
முதலில்
புளியமரத்தின் உச்சியை அடைந்தார்கள்
சிறிய சிறிய கிளைகளை
முறித்துக்கொண்டார்கள்
இலைகள் மலர்கள்
உதிர உதிர சிறிய
கிளைகள் பூமியைத் தழுவின
சிறிய கிளைகள் இழந்த மரம்
அருவ உருவில்
வானத்தை
உறிஞ்சிக்கொண்டிருந்தது
மரத்திலிருந்து இறங்கியவர்கள்
ஒரு மாபெரும்
மரமறுக்கும் ரம்பத்தைக்
கொண்டுவந்தார்கள்
புளியமரத்தின்
அடியைக் குறிபார்த்து
கீறிக்கொண்டிருந்தார்கள்
பொடித்துகள்கள்
இருபுறமும் கசிய
நெடுமரத்தைச் சாய்த்தார்கள்
மீதம் உள்ள கிளைகளையெல்லாம்
வெட்டிவெட்டி அடுக்கினார்கள்
கட்டை வண்டியில் ஏற்றிப்
புறப்பட்டார்கள்
இலை தழைகளுக்கிடையே
ஒரு புளியஞ்செடி
தன்னைப் பார்த்துக்கொண்டது.
•

நா. பிச்சமூர்த்தி

சாகுருவி

இருள் பழுத்த இரவினில்
விண்ணின் மீன்கள் உதிர்ந்தன.
உயிர் முடிந்த சருகுகள்
ஊசலாடி விழுந்தன.

நிழலும் நீரும் முடிய மாந்தர்
மாரனடி சேர்ந்தனர்
பூவும் பிஞ்சும் காயும் கிழமும்
சாய்ந்தது நெஞ்சில் காய்ந்தது...
காலை விழித்த கிராமத்தார்கள்
கண்கலங்கி வெதும்பினர்.
கருத்தைச் செலுத்தி உன்னிப் பார்த்தும்
காணவில்லை காரணம்
கோவில் கோபுரத்தில் வாழ்ந்த
சாகுருவி தெரிந்தது.
இரவு முழுதும் அவச்சொல் ஓசை
கேட்டது காதில் மூண்டது
காரணத்தைக் கண்டது போல்
களிப்புடன் கைசொடுக்கினர்.
“சாகுருவி சபித்துச் சபித்து
ஊர்முழுதும் நாசமாச்சு.
சாகுருவி மாள வேண்டும்
கிராமம் மீளத் தழைக்க வேண்டும்”
துடுக்குப் பிள்ளை இரண்டு மூன்று
போபுரத்தில் தாவினர்
சாகுருவி பிடித்து வந்து
ஊர் முழுதும் காட்டினர்
அரிசி காசு தண்டி வந்து
எமனின் தோல்வி முழக்கினர்.
பின்னும் பாசம் விழுந்தது.
பின்னும் மனிதர் இறந்தனர்.
சாகுருவி செத்துப் போயும்
சாவு நித்தியம் வாழ்ந்தது.

• • •

பொதுவான மனநிலை

தவளையை ஏமாற்றும் வித்தை என்று ஒரு கதை சொல்வார்கள். நாம் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறோம். பாத்திரத்தில் நீரை நிரப்பி அடுப்பில் வைக்கும்போது ஒரு தவளையை அதில் விட்டால் தவளை என்ன செய்யும்? சுகமாக நீந்திக்கொண்டிருக்கும். தப்பிக்க எண்ணாது. ஏனென்றால் அது இருப்பது தண்ணீரில். தண்ணீரிலிருக்கும் தவளைக்கு என்ன கவலை? அனால் மெதுவாக நீர் சூடேறி உஷ்ணம் அதிகமாக அதிகமாக தவளை தப்பிக்க நினைக்கும். ஆனால் தவளை தப்பிக்க நினைக்க முடியுமே தவிர அதனால் தப்பிக்க முடியாது. சூட்டில் வெந்துபோய் இறந்துவிடும். இதுதான் அய்யா இந்த மனிதகுலத்தின் தற்போதைய நிலை. மனிதகுலம் மட்டுமல்ல, இந்த மனிதரால் பூமி எனும் அழகு வெந்துபோக வாய்ப்பிருக்கிறது. கடந்த 140 வருடங்களில் மிக அதிகமான வெப்பத்தை பூமி 2020இல் உணர்ந்ததை உறுதி செய்கிறார்கள் அறிவியலாளர்கள். வருடத் தொடக்கத்தில் ஆஸ்திரேலியாவில் தொடங்கிய காட்டுத்தீயை, அதுபோல அமெரிக்கா மற்றும் தென்னமெரிக்காவிலும் பரவிய காட்டுத் தீ அதன் விளைவாக உண்டான பெரும் புயல்கள் அதனால் பூமிக்கு ஏற்பட்ட இழப்புகள் எல்லாவற்றையும் கோவிட் மறைத்துவிட்டது. ஆர்டிக் கண்டம் இந்தக் கோடையில் வரலாற்றில் அதிக அளவான 37 டிகிரி செல்சியஸ் அளவைத் தொட்டது (https://www.geospatialworld.net).

நமது கவட்டிடுக்கில் விறகைச் செருகி அதைப் பற்றவைத்துக் கொண்டிருக்கிறோம் நண்பர்களே. கடந்த மாதப் பதிவில் சொன்னது போல இந்தியாவும் அதன் மாநிலங்களும் மிகமிக பின்தங்கிய விழிப்புணர்வு நிலையில்தான் இருக்கின்றன. இருக்கட்டும். பெரும் புயல்கள் பற்றிச் சொன்னவுடன் எனது மனதில் சூரியக் குடும்பத்தில் இருக்கும் கிரகமான நெப்டியூனில் அலைந்துகொண்டிருக்கும் புயல் நினைவுக்கு வந்தது. அதற்கு டார்க் ஸ்பாட் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். என்னய்யா விசேசம் என்று கேட்கிறீர்களா, ஒன்றுமில்லை அதன் அளவும் வேகமும்தான் விசேசம். அளவு நமது பூமியின் அளவு. வேகம் மணிக்கு சுமார் ஆயிரத்து நூறு கிலோ மீட்டர்கள். அவ்வளவுதான். அதன் கூடவே ஸ்கூட்டர் என்று பெயரிடப்பட்ட மற்றொரு புயலையும் வாயேஜர் சிறிது காலத்துக்கு முன் கண்டுபிடித்தது. நாம் இன்னமும் கஜாக்களுக்குப் பிடிகொடுக்க முடியாமல் சண்டை செய்கிறோம். சண்டை என்றதும் மற்றொரு நினைவு, மனிதர்கள், மிருகங்கள் அனைத்தும் சண்டை செய்கின்றன. சரி மரங்கள் செடி கொடிகள் சண்டை செய்யுமா? வாய்ப்பிருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். வேர்களுக்கிடையில் சண்டையிடும் மரங்களை பற்றிய ஆய்வில் இறங்கியிருக்கிறார்கள் அவர்கள். உலகத்தில் அனைத்து உயிரினங்களுக்கும் சண்டைக்கு முக்கிய காரணமாய் இருக்கிறது தண்ணீர்.

- தொடரும் ■

● வீரசோழன். க.சோ.திருமாவளவன்



கண்களுக்குத் தரிசனம் தரும் ஆரண்யம்

புத்தகம் : ராஜவனம்
எழுத்தாளர் : ராம் தங்கம்
வெளியீடு : வம்சி புக்ஸ்

நாகர்கோவிலில் இருந்து சுந்தரராமசாமி, பொன்னீலன், தோப்பில் முகமது மீரான், நீல பத்மநாபன், நாஞ்சில் நாடன், ஜோ டி குரூஸ் என ஏராளமான எழுத்தாளுமைகள் தமிழகத்திற்குக் கொடையாகக் கிடைத்து இருக்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து, எழுத்தாளர் ராம் தங்கமும் தனது படைப்புகளைச் செவ்வனே தந்துகொண்டிருக்கிறார்.

எழுத்தாளர் ராம் தங்கம் காந்தி ராமன், ஊர் சுற்றிப் பறவை, மீனவனுக்கு ஒரு கோவில், திருக்கார்த்தியல், பொன்னீலன் – 80, சூரியனை எட்ட ஏழு படிகள், கடவுளின் தேசத்தில் என மிகச் சிறந்த நூல்களை எழுதியவர்.

“காந்தி ராமன்” ஒரு வரலாற்று நூல், “மீனவனுக்கு ஒரு கோவில்” நாட்டார் வழக்காற்றியல் நூல், “திருக்கார்த்தியல்” சிறுகதைகள், “பொன்னீலன் – 80” கட்டுரைத் தொகுப்பு நூல், “சூரியனை எட்ட ஏழு படிகள்” சிறுவர்களுக்காக ஆங்கிலத்திலிருந்து தமிழில் பெயர்த்த நூல், “கடவுளின் தேசத்தில்” பயணக்கட்டுரை நூல்.. என எல்லாத் தளங்களிலும் தன் முத்திரையைப் பதித்தவர். தற்போது நாவலாக “ராஜவனம்” எனும் நூல் தந்திருக்கிறார். “ராஜவனம்” எழுத்தாளர் ராம் தங்கத்தின் எட்டாவது புத்தகம்.

இவருடைய ‘திருக்கார்த்தியல்’ சிறுகதைத் தொகுப்பு தமிழ் இலக்கிய உலகின் அத்தனை விருதுகளையும் வென்ற நூல். “அசோகமித்திரன் விருது (2018), சுஜாதா விருது (2019), வடசென்னைத் தமிழ்ச்சங்கம் விருது (2019), படைப்பு இலக்கிய விருது (2019), சௌமா இலக்கிய விருது (2019), அன்றில் இலக்கிய விருது (2019)” ஆகிய விருதுகளை வென்றுள்ளது.

ராஜவனம் - நாவல் முழுவதும் வனத்தைப் பேசுகிறது. அதன் பசுமையைப் பாடுகிறது. தார்ச்சாலையில் நடக்கும் வெப்பத்தின் கால்கள் வனத்தில் நடந்தால் அதன் குளிர்மையும், பசுமையும் அணிகலனாகக் காலில் சூடிக்கொள்ளும். அதைப் போன்றே இந்த ராஜவனம் நூலும். காலில் பசுமையும், காதுகளுக்கு மூங்கிலும் அதிலிருந்து வெளிவரும் ஓசையும், பறவைகள், அடர் காட்டின் விலங்குகள் மற்றும் பூச்சிகளின் ரீங்காரமும் வாசிக்கத் தொடங்கியதில் இருந்தே ஒலிக்க ஆரம்பித்து விடுகின்றன. கண்கள் வாசிக்க வாசிக்க அடர்ந்த வனங்களில் சுற்றித் திரிந்த அனுபவத்தோடு, வனம் பற்றிய நிறைய புரிதல்களையும், விழிப்புணர்வையும் தருகிறது .

நண்பர்களான கோபால், ராஜேஷ், ஆன்றோ மூவரும் அடர் வனத்துக்குள் சென்று, அங்கு இருக்கும் முகளியடி மலையைப் பார்ப்பதற்காகப் பயணம் மேற்கொள்கிறார்கள். இந்தப் பயணத்தில் காடு அச்சமூட்டுவதாக இருந்தாலும், அந்தக் காடு எப்போதும் அழகுதான், எப்போதும் அமைதிதான். எழுத்தாளர் காட்டை வைத்துச் சொல்லும் நுண் தகவல்கள் ஆச்சர்யப்படுத்துகின்றன. காட்டுத்தேள் ஒன்று அவர்கள் முன்னால் போய்க்கொண்டிருந்ததெனக் கூறி இப்படி விவரிக்கிறார். உள்ளங்கை அளவு இருந்தது. அதன் கொடுக்கு ஜே.சி.பியின் ராட்சச கை போல இருந்தது. இப்படி உருவகம் செய்கிறார். அந்தத் தேள் அப்படியே நம் முன் நகர்கிறது.

செல்பி எடுப்பதற்காக முயற்சிக்கையில் பின்னால் புலி வந்து கோபாலின் தோளை அழுத்த, ஆன்ரோ, ராஜேஷ் இருவரும் ஓடிவிடுகிறார்கள். கோபால் வன தெய்வத்தை வணங்கியதும், புலி அவனை விட்டு நகர்கிறது. அதன் பிறகு நாவலின் மாந்தர்களும், வனமும் "விறு விறு"வென நம்மிடம் பேசிக்கொண்டே இருக்கின்றார்கள்.

காட்டில் இருக்கும் பறவைகள், மரங்கள், விலங்குகள், பாம்புகள் பெயர்கள் மட்டுமல்லாமல் பட்டாம்பூச்சிகளின் வகைகள், நீலன், அழகி, வரியன், சிறகன் வரை எல்லாவற்றையும் அவற்றின் பெயரையும் அழகையும் அற்புதமாகக் குறிப்பிடுகிறார்.

குகைக்குள் செல்லும் கோபால் ஒரு செய்தியைக் காண்கிறான். மார்த்தாண்ட வர்மா காணிப் பழங்குடி மக்களை வருடம் ஒருமுறை சந்தித்துவிட்டுப் போவார் என்பதே அந்தச் செய்தி. ஆனால் அது காலத்தின் வரலாறு. அரசருக்கும் பழங்குடியின வனத்தில் வாழும் மக்களுக்கும் இடையேயான தொடர்பை மெல்லியதாய்ச் சொல்லிவிட்டு நகர்கிறார். வனத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவனின் அப்பா ராஜசேகர் நினைவுக்கு வராமல் இருப்பதில்லை.

கோபாலின் அப்பா வனக்காவலராகப் பணி புரிந்தவர். அவர் தன்னிடம் காட்டைப் பற்றிச் சொல்லியிருக்கும் அனைத்தையும் தந்தையின் சொல்படியே, வனமெங்கும் பயணத்தில் கடைபிடிக்கிறான். காட்டில் இருக்கும் வன தேவதையை வணங்கி விட்டுத்தான் நந்தியாறு பிரசவிக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டுமெனத் தந்தை எப்போதோ சொல்லியிருந்ததை நினைவில் கொண்டு வன தேவதை இருக்கும் இடத்தைத் தேடுகிறான் கோபால். வனப்பகுதிக்குள் அவருக்கு யானை ராஜசேகர் என்ற பெயருண்டு. அதைப் பற்றி எழுத்தாளர் விவரிக்கும் எழுத்தில் வனமும், யானைகளும் கண் முன் வந்து நிற்கின்றன. கோபால் அவன் அப்பாவை நினைக்கும் தருணத்தில் ராஜ வனம் கம்பீரமாய் மிடுக்கோடு வலம் வரத் தொடங்கிவிடுகிறது.

அந்த யானைக் குட்டியைப் புதைத்தனர்.. ஒரு சிறு குழந்தையைப் புதைப்பது போன்ற உணர்வு மேலிட ராஜசேகரும், வனக்காவலரும் அழுதார்கள் எனும் வரியில் எழுத்தாளரின் கருணையும், அன்பும் மிளிர்கிறது. யானைத் தந்தம் கடத்த வருபவருக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த ராஜசேகர் யானை ராஜசேகராகப் பெயர் மாறுகிறார். அவரின் நேர்மையும், பழங்குடியின மக்கள் மேல் அவர் காட்டும் கனிவும், காட்டுக்குள் நுழையும் புல்லுருவிகளுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்ததைப் பற்றியும் விவரிக்கையில் கண் முன் யானைகளும், ராஜசேகரும் வந்து செல்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாகக் காட்டுக்குள் வாழ்ந்த வன அலுவலர் ஆரல்வாய்மொழி சோதனைச்சாவடிக்கு மாற்றப்பட்டுப் படுகொலை செய்யப்படுகிறார்.

கோபாலுக்கு அப்பாவின் நினைவு மனதில் வரத் தொடங்கியது. வனக் காவலர் உடையில் அவன் அப்பா ராஜசேகர் நினைவுகளில் உருப்பெற்றார். எழுத்தாளர் இந்த இடத்தில் சொல்லும் வரிகளிலிருந்து வனமானது கூடுதலாய் உயிர் பெற்று விடுகிறது. ஒரு வனக்காவலர் தனது பணியில் விருப்பமும் காட்டின் மீது அளவில்லா நேசமும் ஈடுபாடும் கொண்டு, அரசின் பொக்கிசங்களைப் பத்திரமாக மீட்கும் மீட்பவராகவும் இருப்பதால், ராஜசேகர் எனும் அந்த மனிதர் இறந்தகாலமாகி விடுகிறார்.

புத்தகத்தின் பிற்பாதியில் வரும் காணிக்காரர்கள் என்னும் பழங்குடியினரின் வாழ்க்கை முறையும், அவர்களின் சடங்குகளும், வனத்தின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையும், அவர்களை அச்சுறுத்தும் பிரச்சனைகளும், மானிடப் பண்பாளராய் வனக்காவலராக வரும் ராஜசேகருக்கும் அவர்களுக்கும் இருந்த அற்புதமான உறவும், தந்தம் கடத்த வரும் கொள்ளையர்களைப் பிடிக்க பழங்குடியின மக்கள் இவருக்கு உயரமாக ஏறுமாடம் அமைத்துத் தந்து பெரும் உதவியாக இருந்ததும் எனத் தொடரோட்டமாக வெளிச்சம் பரப்பிக் காட்டுகிறார். அதுவும் பழங்குடியின மக்கள் பற்றி எழுத்தாளர் சொல்லும் தகவல்கள் ஆச்சர்யப்படுத்திக்கொண்டே இருக்கின்றன. அவர்களைப் பற்றிய செய்திகளை வாசிக்கையில் அவர்களோடு பேசிய உணர்வும் கிடைத்துவிடுகிறது.

நாவலில் வரும் நேர்மையான வனக்காவலர் ராஜசேகர் போன்றவர்களால் பாதுகாக்கப்படும் பெரும் வனங்கள் பொக்கிசங்கள்தான். அப்படியான பொக்கிசமான வனங்களும் நேர்மையை உண்மையைப் பேசும் "ராஜவனமும்" ராஜகிரீடத்தை முடிசூடிக்கொள்கின்றன. ●

சிறுகதை

பார்வையாளர் அரங்கு

● பாரதிநிவேதன்
● ஓவியம் - அன்பழகன்

நான் தவறுகள் செய்திருக்கலாம். அவை என்னைக் கடத்துவதற்காகவே. அவை உன்னைப் பாதித்திருக்கக்கூடும். மன்னிப்பைத் தவிர நீ கொடுத்ததெல்லாம் ஒரு கால்பந்தை உதைப்பதுதான். உன் தண்டனைகளை நான் தட்டிவிட்டுச் செல்கிறேன். உன் காயங்களை ஆற்றும் மருந்தாக நான் இருக்க உன்னுடைய ஆசீர்வாதமும் தேவை என்பதை நீ உணராது என்னை வறுத்தெடுக்கும் திட்டத்திலேயே உனது மூளையைச் செலவழிப்பது உண்மையில் எந்த வகை நியாயத்தில் சேரும். உன் அதிகாரம் என்னை மிக மோசமான உளவியலுக்குள் தள்ளி இருக்கிறது. குடிப்பதால் தலை தப்பி இருக்கிறது. உடல் மோசமான உபாதைக்குள் கும்மியடிக்கிறது. கடமைக்குப் புணர்நிர்மானம். அதைச் செப்பனிடுவது சுலபமல்ல. இப்போது குடிக்காமலிருப்பது உயிரை மூழ்கடித்துவிடும் அல்லது மூளையைச் சிதற்றிவிடும். இது சரியானதா. இதை உன்னிடம் சொல்லிப் பார்த்துக்கொள்கிறேன் கமலா. நிறைந்து தளும்பாமல் இருக்கும் குவளையை அவள் எடுப்பது பருகுவது வைப்பது.. அந்தக் குவளை இன்னும் தளும்பாமல் இருக்கும் கர்வத்தை எப்படிக் கொண்டு வருவது.

பார்வையாளர் இல்லாத மேடையில் தொடர்ந்து மேவும் கேளிக்கைகளில் வனன் மனம் நுழையவில்லை. வனன் பார்வை மீண்டும் மீண்டும் பார்வையாளர் பக்கமே சென்று மீண்டது. மேடையில் காய்கள் நகர்த்தப்பட வேண்டியது கடமை. மேலும் அது இருப்பின் அடையாளமும் கூட. ஆனால் அது பற்றிச் சிந்திக்காமல் இப்படி தேமேவென இருக்கும் வனனை யார்தான் பொறுத்துக்கொள்வார்கள். ஆரம்பத்தில் இந்த இயல்பு கொண்டாடப்பட்டிருக்கிறது விரும்பப்பட்டிருக்கிறது. ஆனால் அதுவே நிலைபெறும்போது வனன் உதாசீனப்படுத்தப்பட வேண்டியது முறையாகிறது. நீ என்னடா எங்களுக்குன்னு புடுங்குன என்ற அம்மாவை இன்னும் மேலதிகமாக அழுது புலம்பத் தயாராக இருக்கும் அவளை வனனால் தடுக்க முடியுமா. எந்த நாயும் வீட்டுக்குள்ள நுழைஞ்சா வெட்டுவேன் என்னும் தன் சிற்றண்ணனால் மிகப்பெரிய வன்முறை வெடிக்கும் அபாயத்தின் முன் கூட வனன் பார்வையாளர் பக்கம் தன் காதலியைத் தேடிக்கொண்டிருப்பது முறைதானா.

கற்பனைக்குள் வந்து கனவுக்குள் நுழைந்து நுழைந்து கெட்டித்தட்டிப் போய் இப்போது நிகழிலும் படர ஆரம்பித்துவிட்ட காதலியின் கண் காது மூக்கு எல்லாம் அவளைத் தேடச் சொல்கிறது என்பதற்கு அப்பால் அவள் மிகச் சமீபம் என்னும் முகாந்திரத்தை வனன் நன்கு அறிந்திருக்கின்றான். வனனின் வெக்கை தணிக்கும் மோராகியவள். உப்பைக் கழுவும் நீராகியவள். அவளைக் கண்டடையாத காலம் என்ன காலம் என்றிருக்கும் அவன் மேடையில் இருக்கத் தகுதி அற்றவன். உப்பு மிளகாய்க்கும் வக்கில்லாதவன். அவன் மனைவி அவனைப் பிரிந்திருந்தபோதும் எங்க ஒசியில குடிச்சுட்டுப் பேசற என்ற குரலில் மிகச் சாதாரணமான தர்க்கத்தின் நியாயத்தையும் புரிந்து கொள்ள முடியாதவன். இது முறைதானா.

வனன் ஜன்னி கண்டதற்குக் காரணம் அவள்தான். அந்த அடைமழைக் காலத்தில் பேருந்துநிலைய பயணிகள் இருக்கை ஒன்றில் தன்னைப் பொருத்திக்கொண்டிருந்தான். தன் பக்கத்தில் யார் அதுவும் பெண்குரல் என்று திரும்பிப் பார்த்தவன் அதிர்ந்துவிட்டான். அவளுக்கும் அந்த அதிர்வு இருந்தது. இருந்தாலும் தன்னுடைய தம்பி தங்கைகளின் மூலமாக அறுக இருந்த இழையைப் பற்றிக்கொண்டாள்.

வனனுக்கோ பேருந்து நிலையம் இறக்கை முளைத்து ஜிவ்வென்று பறந்தது. வனன் குலுங்கிப் போனான். இரவெல்லாம் படுக்கையில் உடல் தூக்கித் தூக்கிப்போட்டது. டெல்லிக்கு ஒரு நேர்காணலுக்காகக் கிளம்பிக்கொண்டிருந்தவனைப் பார்த்து மகள் கேட்டாள்.. 'அப்பா நீங்க திரும்பி வருவீங்களா..' அம்மையே என்று கட்டியழத் தோன்றியது இவனுக்கு. ஆனால் ஜன்னி கண்ட உடல் அவ்வாறெல்லாம் இருக்கவிடாது. வீடு வளைந்து நெளிந்து குழைந்து அவனை மூலையில் தள்ளி ஒடுக்கிவிட்டது. அவன் முகத்தின் ஒடுக்கை முதலில் எடுப்பதா மார்பின் ஒடுக்கத்தைச் சரி செய்வதா என்ற யோசிப்பிற்குப் பின் தனக்குத்தானே இப்படிப் பேசிக்கொண்டிருப்பது அதிகமாகி வருவது குறித்து மிகவும் கவலை கொண்டான். ஆனால் ஜன்னி கண்ட மூளை அப்படியெல்லாம் இருக்க விடாது. அங்கு போ இங்கு வாவென விரட்டியது. முடிந்த அளவு அதன் மூர்க்கத்திற்கு ஒப்புக்கொடுத்தான். ஆனால் தனக்குப் பிடிக்காத அதன் ஏவலைக் கண்டுகொள்ளாமல் விட்டான். விளைவு இதுவரையான அவனது நிலையான வண்ணங்கள் செதில் செதிலாக உதிர ஆரம்பித்துவிட்டன. கண்மூடினால் அவனை ஸ்தாபிக்கும் நீலம் துருப்பிடித்துக் களிம்பேறியது. முதலில் நிற்கவும் பிறகு கொஞ்சம் நடமாட்டம் கொள்ளவும் அவன் முயற்சிக்க வேண்டும். அதற்காகத்தான் பார்வையாளர் அரங்கில் அவன் கமலாவைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

கமலா என்ற பெயர்ச்சொல்லுக்குப் பாத்திரமாகிவிடுபவர்கள் வனனை ஏமாற்றிவிடுகிறார்கள். பிறகு அந்தப் பெயர்ச்சொல்லிலிருந்து பாத்திரத்தின் கோடுகளைக் களிம்புகளை அகற்ற படாத பாடுபடுகிறான். முதுகுத்தண்டை உருவி எடுத்துப் புடமாக்கிப் புல்லாங்குழலாக்கும் வல்லமை கொண்ட கமலாவின் சித்திரம் யாருக்கும் பொருந்தி வருவதில்லை. மயக்கம் அனுதாபம் நன்றியுணர்வு போக எஞ்சி நிற்பது ஒன்றுமில்லாமல் ஓடும் பாத்திரங்கள் உனக்காக இன்னும் தங்கள் முத்தமும் ஈரமும் மிஞ்சி இருப்பதாகச் சொல்கிறார்கள்.

தஞ்சாவூரில் பிஎட் படிக்கும்போது செயல்முறை திட்ட ஏட்டிற்கான அவனது நெறியாளர் ஒரு பெண். அவனது வயது ஒப்ப அல்லது சற்று கூட இருக்கலாம். வனன் அவரைப் பார்க்கச் செல்லும்போதெல்லாம் அவர் அரண்டு மிரண்டார். தனக்கு இப்போது முடியாது.. பின்னர் பார்ப்பதாகவே தட்டிக் கழித்தார். அவர் முகம் இருண்டு போகிறது. நா வற்றுகிறது. இதற்கு முன்பு நாம் சந்தித்து இருக்கிறோமா என்று அழாத குறையாகக் கேட்கிறார். தன்னுடைய தோழிகளின் மூலமாகவே வனனின் ஆய்வேட்டைச் சரிபார்த்து ஒப்பமிட்டார். வனன் செல்லும்போதெல்லாம் நெறியாளரின் தோழியர் பார்வை வனன் எங்கோ பிறந்து ஏன் இங்கு வரவேண்டும்.. இவள் ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும் என்பதான தோற்றத்தை வனன் மண்டைக்குள் ஏற்றிவிடுவதாகவே இருக்கிறது. இவை தோற்றமயக்கங்கள் ஆழ்ந்த பொருளற்றவைகள் என்று சொல்வதன் பேரால் வனனின் பித்து இன்னும் கூடிப்போகலாம். எனவே கல்லூரியின் இறுதிநாளில் வனன் அவரது முகத்தைப் பார்த்துக் கூறினான். 'உங்களையும் நான் எங்கோ பார்த்ததுபோல் பேசியதுபோல் பழகியதுபோல்தான் இருக்கிறது. அதற்காக என்ன செய்ய முடியும். இன்னும் கூடுதலாகப் பேச புரிய வாய்ப்பிருந்த காலத்தை நீங்கள் ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டாலும் பதற்றத்தை அதிகரித்து விட்டாலும் உங்களது நெறியாள்கை என்னை வியக்க வைக்கிறது. நன்றி மேடம் நான் வருகிறேன்', வனன் திரும்பிய போது அவரது நெற்றி வியர்வைத்துளி அவனை என்னவோ செய்தது. இதைக் கடக்காவிட்டால் ஒன்றுமே இல்லாத இதற்குள் ஊன்றிக்கொள்ளும்படி நேர்ந்துவிடலாம். வனன் ஒரு சுற்று டாஸ்மாக்கின் மூலமும் தன்னை அலசிக் காயப்போட்டான்.

பணிநிமித்தமான போராட்டத்திற்கு வனன் சென்னை செல்ல வேண்டியிருந்தது. இரவெல்லாம் ஊரிய வண்டியில் இடைநிறுத்தங்களில் பெண்கள் இறங்கிக்கொள்ளாமல் தேநீர்ச் சாலைகளிலேயே இறங்குவதும் இடைவழியானது ஆண்களுக்கானது என்றபடியான புரிதலில் வண்டி ஒரு புதுக் குடும்பமாகிவிட்ட தன்மை ஒரு விசித்திரத்தை ஏற்படுத்தியிருந்தது. பேசிக்கொள்ளாதவர்கள் கூட மிக ரகசியமாக தங்களது சமிக்ஞைகளில் ஆர்வம் கொண்டிருந்தது உடலின் வியர்வைச் சுவையை ஒத்து இருந்தது. போராட்டக் களத்தில் அவனால் கோஷங்கள் போட முடியவில்லை. கடமைக்கென முணுமுணுத்துக் கொண்டிருந்தான். மற்றவர்கள் கேட்டுக்கொண்டும் உற்சாகமான உரையை அவனால் அளிக்கமுடியவில்லை. அவனது பார்வையெல்லாம் புதிதாகத் திருமணமான அப்பெண் மீதுதான் இருந்தது. கமலாவின் சட்டகம் ஒரு மின்னலைப்போல அவளின் உள்ளும் பாய்ந்தோடி ஒரு கந்தக நிறத்தை நிலைபெறச் செய்துவிட்டு மின்னல் ஒளிந்திருந்தது. இதை அவள் அறிந்திருந்தாள். தன் தோழியரிடம் அவனை என்னைப் பார்க்காமல் இருக்கச் சொல்லுங்கள் என்பது மாதிரி தான் தனது குழலை இசைப்பது மாதிரி இருந்தது. தோழியரும்

வனனைக் கண்காணித்தபடிதான் இருந்தார்கள். இது இப்படி நிகழ வாய்ப்பில்லை. வனன் அந்த மின்னலைக் கண்டெடுத்து மீண்டும் தனக்குள் மேலெழும்பாதவாறு அவனுக்குத் தெரியாமல் அதை அவன் ஒளித்து வைக்கவேண்டும். சிறிது பிசகினாலும் மூளையில் மின்னல் முன்னும் பின்னும் சர்க்சர்க் என ஊஞ்சலாடி முட்டுச்சந்தில் சிறுநீர் நனைந்தே கருகிப்போன செங்கல்லின் அடியில் அவன் ஊர வேண்டியதிருக்கும்.

இப்படிக் கருகத் திருவுளமாக்கும் கமலாவா பார்வையாளர் அரங்கில் வந்து அமரப்போகிறாள். தான் ஒளிந்துகொள்வதற்கான நீருடை இதுவென இங்கேதான் இருக்கிறாளோ என்னவோ. சமிக்ஞையறியாக் கடைக்கோடி வெத்துப்பயல் என்றால் வனன் செத்தொழியத்தான் வேண்டும். அது இப்பிறப்புமா என்பதுதான் வனனுக்கு வேதனை. தாள் பற்றினோம் கூர்பற்றினோம் வேர்பற்றினோம் என் அம்மையே என்று கண்கள் சுரந்தாலும் கமலா தன்னைக் காட்டிக்கொள்ளவா போகிறாள். ஒருமுறை உள்வட்டத்தில் மொக்கினை விரித்துப் பூவாக்கிக் காண்பித்துவிட்டுத் தேடியே சரணடை என்பதும் ஓர் ஏற்பாடா. வனன் பார்வையாளர் அரங்கையே பார்த்துக் கொண்டிருக்கிறான். அங்கு உனக்கு என்னடா இருக்கு வெட்டிப்பயலே என்ற குரல்களில் ஏதோ சமிக்ஞை ஒளிந்திருக்கிறது.

மேடையை விட்டுச் சற்றுக் கீழிறங்கிப் பார்வையாளர் அரங்கில் கலந்துவிடுவதை யோசிக்கும்போதே இதயத்தை அழுத்திப் பிசைந்து வலி ஏற்படுத்தும் நோவு வந்தது. அது கடலில் ஒரு துளி சென்று கலந்து விடுவதற்கு முன்பான வலி. மேடைக் கூச்சலாக கும்மாளமாக ஒப்பாரியாக இருப்பதற்கு இந்த வலியும் ஒரு காரணமாக இருக்க வேண்டும். எங்கே தொலைந்து போயிருக்கிறாய் நீ என்று தேடி வந்துவிட மாட்டாளா கமலா. கொள்ளளவற்ற நிழற்தாங்கலில் என்ன செய்து கொண்டிருக்கிறாய். யாசகம் பெறுவதில் தவறேதுமில்லை என்பதற்கு நகர்ந்துவிட்டாய்தானே. அடையாளமற்ற உனது ஸ்தூபிகளை இன்னும் மடியில் கட்டிக்கொள்ள ஆகும்தானே. என்னோடு நீயருந்தும் சாயும் காலத்திற்கு என்ன பெயர். வழிப்போக்கர்களின் சாரை முடிவடையாத நிலமல்லவா இது. வா இன்னொரு காலையைத் தயாரிப்பதற்கு நம்மைக் கவிழ்த்தி வைக்கலாம் என்று பார்வையாளர் அரங்கிலிருந்து என்னைக் காந்துபவள் அவளா என்னும் கேள்விகள் வனனுக்குள் முடிந்தபாடில்லை. ஏனென்றால் ஒரே நாளினை வேறு பலநாட்களாகிவிடும் கடிகாரங்கள் நிறைந்த வீடல்லவா அது. வானவிற்களின் ஒளிச்சாட்டைகளைப் போர்வைக்குள் ஒளித்துவைத்து விளையாடும் வீடுமல்லவா.

தட்டான்களின் நிழலில் ஆன்மாவை ஒன்றமுடியாத ஜீவநதிகளின் புண்ணியம்தான் என்ன. பிரித்துக்கொள்ள முடியாத சடையில்தான் மண்ணில் வேர்பற்ற முடியும் என்பது தன்னையறியாத ஆன்மாவை அறியாத மூடம் என்பதற்கு நீ சாட்சியாக விரும்புகிறாயா வனா. கமலாவின் கேள்விகளுக்குத் தூரதேசத்து மொழியறியாத பயணிபோல வெறித்து நிற்கும் வனன் அதைத் தவறவிடவில்லை. பாழ்மண்டபத்தில் புத்தப்பீடம் இரண்டாகப் பிளந்து சிற்றடி பயின்று சீராக மீண்டும் அமர்ந்ததை. யுகயுகமாக இதை இருவரும் கடப்பதும் திரும்புவதுமாக இருக்கிறார்கள். இருவரும் பார்த்துக்கொள்ளவில்லை என்பது துயரமன்றி வேறென்ன. பார்த்திருந்தால் பிறப்பறுப்பு நிகழ்ந்திருக்கும். சூழ்வினைகள் இல்லை. வேறென்ன வேண்டும். இப்படிப் பாராதது போலக் கடப்பது சரியில்லை. ஒரு குவளை மது ஒரு பிடி சோறு விரல்கடையளவு யோனியும்தான் வாழ்வு என்னும் உண்டியலை உடைத்திருப்பதற்கு வாய்ப்பற்றதாக இதைப் பொறுத்துக் கொள்ள முடிகிறதா என்ன.

வேறென்ன எவ்வாறு அறிந்திருக்கிறார்களோ அவ்வளவில் அவர்களுக்குள் ஒரு கனவாக முடிந்துவிட வேண்டும் கமலா. பிசைந்து வைத்த மண் மழைக்குக் கரைவதைப்போல அது நிகழ்ந்துவிட வேண்டும். இந்தச் சிற்றெறும்பு தூக்கிச் செல்லும் சுமையை இன்னும் ஏன் தோளில் வைத்துக் கொள்ள வேண்டும். யாழின் நரம்பு அறுந்த தொனி காலகாலத்துக்கும் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது கமலா. அது அந்த இசையின் ஆழத்தைத் தூர்த்துவிடும். நெருங்கிச்செல் ஆனால் தொட்டுவிடாதே என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உடலின் ஆழமாகட்டும் உள்ளத்தின் ஆழமாகட்டும் நெருங்கிச் செல்ல வேண்டும். ஆனால் தொட்டுவிடக்கூடாது. அந்த அசிங்கமோ ஆனந்தமோ அல்லது ஒன்று கூட குறைய இருக்கட்டுமே. அது அவர்களின் ரேகை. அதைப் பதம் பார்க்க நமக்கு என்ன உரிமை. அல்லது இன்னொரு ரேகையைத் தாங்கக்கூடிய சக்தி உண்மையிலேயே நமக்கு இருக்கிறது என்று நம்புகிறாயா கமலா.

எப்போதும் அலகுக் குத்திக்கொண்டிருக்கும் மனதையும் கால ஓட்டத்தில் அது பிடித்திருக்கும் சீழையும் நீ அறிந்தவள். பணத்தால் மட்டுமே அதற்குக் கொஞ்சம் ஒத்தடம் கொடுக்க உன்னால் முடிந்திருக்கிறது. அதனளவில் உன்னைப் போய்வா என்று சொல்லி விடுக்கிறேன் அன்பே.■

● கரிகாலன்



தேநீர் சாலை

பெரியாரும் தமிழும்!

தமிழை, சாதி காப்பாற்றும் மொழி எனப் பெரியார் குறிப்பிட்டிருந்ததை, நேற்று எனது பதிவொன்றில் தம்பி பாரதியார் பின்னூட்டமாகப் பகிர்ந்துகொண்டிருந்தார். இச் சொற்றொடரை நானும் அடிக்கடி கூறிவந்திருக்கிறேன்.

தமிழை நீச பாஷை என்றவர்கள் உண்டு. பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி பாஷை என்றார். இரண்டு கூற்றுக்கும் இடைவெளியிருக்கிறது.

பெரியார் தமிழ் இலக்கியங்களைப் பெண்ணிய நோக்கில், நிலப்பிரபுத்துவ நோக்கில், சாதித்தீண்டாமை நோக்கில் *deconstruct* செய்யும்போது கூறிய பிரயோகங்கள் இவை. மற்றபடி பெரியாருக்குத் தமிழ் மீது இருந்தது வெறுப்பில்லை.

இப்படி பார்த்தால் ஆங்கிலம் உட்பட உலகின் எல்லா மொழிகளிலும் அதிகாரம் கலந்திருக்கவே செய்கிறது. லிங்கமையம் உடையதாகவே இருக்கின்றன. எல்லா மதங்களிலும் கடவுள் ஆணாயிருப்பதுபோல மொழியும் ஆணுக்கானதாகவே இருக்கிறது.

தமிழில் மட்டுமில்லை. கன்னடம், தெலுங்கு, இந்தி என எல்லா இந்திய மொழிகளுமே சாதி, மதக் கறைகளைக் கொண்டவையே.

இதைப் பிரதானப்படுத்திப் பார்த்தால் தமிழின் இலக்கிய வளங்களை நம்மால் அனுபவிக்கவோ, பெருமிதம் கொள்ளவோ இயலாமல் போகும்.

ஒவ்வொரு மொழியும் அதன் இலக்கணங்களும் கால வளர்ச்சிக்கேற்ப மாறவே செய்திருக்கின்றன. அவன், அவர் இவை ஒருமை பன்மையாகவே தொடக்கத் தமிழில் உபயோகிக்கப்பட்டது. பிறகே அவன், அவர் எல்லாம் சாதியக் கறையைப் பூசிக்கொண்டன.

சங்க இலக்கிய காலமே சாதியக் காலம்தான். இது குறித்த ஆய்வுகளைச் செய்ய பெரியாரியம் மட்டும்போதாது. அதற்கு மானுட இனவரைவியல், அம்பேத்கரியம் தேவைப்படுகின்றன.

ஆரியம் திராவிடத்தை அம்பேத்கரின் ஆய்வுகள் புனைவாகக் கருதுகின்றன. அவை இனவரைவியல் ஆய்வாளர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தின. சேரி உருவாகிய வரலாற்றை இந்தியாவில் அம்பேத்கர் ஆய்ந்த அளவு, பொதுவுடமைச் சிந்தனையாளர்கள் கூட ஆய்வு செய்யவில்லை என்பதே கசப்பான உண்மை.

உண்மையில் பெரியார் தமிழ்மீது பற்றுடையவராக இருந்ததால்தான் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சிந்தித்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டார். தமிழ்நாடு எனப் பெயர் சூட்டும் கோரிக்கையை வலியுறுத்தினார்.

பெரியாருக்குத் தமிழ் வெறுப்பிருந்ததாக அவரது ஓரிரு சொற்றொடர்கள் வழியாக நிறுவ முயல்பவர்களுக்கு இருப்பது தமிழ் அக்கறையுமில்லை. சாதியை ஒழிக்கும் முற்போக்கு மனமும் இல்லை.

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பொருப்பன், வெற்பன், சிலம்பன், கொடிச்சி உயர்ந்தோராகக் கருதப்பட்டனர். குறவர், குறத்தியர், கானவர் தாழ்ந்தோராகப் பாடப்பட்டனர்.

முல்லையில், உயர்ந்தோர் - நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி. தாழ்ந்தோர் இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்.

மருதத்தில், உயர்குடிகள் - ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி. தாழ்குடிகள் உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்.

நெய்தலில், உயர்ந்தோர் - சேர்ப்பன், துறைவன், புலம்பன், பரத்தி, நுளைச்சி.

தாழ்ந்தோர் - நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.

பாலையில், உயர்ந்தோர் - விடலை, இகுளை, மீளி, எயிற்றி. தாழ்ந்தோர் -மறவர், எயினர், எயிற்றியர், மறத்தியர்.

இத்தகு பேதங்கள் சமூகப்புலத்திலிருந்து எழும்பி மொழியைத் தழுவியவை.

அதே வேளை,

'மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை '
என்கிறது நன்னூல் .

தேவர், நரகர் எங்கே வசிக்கின்றனர்? பார்த்ததுண்டா? என்கிறார் பெரியார்.

இந்த இடைவெளிகளில் தமிழை, பெரியாரைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது!

பெரியார் எப்படியோ அப்படியே தமிழும் நம் அடையாளம். காலத்துக்குப் பொருந்தாததைத் தமிழர் சொல்லியிருந்தாலும், அதைத் தள்ளி வைத்துத் தமிழை அணைத்துக் கொள்வோம்!

•

சொற்கள்

--

சொற்களில் நிழலருந்தியவன்
சொற்களில் கனி குடித்தவன்
சொற்களில் தீ காய்ந்தவன்
சொற்களில் பசி தின்றவன்
சொற்களில் பாதை திறந்தவன்
சொற்களைத் தேடி
நூற்றாண்டுகள் நடந்து
கணியன் பூங்குன்றன் ஔவை
சத்திமுத்தப் புலவர்
வீடுகளுக்கெல்லாம் போனவன்
தேசம் கடந்து வேர்ட்ஸ்வெர்த்தை
டால்ஸ்டாயைப் பார்த்தவன்
மதம்கடந்து பைபிளை குரானை
காதலித்ததும் சொற்களுக்காகவே
புத்தரும் வள்ளலாரும் சொல்லால்
விளக்கெரிய வைத்தார்கள்
பெரியார் என்கிற கிழவன்
கடவுள் என்பது
முட்டாளின் சொல் என்றார்
சிறைச்சாலையிலும் நேரு
மகளுக்காகச் சொற்களைத் தேடினார்
சொற்களை
விதைப்பவர் பெரியோர்
புதைப்பவர் சிறியோர்
சொற்களால் சுடலாம்
சொற்களால் தொடலாம்
சொற்களால்
ஊற்றுக் கண்களைத் திறக்கலாம்
சொற்களால்
நோய்கொண்டும் வரலாம்
சொற்களால்
சிறகும் வளர்க்கலாம்
கொம்பும் வளர்க்கலாம்
வெல் என்பதும் சொல்லே
கொல் என்பதும் சொல்லே
சொற்களில்
காயுமுண்டு கனியுமுண்டு
அமுதுமுண்டு நஞ்சுமுண்டு
பனித்துளி போன்ற சொற்கள்
குளிர்ச்சியைக் கொண்டுவருகின்றன
வெயிலைப் போன்ற சொற்கள்
சக்தியைக் கொண்டு வருகின்றன
சொற்களே இருளையும் திறக்கிறது
காதலையும் வளர்க்கிறது
சொற்களை
சாபமாக்கலாம்
மந்திரமாக்கலாம்
பணமும் தங்கக் கட்டியும்
வைத்திருப்பவர்களை
சிபிஐ தேடி வருகிறது
சொற்களை வைத்திருப்பவர்களையோ
காதல் தேடி வருகிறது
அனுமன் வென்றது
அறிஞர் அண்ணா வென்றதெல்லாம்
சொற்களால்தான்
சொற்களுடைய யாரும்
ஏழையல்லர்
இந்தக் காலையின் முதல் சொல்லை
ஒரு சங்கீதம்போல் மீட்டுங்கள்
உங்கள் வாழ்வை
இசை சூழும்!

•

நினைவின் தடங்கள்!

~

இன்றைய நடைப்பயிற்சியாக, பழமலை நாதர் ஆலயத்தை வலம் வந்தேன். கோவிலைப் புதுப்பித்துக்கொண்டிருந்தார்கள்.

மூவாயிரம் ஆண்டுகட்கு முந்தைய ஆலயம். தமிழர் கட்டடக்கலையின் பெருமை பேசும் ஆலயம்.

பழைய ஆலயங்களை அதன் பழமை கெடாமல் புதுப்பிக்க வேண்டும். ஆனால் கோபுரச் சிற்பங்களை பழைய ஈஸ்ட்மென் வண்ணப் படங்கள் போல மாற்றியிருந்தார்கள்.

கோவில் பிரகாரத்தைச் சுற்றி கருங்கற்கள் பாவியிருக்கும். திருவிழா இரவுகளில் இதன் குளிர்ச்சியில் அமர்ந்து ஏ.எம் ராஜாவை, ஜிக்கியைக் கேட்டிருக்கிறோம்.

அந்தக் கற்களைப் பெயர்த்திருந்தார்கள்.

புதிதாகப் பதிக்க, கிரானைட் கற்களை அடுக்கியிருந்தார்கள். கண்டராதித்தனின் 'காலம்' கோவிலில் அழிந்திருந்தது.

விருதகிரீசுவரருக்கு ஜீன்சும், உடனுறையும் விருத்தாம்பிகை, பாலாம்பிகைக்கு சுடிதாரும் அணிவிக்காத குறைதான்!

மற்றபடி கிராமத்துப் பெருந்தனக்காரரின் வீடு மாதிரி பழமலைநாதர் ஆலயம் மாறிக்கொண்டிருக்கிறது.

வெளியே வந்தேன். ஆயுதபூசைக்குத் தயாராகும் மக்கள் கூட்டம். அவர்கள் முகங்களில் பழைய களை லேசாகத் திரும்பியிருந்தது!

ஆயுதபூசை கொண்டாடுபவர்களை ஆர்எஸ்எஸ்காரர்களாகப் பார்க்கும் பார்வை என்னிடம் இல்லை.

தமிழ்க்குடிகளின் பண்டிகைகளை, பிறகு தோன்றிய மதம் அபகரித்திருந்தது! வீரம் செறிந்த தமிழ் மரபு, ஆயுதங்களில் தேவதைகள் உறைந்திருப்பதாகக் கருதியது. வாளை நீராட்டும் வழக்கம் உழிஞைத்திணையில் 'வென்ற வாளின் மண்' என்று (தொல்காப்பியம்) குறிப்பிடப்படுகிறது.

'வில்லுக்கு முன் கொற்றவை செல்வாள்' என்கிறது சிலம்பின் வேட்டுவ வரி. 'கொள்ளுங் கொடியெடுத்துக் கொற்றவையுங் கொடுமரமுன் செல்லும்போலும்' ஆயுதங்களில் வெற்றித் திருமகள் குடியிருப்பதாக ஒட்டக்கூத்தர் பாடுகிறார்.

எங்கள் மருதக்குடிகளும் ஆயுதபூசை கொண்டாடினார்கள். கலப்பை, மண்வெட்டி, களைக்கொட்டு, கடப்பாறை இவை எவற்றையும் உழுகுடிகளுக்குக் கழுவி வைக்கவும் நேரமில்லை.

நடவுப் பருவம் முடியும் தருவாயில் சேற்றில் கிடந்த தங்கள் ஆயுதங்களைக் கழுவி விபூதியால் பட்டையிட்டு, குங்குமம் வைத்தார்கள்.

தோட்டத்தில் பறித்த மாவேம்பு இலைகளால் தோரணம் கட்டித் தம் சிறிய இல்லத்தின் வாயிலில் கட்டினார்கள்.

உளுந்து வடையோ பொரி கடலையோ வைத்து அவர்கள் படைத்த இடங்களில் ஒரு சாமிப் படம்கூட இருந்ததில்லை. அங்கு ஒரு கலப்பையும் அகல் விளக்கும் மட்டுமே இருந்தது.

இன்று மதங்களும் அதன் உபன்யாசகர்களும் சொல்லும் எந்தக் கதைகளும் எங்கள் ஆயுதபூசையில் இருந்ததில்லை.

மதங்கள் இன்று சாமி கும்பிடுவதைக்கூட ஒரு வன்முறைச் செயலாக மாற்றிவிட்டன.

முற்போக்காளர்களை, திராவிடர்களை மறைந்து ஒளிந்து ஆயுதபூசை கொண்டாடும்படி இந்துத்வா கலாச்சாரம் குற்ற உணர்வுக்குத் தள்ளியிருக்கிறது!

வயல்வெளியும், ஓடைகளும், தாமரைக்குளங்களும் அம்மன் கோவிலும் அய்யனார் கோவிலும் சூழ்ந்த உழுகுடி வாழ்வில் பண்டிகைகள் சிறிய அளவில் களிப்பைத் தந்தன.

குறைந்த ஒளியையும் பழைய உணவின் சுவையையுமே அனுபவித்தவர்களுக்குக் கொஞ்சம் புதிய சுவைகளையும் வண்ணங்களையும் கொண்டுவந்து சேர்த்தன.

அவர்கள் பூசிக்கொண்ட திருநீறு மனிதர்களை எரித்த சாம்பலில் பூத்ததல்ல. அவர்கள் நெற்றியில் இட்ட குங்குமம் செக்கர் வானத்தின் நிறம் கொண்டது. ஒருபோதுமது குருதியின் வண்ணமாகக் கருதப்பட்டதில்லை.

ஆறுமாதங்களாக ஒரேவிதமாகச் சென்ற வாழ்வின் தாழைத் திறக்க முடியாமல் அவதிப்பட்ட தமிழ், வயோதிகமெய்திய எங்கள் பெரியப்பாவிடம், 'இந்த ஆண்டு தைப் பொங்கலை நாம் சேர்ந்து, பழைய வீட்டில் கொண்டாடுவோமா மாமா!' என்றார்.

பழமலைநாதர் கோவிலருகே எங்கள் பெரியப்பாவுக்கும் சித்தப்பாவுக்கும் கொண்டுபோக கொஞ்சம் பொரியும் பொட்டுக்கடலையும் வாங்கினேன்.

அந்தப் பொரி எங்கள் வாழ்வைப்போலவே கனமற்று இருந்தது! ■

கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

ஊர்மிளை

உப்புச்சப்பில்லாத
அன்னம்–
உண்டாள்
ஒப்பிட முடியாத
எண்ணம்–
கொண்டாள்
தப்பிழைக்காத
தவ வாழ்க்கை
வாழ்ந்து
அவப்பெயர் சுமத்திய
அனைத்திலும் –
மீண்டாள்
ஒரு தவறும்
இழைக்காத
உத்தமி என்று
உலகம்
வாழ்த்தும்படி வாழ்ந்து
பல
உள்ளங்களை –
ஆண்டாள்....

ஐயாயிரம் இரவுகளைக்
கண்ணீரோடு
அவள்
கழித்தபிறகுதான்
போனால் போகிறது
என்று
விதியும் தனது
விஷமத்தை –
நிறுத்தியது
கண்ணுறங்காது
காத்திருந்தவளைக்
காலமும் மனமிறங்கி
கச்சிதமாக
அவளைத் தன்

கணவனோடு -
பொருத்தியது

உற்றவனையும்
கொற்றவனையும்
உடன்பிறந்தவளோடு
கொண்டுவந்து
நிறுத்தி
மற்ற வேலைகள்
இருப்பதாகச்
சொல்லிவிட்டு
மறைந்தது -
விதி...

அரண்மனை மீண்ட
அண்ணனையும்
தம்பியையும் கண்டு
ஆனந்தத்தில்
அதிர்ந்தாள்
இளையவனின் -
சதி
அழகிய ராமனையும் தம்பியையும்
காண
அந்திநேரத்திலேயே
வந்து
ஆகாயத்தில்
வட்டமடித்துக் கொண்டிருந்தது -
மதி
உருக்குலைந்த மேனியனாய்
வந்தாலும்
பழைய
செருக்கோடும்
முகங்கொடுத்து பேசாத
முறுக்கோடும்
இருந்தான்
ஊர்மிளையின் -
பதி

எதிர்நின்று வரவேற்றவளை
ஏறிட்டும் பாராமல்
கடந்துசென்றவனை
ஒரு
புதிர் போலப்
பார்த்தாள் -
ஊர்மிளை....

அழகுப் பதுமையாய்
அரண்மனையில்
இருந்தவள்
அன்னந்தண்ணி
ஆகாரமின்றிக்
கிடந்ததால்
அடையாளமே தெரியாதபடி -
இருந்தாள்
ஆரிவள் என்று
அயோத்தியே
ஐயப்படுமளவுக்கு
அரைக்கிழவிபோல
உருமாறி-
தெரிந்தாள்..

வலியச் சென்று
பேச
நாணம் தடுத்தது
வழிமறித்து
நின்று
அவனைத் தழுவி
வரவேற்க
வழிவழியாக வந்த
வரன்முறை -
தடுத்தது
கண்குளிர அவனைக்
காண
கர்வம் -
தடுத்தது
போ..
போய் பேசு..
என்று புலம்பும்
மனசை
பொய்க்கோபம் -
தடுத்தது
கண்டுகொள்ளாமல்
போகும் அவனைக்
காணமுடியாதவாறு
கண்ணீர் -
தடுத்தது

பரிவாரங்கள்
புடைசூழ
அரண்மனை புகுந்த
அண்ணன் தம்பியோடு
பதுங்கியவாறு
நுழைந்தது
பழையபடி -
விதி...!

- ஊர்மிளை வருவாள்

• கவிஜி

தி க்யூரியஸ் கேஸ் ஆஃப் பென்ஜமின் பட்டன்

மிகப் பெரிய முகமூடிக்குப் பின் மிகச் சிறிய குழந்தை மனம் இருக்கலாம். மிகச் சிறிய குழந்தை முகத்துக்கு பின் மிகப் பெரிய கதை இருக்கலாம். இந்த மனிதர்கள் விநோதமானவர்கள். அவர்களின் போக்கை யாருமே கணிக்க முடியாது.

நூறு வயதில் பிறந்து... கொஞ்சம் கொஞ்சமாக வயது குறைந்துகொண்டு வந்தால் எப்படி இருக்கும் என்று ஒருநாள் தோன்றியது. பின் தோழர் ஒருவர் மூலம் அப்படி ஒரு படமே இருக்கிறது என்று தெரிய வந்தது. உடனே பார்த்தேன்... அதுதான்... இந்தப் படம்.

ஒரு குழந்தை பிறக்கிறது. ஆனால் அது வயதான தோற்றத்தில் இருக்கிறது. சுருக்கங்களால் அதன் காலத்தின் இறுதியில் தன் உடலைக் கொண்டிருக்கிறது. அதன் அம்மா அந்தப் பிரசவத்தில் இறந்துவிட... தன் ஆசை மனைவியைக் கொன்ற இந்தச் சாத்தான் குழந்தை வேண்டவே வேண்டாம் என்று கொன்றுவிட தீர்மானித்து.. ஒருவழியாக வேறு வழியில்லாமல் ஒரு வீட்டின் வாசலில் போட்டுவிட்டு ஓடிவிடுகிறான் அதன் அப்பா. பின் அந்த வீட்டில் அந்த வீட்டுக் குழந்தையாக வளர்கிறான் அந்தக் குழந்தை "பெஞ்சமின்" என்ற பெயரோடு.

கிழடு தட்டிப்போன உருவத்தில் சிறுவனாகச் சுற்றுவதில் தட்டுத் தடுமாறி ஆரம்பிக்கிறது பெஞ்சமின் உலகத்தின் கதை.

ஆர்ப்பாட்டம் இல்லாத அதே சமயம் அலுப்பும் இல்லாத நகர்தல். வயது ஆக ஆக அவனின் உடல் பின்னோக்கி (ரிவர்சில்) குழந்தையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும். அதாவது நம் குழந்தைத் தோற்றம் மெல்ல மெல்ல பால்யமாகி பதின் பருவத்து இளமையாகி கலக்கல் கல்லூரி மாணவனாகி நடுநிலைக்குள் வந்து சொட்டை ஆகி தொப்பை போட்டு முகம் சுருக்கம் விழுந்து தள்ளாடி தடி ஊன்றிச் சாவது அவனுக்கு ரிவர்சில் நடக்கும்.

இதற்கிடையில் பக்கத்து வீட்டு "டெய்சி" மீது காதல். அவளுக்கும் கிழத் தோற்றத்தில் இருக்கும் 16 வயது பெஞ்சமின் மீது காதல் துளிர்க்கிறது. காதல் என்று சொல்ல முடியாத ஒரு வட்டம் அது. அது நகர்ந்து நகர்ந்து ஒரு புள்ளியை அடைவதுதான் விதி. காதலின் விதியை யார் தீர்மானித்தாலும் அது பெரும்பாலும் எதிர் வினையையே தந்துவிடுகிறது.

15 வயதில் 17 வயதில் அவனின் கிழத்தோற்றம் கொஞ்சம் மாறுபட்டு ஒரு 50 வயது ஆளின் தோற்றத்துக்கு வருகிறான். கப்பலில் வேலை கிடைத்துச் செல்கிறான். கப்பல் கேப்டன் அவனுக்கு நண்பனாகிறான். அவன் ஒரு ஆர்டிஸ்டாக வேண்டும் என்று கனவு கண்டவன். ஆனால் வாழ்க்கை திசை மாற்றி ஒரு மாலுமியாகி விட்டிருக்கிறான். ஆனாலும் ரசனை மிக்க அவன் பெஞ்சமினுக்குப் பெண்களின் உலகத்தைத் திறந்துவிடுகிறான். முதன்முதலாகப் பெண்களின் ஸ்பரிசத்தில் திளைக்கிறான் கிழத் தோற்ற பெஞ்சமின்.

ஒரு கட்டத்தில் நீச்சல் வீராங்கனை ஆக வேண்டும் என்று ஆசைப்படும் ஒரு பெண்ணின் உறவு பெஞ்சமினுக்குக் கிடைக்கிறது. அவள் மீது காதல் கொள்கிறான் பெஞ்சமின். தினமும் இரவில் சந்தித்துக்கொள்கிறார்கள். தேநீரில் ஆரம்பிக்கும் தவிப்பின் சுவை மெல்ல துவர்ப்பாகி பின் இனிக்கத் துவங்குகிறது. தோற்றங்களைத் தாண்டி உள்ளுணர்வுக்கு அலை பாயும் மனதோடு ஆங்காங்கே இருக்கும் மனிதத் தவிப்புகளை இந்தப் பெண் கதாபாத்திரத்தின் மூலமாக உணர முடிகிறது. அதுவரை டெய்சிக்குத் தவறாமல் கடிதம் எழுதி வந்தவன் அதன் பிறகு நிறுத்திக்கொள்கிறான்.

பின் ஒருநாளில் அவள் காணாமல் போய்விடுகிறாள். அவள் தன்னை ஒரு நீச்சல்காரியாக்க வேண்டும் என்பதில் எங்கோ தவித்துக்கொண்டே இருப்பவள். ஆசைகளின் நீட்சியை நாம் கண்டுணரும் முன்னே அது மீண்டும் நீண்டுவிடுகிறது. புத்தனும் சித்தார்த்தனும் நேருக்கு நேர் சந்தித்தது கிடையாது என்ற உண்மையை யசோதரை எப்போதுமே யாரிடமும் பகிராத துயரம் போல... அது ஒரு வகை கசப்பின் சுவையோடு அரூபக் கனவுக்குள் தன்னை மீட்டெடுத்துக் கொண்டேயிருக்கிறது.

இப்போது அவனின் தோற்றம் ஒரு 40 வயதுக்காரனாகி விடுகிறது.

உலகப் போரைத் தொட்டுச் செல்லும் திரைக்கதையில் பெஞ்சமின் மீண்டும் தன் தாயிடமே வந்து சேர்கிறான். ஒரு கட்டத்தில் தாயும் இறந்துபோக டெய்சியுடன் தனி வீட்டில் வாழத் துவங்குகிறான். காதலும் கலவியுமே தினம் உணவாகிப் போகிறது. அவர்களின் ஜோடிப் பொருத்தத்தால் டெய்சி ஒரு மாதிரி கவலை கொள்கிறாள். ஆம். அவளை விட அவன் 6 வயது மூத்தவனாக இருந்தாலும் அவனுக்கிருக்கும் வினோதமான இந்தத் தோற்றப் பிரச்சினையால் வயது ஆக ஆக அவனின் தோற்றம்.. இன்னும் இளமையாகிக்கொண்டிருக்க அவளின் மூப்புத்தோற்றம் அவனோடு இணையாக இருக்க தடுமாறுகிறது. குழந்தையும் பிறக்கிறது. அந்தக் குழந்தைக்குத் தான் ஒரு நல்ல அப்பாவாக இருக்க முடியாது.. இயலாது. அதன் பொம்மையைப் போல நான் மாறி விடுவேன் என்று வருத்தம் கொள்ளும் பெஞ்சமின் ஒருநாள் இரவு அவள் விழித்துக்கொண்டிருக்கும் போதே வீட்டைவிட்டு வெளியேறிவிடுகிறான்.

புத்தனின் வாழ்வுதனை எது கவ்வினாலும் ஆசை கவ்வுவதில்லை என்பதைச் சம்பந்தமே இல்லாமல் யோசிக்க வைக்கிறது.... விநோதங்களின் வாழ்வியல் முயற்சி.

தெரிந்தே அறுபடும் பிரிவுகளில் பெரும்பாலும் கண்ணீருக்கு வேலை இல்லை. அது ஆழ்ந்த கனத்தைக் கிணற்றுக்குள் விழும் கல்லைப் போல இழுத்துக்கொண்டே இருக்கிறது.

காலங்கள் ஓடிவிடுகின்றன.

அந்தக் குழந்தைக்கு 13 வயதாகும் போது 17 வயது தோற்றத்துடன் மீண்டும் வருகிறான் பெஞ்சமின். வேறு ஒருவரைக் கல்யாணம் செய்து கொண்ட டெய்சி என்ன செய்வதென்றே தெரியாமல் மனதுக்குள் தேம்புகிறாள். மூளைக்குள் நினைவலைகள் பெஞ்சமினை மறக்க முடியாத வலிகள். 50ஐ தாண்டிய அவள் 17 வயது பையன் தோற்றத்தில் இருக்கும் பெஞ்சமினை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கும் இடத்தில் அவர்களின் அப்போதைய தடுமாற்றம் கலவியில் முடிகிறது. அது தேவையுமாய் இருக்கிறது. வாழ்வின் எல்லாத் தருணங்களிலும் அப்போதைக்கான தீர்வு கலவியில் இருப்பதை நாமும் அறிந்தே இருக்கிறோம்.

பின் மீண்டும் வேகமாய்க் காலங்கள் ஓட பெஞ்சமின் 7 வயது சிறுவனாக மாறிவிடுகிறான். ஆனால் எல்லாமே மறந்துபோனவனாக அவன் பெயர் மட்டும் மிஞ்சி நிற்க அவனை ஓர் அன்னையைப் போல பார்க்கத் துவங்குகிறாள் டெய்சி. அந்தக் காட்சிகள் ஒவ்வொன்றும் விசனக் ஹைக்கூக்கள். நமக்குத் தெரியும். இவர்கள் இருவருமே ஒரு காலத்தில் காதலர்கள் என்றும் கணவன் மனைவியாக வாழ்ந்தவர்கள் என்றும் அவர்களுக்கு ஒரு குழந்தையே இருக்கிறதென்றும் நமக்குத் தெரியும். அதனால்தான் அது நமக்குத் துயர வடுவைக் கொடுக்கிறது.

டெய்சி, பாடம் சொல்லித் தருகிறாள்.. கதைகள் கூறுகிறாள். நடை பயிலும் குழந்தையாகி பின் கைக் குழந்தையாகி பின் ஒருநாளில் மரித்துப் போகிறான் பெஞ்சமின். அணைத்தபடியே அந்த மரணத்தை அமைதியாக உள்வாங்குகிறாள் டெய்சி.

இந்தக் கதை முழுக்க மரணப் படுக்கையில் இருக்கும் டெய்சி பெஞ்சமின் எழுதிய நாட்குறிப்பைத் தன் மகளிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்டுப் பழைய நினைவுகளில் மூழ்குவதாகவே நமக்குக் காட்டப்படுகிறது.

இந்தப் படம்... யாருமற்ற காட்டுக்குள் யாருமே அறியாத ஒரு நீரோடையில் மெல்ல மெல்ல நீச்சல் மறக்கும் ஒரு மீனின் கற்பனையை ஒத்தது. இந்த வாழ்வின் வினோதத் தன்மையை ஒவ்வொரு பார்வைக்கும் ஒவ்வொரு அர்த்தத்தை மானுட மனதின் வீரியங்களை மிகத் துல்லியமாக நமக்கு அள்ளித் தெளித்துக்கொண்டே செல்கிறது.

ஆம். படத்தில் சொல்வது போலவே....

சிலர் ஆற்றின் கரையில் அமர்ந்து கொண்டிருக்கவே பிறக்கிறார்கள். சிலர் மின்னல் தாக்கிச் சரியவே பிறக்கிறார்கள். சிலர் இசை கேட்டு ரசிக்கவே பிறக்கிறார்கள். சிலர் ஓவியம் வரையவே பிறக்கிறார்கள். சிலர் நீந்தவே பிறக்கிறார்கள். சிலர் அம்மாக்கள் ஆகவே பிறக்கிறார்கள். சிலர் பட்டன் சேகரிக்கவே பிறக்கிறார்கள். சிலர் ஷேக்ஸ்பியரைத் தெரிந்து கொள்ளவே பிறக்கிறார்கள். சிலர் ஆடுவதற்காகவே பிறக்கிறார்கள்.

ஆனால் யாவருமே மரித்துப் போகவே பிறக்கிறார்கள்.

திரைப்படம் : THE CURIOUS CASE OF BENJAMIN BUTTON

இயக்குநர் : DAVID FINCHER

மொழி : ஆங்கிலம்

ஆண்டு : 2008

● ராம் பெரியசாமி

மாய வித்தைக்காரன்

கிம் கி டக்

நாம் வாழும் உலகம் ஒரு உண்மை அல்லது கனவு என்பதைச் சொல்வது மிகவும் கடினம்

- கிம் கி டக்

தென்கொரியாவைச் சேர்ந்த இயக்குனர் கிம் கி டக் எழுத்தாளர் தயாரிப்பாளர் எனப் பன்முகங்களை உள்ளடக்கியவர்....

திரைப்படங்கள் பொதுவாக மனிதனை இயக்கும் சக்தி உடையவை... மனித மனங்களில் தாழிடப்பட்டு இருக்கும் உணர்வுகளைத் தட்டி வெளிக்கொணரச் செய்து பார்வையாளனுக்கு ஓவியங்களாகக் காட்சிகளை விவரிப்பதற்கு ஒரு சில இயக்குனர்களால்தான் முடிகிறது.

அந்த வகையில் மாய வித்தைக்காரன்தான் கிம் கி டக்...

அவரால் படைக்கப்பட்டிருக்கும் கதாபாத்திரங்கள் மௌனமானவை ஆழமானவை... ஒரு நதியின் மௌனத்தைக் கதாபாத்திரங்களில் உருவேற்றி எந்தவிதச் சலசலப்பும் இன்றி யாரோ ஒருவரால் கல் எறியப்பட வைத்து வளையங்களை உருவாக்கி எண்ணங்களை அதிஅற்புதமாய் வெளிப்படுத்தக்கூடியவை...

ஏன் உங்கள் படைப்புகளில் கதாபாத்திரங்கள் பேசவில்லை என்று அவரிடம் கேட்டால் “பேசுகின்ற எல்லாச் சொற்களுக்கும் உயிர்ப்பை வெளிப்படுத்த முடிவதில்லை... மௌனம்தான் மிகப்பெரிய ஆயுதம் சக்தியும் கூட...” என்கிறார் கிம் கி டக்.

உலகின் மிகப்பெரிய கடவுள் யார் என்றால் சூழ்நிலைக் கைதியைச் சூழ்நிலையில் இருந்து பிரித்தெடுத்து ஒரு பறவை போல் பறக்கச் செய்பவன் என்கிறார்.

அன்பைச் செலுத்துவதற்கு வயதில்லை மற்றும் பாகுபாடு இல்லை. நாம்தான் நிறைய பிரித்து வைத்திருக்கிறோம். நட்புக்கு என ஒரு சொல்.. காதலுக்கு என ஒரு சொல்.. உறவுகளுக்கு என ஒரு சொல்.

கிம் கி டக்கிடம் ஒரே சொல்தான்.. அன்பு. அதைக் கதாபாத்திரங்களில் ஒரு கோப்பையைப் போல வடிவமைக்கிறார். அந்தக் கோப்பை அன்பை ஊற்றி மிடறு மிடறாக நம்மைப் பருக வைக்கிறார்.

ஆயிரம் வார்த்தைகளால் பேசப்பட வேண்டிய ஒரு காட்சியை ஒற்றைப் பார்வையால் நிலைநிறுத்தி மௌனத்தைப் பிளிறச்செய்து பார்வையாளனைப் பதில் சொல்ல வைக்கும் வித்தை எல்லாம் அவரால் நிகழ்ந்த ஒன்று...

இசைகளால் காட்சிகளை அவர் நிரப்புவது இல்லை. இறகு பூமியில் விழும் அதிர்வை நேரடியாக இசையாக்கி நம் காதில் விழவைத்து ரீங்காரம் இடுகிறார்.

மனிதனுக்குள் ஒளிந்திருக்கும் உள்சார்ந்த மிருகத்தனங்களைக் காட்சிகளில் பார்க்கின்றபோது நமக்குள்ளிருக்கும் மிருகங்களை ஒளித்து உச் கொட்டிக்கொண்டு இருப்போம். சிறுவயது என்பது நீரோட்டம்.

எங்கெல்லாம் பாதை கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஓடிக்கொண்டே இருக்கும் அவற்றை ஒருநிலைப்படுத்துவதற்கென விவரித்திருப்பார்... *Spring summer fall winter and spring* என்கிற திரைப்படத்தில். இயற்கையில் சென்று அமர்வது தியானம் அல்ல. நமக்குள் இருக்கும் காடுகளையும் மலைகளையும் கண்டறிந்து மிருகத்தை உள்ளடக்கி இயற்கையைக் கண்டறிவதே தியானம் என்கிறார். *amen* என்கிற திரைப்படத்தில் வாழ்வில் ஒவ்வொன்றையும் நாம் தொலைத்துவிட்டுக் கண்டுபிடிப்பதற்குத் தேடி அலைந்து கொண்டிருப்பதற்கான உணர்வின் பெருவெளியைக் காட்சிகளில் அமிழ்த்தியிருப்பார்.

ஒருயிர் வயிற்றில் முளைப்பதற்காக ஆகும் நேரமும் அதைக் கலைப்பதற்கு முடிவெடுக்க ஆகும் நேரமும் உள்ள இடைவெளிதான் கிம் கி டக்கின் திரைக்கதைகளில் பலம் பெரும்பாலும்.. தான் வளர்த்த பெண்ணைத் தானே காதல் கொண்டு திருமணம் புரிய ஆசைப்படுகிறேன் எனக் கூறும் கிழவனை எங்கு பார்த்திருப்பீர்கள்..

இவரிடம் அப்படி ஒரு கிழவன் உண்டு. *The bow...* அப்படிப்பட்ட கிழவன் தான் வளர்த்த பெண்ணைத் தானே கல்யாணமும் செய்கிறான். நீங்கள் காரி உமிழும் முன்

உங்கள் கண்களிலிருந்து உமிழ்நீரை வர வைத்துவிடுவார் கிம் கி டக்...

தூண்டிலில் புழுக்கள் மட்டுமல்ல.. ஒவ்வொரு வக்கிர மனிதனின் தூண்டிலிலும் புழுவாய் ஒரு பெண் உடல் குத்தப்பட்டு இரைக்காகத் தொங்கி இருக்கும் என்பதை *the isle* திரைப்படத்தில் உணர்த்தியிருப்பார்.

காதல் என்பது கழிவு காமத்தின் நீட்சிகளில் இயங்கியிருக்கும் மனிதவெளிக்குள் காதலென்பது கழிவிரக்கம் என்பதையும் என்ன நேர்மையாக அன்பு செலுத்தப்பட்டிருந்தாலும் தனக்குத் தேவையான நேரத்தில் தனக்குத் தேவையானதை மனிதன் அசாதாரணமாகத் தவறான வழியில் கூட எடுத்துக்கொள்வான் என்பதையும் *3 iron* திரைப்படத்தில் சொல்லி இருப்பார்.

இவ்வுலகில் உணவே அழிந்துவிட்டது, மனிதன் தின்பதற்கு எல்லாம் கற்கள் ஆகிவிட்டன, மிச்சமிருப்பது மனிதர்கள் மட்டும்தான் என்ற சூழல் வரும்போது மனிதன் தன் பசிக்காக இன்னொரு மனிதனை இரையாகப் பார்ப்பான் என்பதை *human space time and human* என்ற திரைப்படத்தில் மிக நேர்த்தியாகச் சொல்லி இருப்பார்.

ரத்தமும் சதையும் தின்று குரூரங்களை ரசித்து அசுத்தங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவனிடம் முன்வந்து நான்தான் உன்னைப் பெற்றதாய் என்கிறார். அதை நிரூபிக்கப் போராடும் போராட்டத்தின் உச்சம் உங்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. ஆழ்ந்த உணர்வை, பெரும் புரிதலை நம்மிடம் கொடுத்துவிட்டுச் செல்லும் கடைசி காட்சி.. நம்மை அப்படியே உறையச் செய்கிறது *Pieta* எனும் திரைப்படத்தில்.

இப்படி ஒவ்வொரு திரைப்படத்திலும் கதாபாத்திரங்கள் பேசாமலும்.. உலக அளவில் பேசப்பட்டுக்கொண்டிருக்கும் அந்தத் திரைப்படம் கதாபாத்திரங்கள் வாயிலாக. *Time, breathe, dream, mobieuos, net crocodile, bad guy, wild animals, real fiction, address unknown, the coast guard, Samaritan girl, dissolve...* எனக் கிம் கி டக் இன் ஒவ்வொரு திரைக்கதையும் உங்கள் முதுகை உங்கள் முகத்திற்கு முன் நிறுத்தி உங்களை உங்களுக்கே ஆன அடையாளங்களோடு காண்பிப்பதை உணர்வீர்கள்.

முடுக்கிய ஆன்மாவுக்குள் இருண்ட இடத்தில் அதை ஆழமாக அடைந்து அனைவரும் சிந்திப்பதற்கான சாத்தான் வழியையும் கடவுளின் வழியையும் முகத்திரை கிழித்து எடுக்கப்படுகிற பக்கங்களில் குற்றமும் மன்னிப்புகளும் பாவங்களும் கருணைகளும் நம்முள் பயணமாக ஒரு புத்தகமாக அவர் விட்டுச்சென்ற கதைகள் கதாபாத்திரங்கள் இனி எந்த ஒரு கலைஞனும் தொடமுடியாத உச்சம்.

அவரின் ஆன்மா கதைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறது அவரின் உடலில் அல்ல.

"எனது பார்வையாளர்களுடன் ஒரு நடுத்தர மைதானத்தைக் கண்டுபிடிக்கும் திறன் எனக்கு இல்லை. இது எனக்கு நன்றாகவே தெரியும்" என்கிறார் கிம் கி டக்...

பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

ஒரு மாலைப் பொழுதில்
எனக்குள்ளிருந்து வெளியே வந்த அவன்
என்ன செய்துகொண்டிருக்கிறாய்? என்றான்...

காற்று வாங்கிக் கொண்டிருக்கிறேன் என்றேன்...

காற்றை உன்னால் வாங்க முடியாது
காற்றுதான் உன்னை வாங்கிக் கொண்டிருக்கிறது...

வாழ்க்கையின் வரவு செலவுகளை
உனது சுவாசத்தின் வழியே
சரிபார்த்துக் கொண்டிருக்கிறது...

காற்று எப்போதும்
உன் கையில் சிக்குவதில்லை என்றான்...

ஒரு பலூனில் அடைத்து
கைக்குள் கைதியாக்கிவிட முடியாதா? என்றேன்...

வெடித்து விடுதலையடைவது
எப்படி என்று காற்றுக்குத் தெரியும்

கண்ணுக்குத் தெரியாமல் இருந்தாலும்
காற்றுக்கு எல்லாம் தெரியும் என்றான்...

கற்றுத் தெரிந்ததை விடவா காற்றுக்குத்
தெரிந்துவிடப்போகிறது? என்றேன்

உனது கடைசி நொடி
காற்றுக்கு மட்டும்தான் தெரியும் என்றான்...

எனது கடைசி மூச்சு
கடவுளுக்கு மட்டும்தான் தெரியும்
காற்றுக்கு அல்ல என்றேன்.

கடவுளை நம்பாத நாத்திகன் கூட
காற்று இல்லாமல் வாழ முடியாது என்பதை
நம்பித்தான் ஆக வேண்டும்...

ஒவ்வொரு நாளும்
உறங்கி விழித்தவுடன் – நீ
உயிருடன் இருக்கிறாய் என்று
உனக்கு உணர்த்துவதே காற்றுதான்...

நீ மண்ணை விட்டுப் பிரிவதே
காற்று உன்னை விட்டுப் பிரிவதுதான்...

காற்றின் சக்தியை நீ அறிந்திருக்கவில்லை
மூழ்கிக் கொண்டிருக்கும் மீனுக்கும்
மூடிக் கொண்டிருக்கும் முட்டைக்குள்ளும்
உயிர் வாழ ஊடுருவிச் செல்லும்
காற்றைக் கண்டு வியக்கிறேன் நான்...

காற்று வருவதும் போவதிலும்தான்
வாழ்கையே இருக்கிறது...
வருவது என்பது உனது பிறப்பு
போவது என்பது உனது இறப்பு..

– அவன் இன்னும் சொல்வான்... ■

● தமிழ்ச்செல்வன்
● ஓவியங்கள் - அழ.ரஜினிகாந்தன்

பரிசுத்தம்

அதிகாலையில் கண்ணனின் ஏதோ ஒரு கனவு கலைந்தது. அவன் அம்மாவின் குரல் கேட்டு கண்விழித்தான்.

''எழுந்துக்கோ கண்ணா, அப்பா உனக்குப் புது சொக்கா, புது டவுசர் வாங்கித் தர்றேன்னு சொன்னாரு.''

"புதுச்சொக்கா..." என்ற வார்த்தைதான் அவனைத் தூக்கத்தில் இருந்து விடுவித்தது. மிகுந்த சந்தோஷமானான். கண்ணன், பத்து வயதுச் சிறுவன். நான்காம் வகுப்பு மாணவன். நேற்று இரவு புதுச்சட்டை கேட்டு அழுது, அடம்பிடித்து, தன் அப்பாவிடம் அடிவாங்கி அழுதுகொண்டே தூங்கினான்.

''பல்லு விளக்கிட்டு வாடா, வெளிய போயி ஓட்டல்ல சாப்ட்டுக்கலாம், அப்படியே மணித்தாத்தாகிட்ட புது சொக்கா டவுசர் வாங்கிக்கலாம்'' என்றார் அப்பா.

கண்ணன், காலைக்கடனிற்காக வீட்டின் பின்பக்கம் சென்றான். கண்ணனின் அப்பா குமார், ஒரு துப்புரவுத் தொழிலாளி. ஒரு ஒப்பந்தக்காரரிடம் தினக்கூலிக்குப் பணிசெய்பவர். அவர்களைப் பொறுத்தவரை, புதுச்சட்டை என்பது நிஜமான புதிய சட்டை அல்ல. ஏற்கனவே ஒருவர் உடுத்தி கிழிசல் இல்லாமல் அல்லது கிழிசல் தெரியாமல் தைக்கப்பட்டு, மணித்தாத்தா என்பவர் நடைபாதையில் குவித்துப்போட்டு விற்கும் துணிகள்தான். அந்தக் குடிசைப்பகுதி எங்கும் வறுமைதான் நிறைந்து இருந்தது. அவர்களின் வாழ்க்கைத்தரம் ஒருவகையில், நிரபராதிகளுக்குக் கிடைக்கும் அதிகபட்ச தண்டனை போன்றது. கண்ணனும் குமாரும் வெளியே நடந்துசெல்லத் தொடங்கினார்கள். இருவரும் செருப்பு அணியவில்லை. குமார் மிக நீளமான மூன்று குச்சிகளை வைத்திருந்தார்.

''அப்பா அடிச்சுட்டேன்னு கோபமா இருக்கியாடா?''

''இல்லப்பா.''

''சொக்கா கிழிஞ்சுடுச்சுனு வேற சொக்கா கேட்டா, துட்டு குடுக்காம நல்லா குடிச்சுட்டு வந்து போதைல அடிக்கறவன்தானே நம்ம அப்பான்னு வருத்தமா இருக்காடா?''

''இல்லப்பா.''

''நான் எங்க அப்பாகிட்ட அடி வாங்கினதே இல்லடா, அவரும் அவங்க அப்பாகிட்ட அடி வாங்கியிருக்க மாட்டாரு. ஏன் தெரியுமா? எங்க அப்பா பொறக்கறதுக்கு ரெண்டு மாசம் முன்னாடியே அவங்க அப்பா செத்துட்டாராம். நான் பொறந்து ஒரு வயசு ஆகறதுக்கு முன்னாடி எங்க அப்பா செத்துட்டாரு. எனக்கும் இன்னும்

எத்தனை நாள்னு எல்லாம் சொல்லமுடியாது கண்ணா. நாங்க பாக்கற தொழில் அப்படி. நான் ஒன்னும் சந்தோஷத்துக்காகக் குடிக்கறது இல்லடா. குடிக்கலேன்னா எந்த மனுஷனும் இந்தத் தொழில் பண்ணமுடியாது.''

ஒரு ஓட்டல் வந்தது.

"குமாரு, வாட்ச்மேன் ஒருத்தர் உன்னைத் தேடினு இருந்தாரு. பாத்தியா?''

"அவரு கம்பெனிக்குத்தான் போறேன் மாஸ்டர்.''

"நம்ம பையனா? படிக்கறானா?''

"நாலாவது படிக்கிறான் மாஸ்டர், ரொம்ப நல்லா படிப்பான். இங்கிலிஷ்லாம் நல்லா பேசுவான். ஒன்னு ரெண்டு மூணு எல்லாம் இங்கிலீஷ்லியே நூறு வரைக்கும் எண்ணுவான். நான் பையன வேறமாதிரி வளக்குறேன் மாஸ்டர். இன்னிக்கு ஸ்கூல் லீவு. அதான் அப்படியே கூட்டினு போறேன். இட்லி இருக்கா மாஸ்டர்?''

"கண்ணா, கையக்கழுவினு உள்ள வாடா.''

இரண்டு மேஜைகள் இருந்தன. மொத்தம் எட்டுவாடிக்கையாளர்கள்சாப்பிடக்கூடியகடை. மூன்று பேர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

"குமாரு, பார்சல் கட்டித் தரேன்பா. வீட்டுக்கு எடுத்துனு போயி சாப்பிடு. உள்ள கஸ்டமர் சாப்பிட்டுனு இருக்காங்கல்ல.''

"சரிதான் மாஸ்டர், அப்பறம் வரேன்.'' இருவரும் வெளியேறினார்கள்.

"பாத்தியா கண்ணா, நான் கடை உள்ள உக்காந்து சாப்பிடக்கூடாதுன்னு எப்படி தொரத்தறாரு பாரு.''

"எதுக்குப்பா தொரத்தறாங்க.''

"நான் பண்ற தொழில் அப்படி. நாலு தெரு தள்ளிப்போனா வேற கடை வரும். அந்தக் கடைக்காரருக்கு என்னை அடையாளம் தெரியாது. நாம உள்ள உக்காந்தே சாப்ட்டுக்கலாம்.''

அவர் சொன்ன கடைக்குச் சென்று உட்கார்ந்தார்கள். குமார் அந்தக் குச்சிகளை முன்பே வெளியில் வைத்துவிட்டார். கண்ணன் இட்லி சாப்பிட்டான்.

"நீங்க சாப்பிடலியாப்பா?''

"வேலை முடிச்சுட்டு, குளிச்சுட்டு சாப்பிடணும். இப்போ சாப்ட்டா வேலை செய்யும்போது வாந்தி வந்துடும்.''

கண்ணன், சாப்பிட்டு முடித்துக் கை கழுவினான். குமார், தோளில் போட்டிருந்த பழைய சிவப்புநிறத் துண்டைக் கை துடைக்கக் கொடுத்தார்.

"கண்ணா, நீ பெருசானதும் என்னவா ஆகணும்னு ஆசை வச்சிருக்கியாடா?''

"டாக்டர் ஆகணும்னு ஆசைப்பா''

"நல்லது கண்ணா, நம்பிக்கையோட முயற்சி பண்ணு, டாக்டர் ஆகமுடியலனா ட்ரைவர் ஆயுடு. இல்லேன்னா ஏதாவது கடை வை. முடியலையா மூட்டை தூக்கிப் பொழச்சுக்கோ, தப்பே இல்ல. அந்த வேலையும் முடியலனா, பிச்சை எடுக்கணும்னு விதி இருந்தா அதைக்கூட பண்ணு. ஆனா அப்பா பண்ற தொழிலுக்கு மட்டும் வந்துடாதடா. எங்க தாத்தா பண்ணாரு, அப்பா பண்ணாருன்னு என்னை பண்ணச் சொன்னாங்க, எனக்கு அப்போ அசிங்கமாத் தெரியல. சின்ன வயசுலியே வந்துட்டேன், நான் வேற வேலைக்கும் போகமுடியல. எல்லாரும் நாலு அடி தள்ளி நின்னு என்கூட பேசறதையே அசிங்கம்னு நினைக்கிறாங்க, யார் வேற வேலை கொடுப்பாங்க சொல்லு.''

கண்ணன், "சரிப்பா. நான் நிச்சயம் வேற வேலைக்குப் போயிடுவேன்ப்பா,'' என்றான்.

"உலகத்திலேயே கஷ்டமான வேலை ராக்கெட் ஓட்றது, பிளேன் ஓட்றது இல்லடா. துப்பாக்கி எடுத்துனு மிலிட்டரில சண்டை போடறது இல்லடா, கஷ்டமான வேலைன்னா உங்க அப்பா செய்யற வேலைதான். அவனுங்ககூட செப்டிக்டேங்க்லீக்ஆனா, மூக்கை மூடிட்டு தூரமாப் போயிடுவாங்க. க்ளவுஸ், முகமூடி இல்லாம அந்தப் பெரிய மனுஷங்கள்ல ஒருத்தனை இறங்கச் சொல்லேன் பாப்போம். முதலமைச்சர் ஆகப்போறேன்னு சொல்றவங்க, கலெக்டர் ஆவேன்னு சொல்றவங்க, இவங்க ஒருநாள் வெறும் உடம்போட செப்டிக் டேங்க் உள்ள இறங்கி அடைப்பு எடுத்தெ ஆகணும்னு சட்டம் போட்டாங்கன்னு வையி, அப்போதான் என்னமாதிரி இந்தத் தொழில் பாக்கறவங்க எல்லாருக்கும் ஒரு விடிவுகாலம் வரும்.''

"இதுக்கு மிஷின் எல்லாம் கண்டுபுடிக்கலியாப்பா?''

"இருக்குனுதான் சொல்றாங்க, ஆனா நடைமுறைல நாங்க உள்ள உழுந்து உயிரை விட்டுட்டுதானே இருக்கோம்.'' குமார், தான் உணர்ச்சிவசப்படுவதை அறிந்து தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டார்.

“நான் எதுக்கு உன்னைக் கூட்டிட்டு வந்து இதை எல்லாம் சொல்றேன் தெரியுமா? நான் எவ்வளவு கஷ்டப்பட்டு பணம் சம்பாதிக்கிறேன், எதுக்காகக் குடிக்கறேன், மத்த ஜனங்க நம்மள எப்படி நடத்தறாங்க, இதை எல்லாம் நீ புரிஞ்சிக்கணும்னுதான், கண்ணா. நீ சின்னப் பையன், உனக்குப் புரியுமா தெரியல?’’

“எனக்குப் புரியுதுப்பா.’’

குமார் வேலை செய்யவேண்டிய பிளாஸ்டிக் கம்பெனிக்கு வந்து சேர்ந்தார்கள். செப்டிக் டேங்க் நிறைந்து சாலை எங்கும் அசுத்த நீர் ஓடிக்கொண்டு இருந்தது. துர்நாற்றம் வீசிக்கொண்டு இருந்தது. அதைச் சுற்றி நான்குபேர் மூக்கைப் பொத்திக்கொண்டு நின்றிருந்தார்கள்.

“வா குமாரு, உனக்கோசரம்தான் எல்லாரும் நிக்கறோம். சட்டுபுட்டுன்னு வேலைய ஆரம்பி.’’

குமார், தான் கொண்டுவந்த மூன்று குச்சிகளை ஒன்றோடு ஒன்று நீளமாக இணைத்து உள்ளே செலுத்திக் குத்திவிட்டார். நுரை எழுந்து வந்தது. அடைப்பு நீங்கவில்லை.

“பத்தைய உட்டு குத்தறது வேலைக்கு ஆகல சார், உள்ள இறங்கித்தான் செய்யணும்.’’

“சீக்கிரம் நல்லபடியா செஞ்சுக் கொடு குமாரு, சுத்தி எத்தனை குடும்பம் அவஸ்தை படறாங்க பாரு. எவ்ளோ துட்டு வேணுமோ வேலைய முடிச்சுட்டுக் கேட்டு வாங்கிக்க.’’

“நான் என்ன சார் அதிகமாவா கேக்கப்போறேன், ஒரு ஐநூறு கொடு சார், பையனுக்கு சொக்கா டவுசர் வாங்கறதுக்கு ஆகும். முதல்ல ஒரு கோட்டார்பாட்டில் வாங்கிக் கொடு சார், குடிச்சாதான் உள்ளே இறங்கி இந்த நாத்தத்துல வேலை செய்ய முடியும்.’’

“காலங்காத்தால எப்படி குமாரு பாட்டில் வாங்க முடியும், இன்னிக்குக் கிடைக்காதே, காந்தி ஜெயந்தி வேற, கடை தொறக்க மாட்டாங்கப்பா.’’

“இப்போ என்ன பண்றது சார்?’’

“பாத்து செய்யி குமாரு...’’

“சரி சார், வாய் ஃபுல்லா பாக்கு போட்டுனு உள்ளே இறங்கறேன். பெரிய கயிறு இருந்தா கொடு சார்’’ என்றபடி, அங்கேயே ஆடை களைந்தார். தன் லுங்கியைப் பல்லில் கடித்தபடி சிவப்புத்துண்டைக் கோமணமாக்கிக் கொண்டார். குமார், இடுப்பில் கயிறு கட்டிக்கொண்டு மறுமுனையை ஒரு மரத்தில் கட்டிவிட்டார். கையில் சின்னக் குச்சியை எடுத்துக்கொண்டார்.

“உள்ளே போனதும் நூறு வரைக்கும் எண்ணுங்க. அப்பயும் நான் வெளிய வரலன்னா ரெண்டு மூணுபேர் சேர்ந்து கயிறைப் புடிச்சு தூக்கிடுங்க சார்.’’ உள்ளே இறங்கினார். கண்ணன் அதைப் பார்த்துக்கொண்டு மூச்சை அடக்கியபடி மனதிற்குள் ‘ஒன், ட்டு, த்ரீ’ சொல்லிக்கொண்டு இருந்தான். ஹண்ட்ரட் தாண்டியதும் மீண்டும் ஹண்ட்ரட் வரை சொன்னான். நடுநடுவில் மூச்சடக்க முடியாமல் மூச்சு விட்டுக்கொண்டான். குமார் வெளியே வரவில்லை.

“அப்பா, வெளிய வாங்கப்பா’’ என்று கண்ணன் கத்தினான்.

“என்னாச்சுன்னு பாருப்பா, ரொம்ப நேரமா ஆளைக் காணோம், தூக்குப்பா தூக்கு.’’

இரண்டு பேர் சேர்ந்து கயிறை இழுக்க கயிறு அறுந்தது. கயிறின் வெறும் நுனிமட்டும் மேலே வந்தது.

“அய்யோ, என்னப்பா இது, யாராச்சும் இறங்கிப் பாருங்க’’

“வேணாம் வேணாம், ஃபயர் இன்ஜின் கூப்டு, போலீசுக்கு போன் பண்ணுங்க’’

“தம்பி, நீ சீக்கிரம் ஓடிப்போய் உங்க அம்மாகிட்ட விஷயத்தைச் சொல்லி உடனே கூப்டுக்கிட்டு வாடா.’’

கண்ணன், வேகமாக வீடு நோக்கி ஓடினான்.

என்ன சொல்வது, எப்படிச் சொல்வது என்று தெரியாமல் தன் வீட்டுவாசலில் நின்று, “அப்பா... அப்பா...’’ என்று கத்தி அழத் தொடங்கினான். ■

கடைசி நாள் : 15-01-2021